# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை: 8 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 30 சனிக்கிழமை [15 - 08 - 1998] SANJEAVY- Regenerative Tamil Weekly சிகரம்: 11


## ஆறாயிரம் தொன் பொருள்களுடன்

# கடத்தப்பட்ட கப்பல் குண்டு வீசி அழிப்பு!

## முல்லைத்தீவு அருகே வைத்து

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 15

வடபகுதிக்கான ஆறாயிரம் தொன் பொருள்களுடன் வந்துகொண்டிருந்த சமயம் முல்லைத்தீவுக் கடற்கரையோரத்தை நோக்கிக் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் ''பிரின்ஸஸ் காஷ்'' கப்பலை ஸ்ரீலங்கா விமானப் படை போர் விமானங்கள் நேற்று மாலை குண்டு வீசித் தாக்கி அழித்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

''குட்வில் வைட்'' என்ற உள்நாட்டு நிறுவனம் ஒன்றால் கடந்த ஏப்ரலில் துபாயிலிருந்து தருவிக்கப்பட்ட இக்கப்பல் சுமார் ஒரு கோடி ரூபா செலவில் திருத்தம் செய்யப்பட்டது.

அதன் பின்னர் தனது கன்னிப் பயணமாக கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு பொருள்களை ஏற்றி வந்த சமயமே அதற்கு இந்தக் கதி நேர்ந்தது.

சுமார் ஆறாயிரத்து ஐந்நூறு தொன் பொருள்களை ஏற்றி வந்த இந்தக் கப்பலே அண்மைக் காலத்தில் பருத்தித்துறைக்கும் கொழும்புக்கும் இடையே சேவையில் ஈடுபட்ட கப்பல்களில் மிகப் பெரியதாகும்.

பருத்தித்துறையில் வழமையாகப் பொருள்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சிப்பந்திகள் 22 பேரும் மீட்கப்பட்டதாக புலிகள் அறிவிப்பு

கொழும்பு, ஒக. 15

தகர்க்கப்பட்ட 'பிரின்ஸஸ் காஷ்' கப்பலில் இருந்த கப்பல் கப்டனும், மாலுமிகளும் ஏனைய சிப்பந்திகளும் கங்களால் காப்பாற்றப்பட்டு, தற்போது தமது பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இவர்களைப் பாதுகாப்பாகவும் விரைவாகவும் விடுதலை செய்வதற்காக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடனும் தாங்கள் தொடர்பு கொண்டுள்ளதாகவும் 'புலிகளின் குரல்' வானொலி மூலம் புலிகள் நேற்றிரவு அறிவித்தனர்.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் பயணம் செய்துகொண்டிருந்த சரக்குக் கப்பல் ஒன்று நேற்று அதிகாலை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கைகளுக்குப் பொருள்கள் செல்வதைத் தடுக்கவே குண்டுவீச்சு

கொழும்பு, ஒக. 15

கடத்தப்பட்டதாகக் கூறப்படும் ''பிரின்ஸஸ் காஷ்'' கப்பலில் இருந்த பொருள்கள் விடுதலைப் புலிகளின் கைகளில் சிக்காமல் இருப்பதை உறுதிப் படுத்துவதற்காகவே அக்கப்பல் குண்டு வீசித் தாக்கியழிக்கப் பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன.

இது தொடர்பாக பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது;

இக் கப்பலை விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை முல்லைத்தீவுக்கு அருகே கடத்திச் சென்றனர். கடற்படையினர் இந்தக் கப்பலுடன் தொடர்பு கொண்டு, கடற்படையினரின் கட்டளை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுப்பிட்டியில் கிளைமோருக்கு சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், ஒக. 15

நீர்வேலி சிறுப்பிட்டி வீதியில் நேற்று நண்பகல் 12.15 மணிக்கு புலிகளின் கிளைமோர்கண்ணிவெடியில் படையினர் சென்ற டிராக்டர் ஒன்று சிக்கியதில் சிப்பாய் ஒருவர் பலியானார். மற்றும் இரு சிப்பாய்கள் காயமடைந்தனர்.

பலாலி இராணுவத் தலைமையகச் செய்திக் குறிப்பு ஒன்று இத்தகவலைத் தெரிவித்தது.

### துணுக்காயில் நேற்று

## எட்டுப் படையினரின் சடலங்கள் ஒப்படைப்பு

வவுனியா, ஒக. 15

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் கடந்த 12 ஆம் திகதி படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலின் போது விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட பத்துப் படையினரின் சடலங்களில் நல்ல நிலையில் இருந்த 8 சடலங்கள் நேற்று துணுக்காயில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டதாக புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 9 மணியளவில் துணுக்காய் கல்விளானில் உள்ள செஞ்சிலுவைச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### நண்டுவீசிய

## கிபிர் விமானம் மீது ஏவுகணைத் தாக்கு!

கொழும்பு, ஒக. 15

கடத்தப்பட்ட 'பிரின்ஸஸ் காஷ்' கப்பல் மீது குண்டு வீசிய இரு கிபிர் விமானங்களில் ஒன்றை நோக்கி தரையிலிருந்து வான் நோக்கி ஏவும் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்—

ஆனால் அந்த இலக்கிலிருந்து 'கிபிர்' ஜெட் தப்பிவிட்டதாகவும்—

இராணுவவட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பில் செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டது.

## கப்பலில் இருந்த பொருள்கள் விவரம்

''பிரின்ஸஸ் காஷ்'' கப்பலில் ஆறாயிரத்து ஐந்நூறு மெற்றிக் தொன் பொருள்கள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்த கப்பலில் இருந்த பொருள்களின் விவரம் வருமாறு:

* கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்துக்குரிய 3 ஆயிரத்து ஐந்நூறு மெற்றிக் தொன் சிமெந்து, தனியாருக்குரிய ஆயிரத்து ஐந்நூறு மெற்றிக் தொன் சிமெந்து (84 ஆயிரம் பக்கெட் சிமெந்து)
* கட்டடப் பொருள்கள் கூட்டுத் தாபனத்துக்குரிய கூரைத் தகடுகள் மற்றும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் ஆலயத்தில் ஒழுக்கம் பேணுங்கள்

### நகரத் தளபதி அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக. 15

சரித்திரப்பிரசித்தி பெற்ற நல்லூர் ஆலயத்திலும் அதன் சூழலிலும் சமய ஆசாரங்களுக்கும், சமூக கலாசாரங்களுக்கும் ஒவ்வாத முறையில் செயற்பட வேண்டாம் என்று இளைஞர்களைக்கேட்டுக் கொள்கின்றேன். ஒழுக்கம் தவறி நடப்பவர்கள் கண்டு பிடிக்கப்பட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு யாழ்ப்பாண நகரத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் உதயனுக்குத் தெரிவித்தார்.

ஆலயத்திலும் ஆலயச் சூழலிலும் இளைஞர்கள் வரம்பு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்., நல்லூரில் ஊரடங்கு இரவு 8-30 க்கு!

யாழ்ப்பாணம், ஒக. 15

யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்டபிரதேசங்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை முதல் தொடர்ந்து

## புளொட்டின் ஏற்பாட்டில் வவுனியாவில் ஹர்த்தால்

வவுனியா, ஒக. 15

வவுனியாவில் எரிபொருள் வழங்குவதில் புதிதாகக் கொண்டு வரப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மீள்பரிசீலனை செய்யுமாறு கோரி புளொட் அமைப்பு நாளை முதல் வவுனியாவில் பூரண ஹர்த்தாலை நடத்த உள்ளது. இதற்கு அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் அந்த அமைப்பு ஒத்துழைப்பைக் கோரியுள்ளது.

படையினரால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள எரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதய அஞ்சலி

எமது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தை பொதுச் சொத்தாக்கிய காலந்தொட்டு இன்றுவரை நித்தியநைமித்திய கிரியைகளின் ஆலோசகராக (ADVISER) தொண்டாற்றிய

''நியாய சிரோன்மணி''

**பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமண்யசாஸ்திரிகள் ஐயா**

அவர்களின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஐயா அவர்களின் ஆத்மா அம்பலக் கூத்தனின் பாதாரவிந்தங்களைச் சென்றடையப் பிரார்த்திக்கின்றோம்.

தர்மகர்த்தாக்கள் சபையினரும்,
வழிபடுவோர் சபையினரும்,
ஆலய ஊழியர்களும்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம். (58370)

உ

## கண்ணீர் அஞ்சலி

இந்திய திருச்சி மாவட்டம்
லால்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட
''நியாயசிரோன்மணி'', ''வித்தியாசாகரம்''

**பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமண்ய சாஸ்திரிகள்**

1950 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் நல்லூரில் வாழ்ந்து இலங்கை இந்து மதகுருமார் ஒன்றியத்தின் கௌரவ வித்துவசபை முன்னாள் உறுப்பினராகவும், மேற்படி அமைப்பின் குருகுல ஆரம்பகால முதன்மை ஆசிரியராகவும் பணியாற்றி 14-08-1998 வெள்ளிக்கிழமை அதிகாலை 3.15 மணிக்கு இறைபதம் எய்தினார். அன்னாருக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்துமத குருமார் ஒன்றியம்
யாழ்ப்பாணம்.

(58376)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

**சின்னத்தம்பிமதியாபரணம்**

(வடலியடைப்பு - பண்டத்தரிப்பு)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 15 - 10 - 1920 | 16 - 07 - 1998 |

அன்பின் திருவுருவாய், நல்ல தலைவனாய், தந்தையாய் எம்மைப் பண்பாக வளர்த்து, எங்கள் அனைவருக்கும் அறிவூட்டி நல்வழிகாட்டிய எங்கள் அன்புத் தந்தையே! அழியாத அன்பு தந்து, அணையாத நினைவு தந்து எம்மைவிட்டுப் பிரிந்து விட்டீர்கள். எமது கண்ணீர்ப்பூக்களுடன் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தந்தையின் மரணக்கிரியைகளில் நேரடியாகக் கலந்துகொண்டவர்களுக்கும், தபால், தொலைபேசி மூலம் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும், பல்வேறு வழிகளில் உதவியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், 13 - 08 - 98 இல் முகத்துவாரத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், 15 - 08 - 98 இல் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி வைபவத்திலும், 16 - 8 - 98இல் பம்பலப்பிட்டி தொடர்மாடியில் அமைந்துள்ள மக்கள் நலன்புரி மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்.

தகவல்:
திருமதி கமலாதேவி சுந்தரராஜா
63/3, Hill Street, Dehiwela.
தொ. பேசி: 714505

(சி/4530)

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம் ஓக. 15

நல்லூர் உற்சவகாலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 5.30 மணி முதல் 7 மணி வரை ஒழுங்கு செய்துள்ள தெய்வீக இசையரங்கில் இன்று சனிக்கிழமை கே. இராமநாதனின் இசைக் கச்சேரி நடைபெறவுள்ளது.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறை ஓதலுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகும். (ஐ-30)

★ ★ ★

நல்லூர் உற்சவத்தை ஒட்டி ஆலய மேற்கு வீதி முத்து விநாயகர் ஆலயத்தில் 'கான கதாவாரிதி' பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தி வரும் கம்பராமாயண இசைச்சொற்பொழிவுத் தொடரில் இன்று மாலை 5.15 மணிக்கு ''பாதுகாபட்டாபிஷேகம்'' என்ற தலைப்பில் பிரசங்கம் இடம் பெறும். (ஐ-4-30)

## மெய்வன்மை போட்டி

தென்மராட்சி, ஓக. 15

கைதடி கிழக்கு சனசமூக நிலையமும் இந்து வாலிபர் சங்கமும் பாலர் பாடசாலையும் இணைந்து நடத்தும் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1-00 மணிக்கு கைதடி கிழக்கு வீரமாகாளி அம்மன்கோயில் முன்றலில் கைதடி கிழக்கு சனசமூக நிலையத் தலைவர் சே. செல்லத்துரை தலைமையில் நடைபெறும். [ஐ-117]

## இளம் பெண் காணவில்லை

மட்டக்களப்பு நகரில் மனநோயாளியான எஸ். சுலோசனா (வயது25) என்ற இளம் பெண் கடந்த பத்து நாள்களுக்கு முன் மர்மமான முறையில் காணாமற் போயிருப்பதாக சமாதானக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.


**நாகம்ஸ்**
சினிமா
சுன்னாகம்
இன்று
சுப்பர் ஸ்ரார் ரஜனி
நக்மா நடித்த
**பாட்ஷா**
திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படம்.
காட்சிகள்:- 10-30, 2-30
(58382)

**ராஜா டாக்கீஸ்**
யாழ்ப்பாணம்.
2 ஆவது வெற்றி வாரம்
இந்தியாவில்
200 நாள்களுக்கு மேல்
ஓடிய
சிவாஜி - ராதா
ஜனகராஜ்-வடிவுக்கரசி
சத்தியராஜ் நடித்த
**முதல் மரியாதை**
(குடும்பச் சித்திரம்)
10-30 — 2-00, 6-00
(புதிய நேரம்)
(சி/4560)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்று மட்டும்
சத்தியராஜ், மந்த்ரா
குஷ்பூ, மணிவண்ணன்
**கல்யாண கலாட்டா**
(புதிய வெளியீடு)
ஞாயிறு, திங்கள்
மோகன், ரேவதி
கவுண்டமணி, செந்தில்
நடித்த
**உதய கீதம்**
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212223
(58276)


## கண்ணீர் அஞ்சலி

வித்யாசாகரம் நியாய சிரோன்மணி

**பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமண்ய சாஸ்திரிகள்**

நல்லூர் கணேஸ்வரக் குருகுல அதிபரும், ஸ்தாபகரும், நீராவியடி சிவானந்த குருகுல முன்னாள் அதிபரும், எமது வித்தியா குருவுமாகிய

வித்தியாசாகரம் நியாய சிரோன்மணி
*பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமண்ய சாஸ்திரிகள்*

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு பேரதிர்ச்சி அடைவதுடன் துயருறும், அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மாணவர்களும்
அகில இலங்கை சைவக்குருமார்
அர்ச்சகர் சபையினரும்

(சி-4562)

## மரண அறிவித்தல்கள்

நியாயசிரோன்மணி பிரம்மஸ்ரீ

**கி. சுப்பிரமண்யசாஸ்திரிகள்**

இந்தியா திருச்சிமாவட்டம் லால்குடியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நல்லூர் கைலாச பிள்ளையார் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ கிருஷ்ணஐயரின் கனிஷ்ட குமாரன் நியாய சிரோன்மணி, வித்யாஸாகரம் பிரம்மஸ்ரீ சுப்பிரமண்ய சாஸ்திரிகள் அவர்கள் 13-08-98 வியாழன் பின்னிரவு ஸ்ரீசிதம்பரநடராஜர் திருவடியை அடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16-8-98) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நல்லுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணிமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

33/1 கடைச்சாமி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். (58383)

திருமதி

**மரியம்மா மரியாம்பிள்ளை**

(செல்வம்)

சுருவிலைப்பிறப்பிடமாகக்கொண்டவரும் தவசிக்குளம் மிருசுவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி மரியம்மா மரியாம்பிள்ளை 14. 08. 98 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் அந்தோனிப்பிள்ளை (கனடா), யோசப் (லக்கி, வவுனியா - கனடா). பிறிஜட் (இளைப்பாறியஆசிரியை - மிருசுவில்), காலஞ்சென்ற ஆசீர்வாதம், மேரிகிரேஸ் (மனையியல். ஆசிரிய ஆலோசகர் கல்வி வலயம் 1) ஆகியோரின் அருமைத் தாயாரும். காலஞ்சென்ற றோசம்மா, சறோஜினி தேவி (கனடா), இராசரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர் மிருசுவில்), காலஞ்சென்ற வசந்தகுமார் (அப்பு வாத்தியார் - இளைப்பாறிய ஆசிரியர் - புங்குடுதீவு) ஆகியோரின் பாசமிகு மாமியாரும். ஜெயசீலி, அருள்சீலி, மனோசீலி, பீற்றர் - செல்வம், புஸ்பராணி, தயாராணி, காலஞ்சென்ற யோகராஜ், ஜெயராஜ், தனராஜ். சாள்ஸ் ஆனந்தராஜ். இன்பராஜ், அசம்ரா வசநதமலர், றெனிசன், ஸ்ரீபன், சகாயினி சாவினி, அபராஜ், பிருதிவிராஜ் ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [15. 08. 98] சனிக்கிழமை பி. ப. 4.00 மணிக்கு புனித நீக்கிலார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சு. இராசரத்தினம்
(மருமகன்)
[இளைப்பாறிய ஆசிரியர்]

தவசிக்குளம்,
மிருசுவில்.

(58381)

**சீவரத்தினம்**

**சாமுவேல் அரியரத்தினம்**

(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 126, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான சீவரத்தினம் சாமுமேல் அரியரத்தினம் (14-08-1998) நேற்று வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவரும், ஜோர்ஜ் (U K.), றெக்ஸ், ஜீவா, ராஜன் (A O. G.), சாந்தி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், றொயானா (U. K.), மகாலிங்கம் (ஜேர்மன்), மலர், கோபி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜீவா
(மகன்)

(சி/4566)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

கொழும்பு, ஒக. 15

சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது தொடர்பாக நடவடிக்கைகளை தடுப்பதற்காகவும் அவ்வாறு பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்களைப் பேணும் பொருட்டும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஒன்று அமைக்கப்பட உள்ளது.

சிறுவர்களின் நலனைப் பேணுவதற்கு அரசு எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக இந்தச்சபை ஆலோசனைகளை வழங்கும். அதுடன் சிறுவர்களைப்பேணிக் காப்பது தொடர்பான பிரசார நடவடிக்கைகளிலும் இந்தச் சபை ஈடுபடும்.

சபையினை உருவாக்குவது தொடர்பான சட்ட மூலம் எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றில் பரிசீலனைக்கு விடப்படும்.

(இ-9)

## இருவர் கைது

குருநகரிலுள்ள யாழ். செயலக உணவுக் களஞ்சியத்திலிருந்து உணவுப் பொருள்கள் திருடப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்ட இருவர் நேற்று முன்தினம் யாழ் நீதிமன்ற மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இருவரையும் எதிர் வரும் 17ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

குருநகர் உணவுக்களஞ்சியத்திலிருந்து பால்மா, சீனி உட்பட 31 ஆயிரத்து 480 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப் பட்டுள்ளதாக தற்போது மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. (இ-15-139-5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 01 | 17 |
| 02 | 07 |
| 1963 | 1998 |



திருமதி

### ஜெகநாதன் சாந்தகுமாரி

[சாந்தா]

(தட்டெழுத்தாளர், A. G. A Office நானாட்டான்)

இளமைக்காலம் இனிதே கனிந்து குடும்ப சகிதராய் உத்தியோகம் பார்க்க மன்னார் சென்றீர்; சிறிய நோயென்று மருத்துவமனைகள் பல கண்டும் சுகம் வருமென்று எண்ணிய எம்மை ஏமாற்றி விட்டு காலன் உம்மைக் கனவாய் கவர்ந்தனன். கொஞ்சும் மொழி மழலைகள் மூன்றும் அம்மா என்று அலறி நிற்க கணவனையும், உன் உடன் பிறப்புக்களையும், பெற்றோரையும் பரிதவிக்க விட்டுச் சென்ற கொடுமையினை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடிக்கின்றோம்.

உம் பிரிவால் வாடி நிற்கும்
கணவன், பிள்ளைகள், தாய், சகோதரர்கள்,
மைத்துனிமார், பெறாமக்கள்,
மருமக்கள்.

சங்குவேலி, மானிப்பாய். (58364)

## பட்டமளிப்பு விழா 1998

### வீடியோ புகைப்படம் பிடித்தல்

எமது பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு விழா எதிர் வரும் 04 – 10 – 1998 ஆம் திகதி நடைபெற இருக்கிறது. இவ் விழாவிற்கு 500 படங்கள் வரை எடுக்க வேண்டும் (போஸ்காட் பருமனுள்ள கலர்ப் புகைப் படம்) எனவே தகுதி வாய்ந்த வீடியோ, புகைப் படப் பிடிப்பாளர்கள் தங்களது விலைக்கூற்றை 1998 - 09 – 07 ஆம் திகதிக்கு முன்னர் "சிரேஷ் – உதவிப்பதிவாளர், கல்விக் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

(சி-4559)

## அதிரடி அரங்கு

நல்லூர் திருவிழாச் சுற்றாடலில் நமது இளைய தலைமுறையினர் நடந்து கொள்ளும் போக்குக்குறித்து இப்பத்தியில் கடந்த வாரம் விசனத்துடன் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் திருந்தும்பாடாக இல்லை.

இரண்டொரு தினங்களுக்கு முன்னர் நகரில் மூத்த இராணுவ அதிகாரி ஒருவரைச் சந்தித்த சில தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளும் இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டியதாகத் தகவல்.

அதையடுத்து திருவிழாச் சுற்றாடல் பகுதியில் பொலீஸ்நிலையம் ஒன்றைத் தற்காலிகமாக அமைக்க ஏற்பாடுகள் ஜரூராக நடப்பதாகத் தெரிகின்றது.

கோயிலிலும் பொலீஸா? நமக்கு நாமே விலங்குகளைத் தேடிப் பூட்டும் கதைதான் இது பாருங்கள்!

★ ★ ★ ★ ★

அடி பிடி, சண்டை திருவிழாச் சுற்றாடலில்— இளைஞர்கள் இடையே —மட்டும் இல்லை.

நேற்று முன்தினம் நகர ஆஸ்பத்திரியில் இரு டாக்டர்கள் இடையேயான வாய்த்தர்க்கம் ஒரு டாக்டர் மற்றையவருக்குக் கைநீட்டும் வரை சென்றதாகவும், வாரட்டில் இருந்த சிற்றூழியர்கள் விலக்குப் பிடித்ததாகவும் தகவல்.

குடாநாட்டின் மற்றொரு ஆஸ்பத்திரியில் அண்மையில் நிர்வாக உத்தியோகத்தர் ஒருவர் மற்றொரு ஊழியரால் அடித்துத் தாக்கப்பட்டதாகத் தெரிகின்றது. வைத்தியசாலையின் தொலைபேசிப் பாவனை விடயத்தில் இந்த நிர்வாக உத்தியோகத்தர் கெடுபிடி —கறாராக — இருந்ததே அடிவிழக் காரணம் எனக் கூறப்பட்டது.

அதிகாரிகள் அடிபிடி எங்கே போய் முடியப் போகின்றது?

★ ★ ★ ★ ★

கடந்த மாதம் சுன்னாகம் பகுதியில் ஒரு காதல் ஜோடி இருதரப்பு பெற்றோருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு சம்பி நீட்டி விட்டது. இது குறித்துப் பொலீஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டது. இதில் என்ன புதுமை; வழக்கமாக சமூகத்தில் நடப்பது தானே என்கின்றீர்களா?

விடயம் இதுதான். பெண்ணுக்கு வயது 24 பையனுக்கு வயது 14.

தலையில் கைவைக்கின்றீர்களா? கட்டுக் காவல், வேலி உடைந்ததால் ஏற்பட்ட விளைவுகளுள் இதுவும் ஒன்று.

பெண்ணும் பையனும் இருதரப்புப் பெற்றோருக்கும் தெரியாத இடத்துக்கு ஓடிச் சென்றிருப்பதாகத் தகவல்.

இருவரையும் பெற்றோர்கள் கைவிட்டு விட்டார்களா அல்லது தேடிப்பிடித்து உரிய நடவடிக்கை ஏதும் எடுத்தார்களா என்பது தெரியவில்லை.

★ ★ ★ ★ ★

யாழ்ப்பாணம் அச்செழுவும் அதை அண்டிய பிரதேசங்களும் தோட்டங்கள் நிறைந்த பகுதியாகும். அங்குள்ள பெற்றோர்கள் (தாய், தந்தை — சில சமயங்களில் பிள்ளைகளும் கூட — குடும்பமாக) தோட்டவேலைக்குச் செல்வது வழமை, அப்படி பெற்றோர் வேலைக்குச் செல்வதால் பகல் முழுவதும் குழந்தைகள் வீடுகளில் அநாதரவாக விடப்படுகின்றனர்.

இக்குழந்தைகளைப் பராமரித்து, அவர்களுக்கு ஊட்டச்சத்துள்ள உணவுகளை அளித்து, உரிய பழக்கவழக்கங்கள், போதனைகளை வழங்கிப் பேணுவதற்காக பாலர் பகல் பராமரிப்பு நிலையம் ஒன்றை மெதடிஸ்த திருச்சபை நடத்தி வந்தது. தினசரி எண்பது குழந்தைகள் வரை இந்த நிலையத்தால் நன்மை பெற்று வந்தனர்.

ஆனால் குழந்தைகள் பராமரிப்பின் பெயரால் ஊழல் தலைவிரித்தாடியதாகக் கூறப்பட்டதை அடுத்து அதை நிர்வகிக்க புதிய நிர்வாகக்குழு ஒன்றை சபை நியமித்ததாகத் தெரிகின்றது. ஆனால் தொடரும் ஊழலைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் பராமரிப்பு நிலையத்தைக் காலவரையறை விதியாது மூடிவிட்டது புதிய நிர்வாகக்குழு.

பாதிப்பு ஏழைக் குழந்தைகளுக்குத்தான், உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்தால் நல்லது.

★ ★ ★ ★ ★

கோண்டாவிலைச் சேர்ந்த அன்பர் ஒருவர் விசனத்துடன் வரைந்த கடிதத்தின் சாராம்சம் இது:-

அந்தணப் பெரியோர்கள் ஆலயங்களில் தாம் செய்யும் பூசை, அபிஷேகம் மற்றும் கிரியைகளுக்கு வேதனமாக (தட்சணையாக) இவ்வளவு தொகை வைத்தால்தான் வருவோம் என்று பேரம் பேசுகின்றார்கள்; அடம்பிடிக்கின்றார்கள். இவ்வாறு நிபந்தனை விதிப்பது சைவசமய பாரம்பரியத்துக்கும், தர்மத்துக்கும், ஆசாரத்துக்கும் ஏற்புடைய ஒழுங்கா? அந்தணப் பெரியோர்களை உரிய முறையில் மதித்துப் பேணி அவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் பொறுப்புடன் செயற்பட வேண்டியது சமூகத்தின் கடமை என்பது சரியே. ஆனாலும் பணம் சம்பாதிக்கும் வர்த்தக நிலையம் போல் ஆலயத்தைப் பயன்படுத்தி, பூசைக்குப் பேரம் பேசுவதும், தீபம் காட்டுவதற்கு கட்டணம் விதிப்பதும் நியாயமானதா?

—இந்த வாசகரின் கேள்விக்கு பதில் தரவேண்டியது அந்தணப் பெரியோர்களினதும் சைவசமயஅமைப்புக்களினதும் கடனாகும்.

– மின்னல்

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



### றமீத்தன், றமீத்தா, றமீக்கா

21 - 07 - 1998

ஆத்திகுடி வீதி, 54/20, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசலிங்கம் - கலைமணி தம்பதியினரின் செல்லப்பிள்ளைகள் றமீத்தன், றமீத்தா, றமீக்கா தங்களது முதலாவது பிறந்த நாளை வெகுவிமரிசையாக ஜேர்மனியில் 15-08-98 (இன்று) அத்தான் ஜீவிதனோடு கொண்டாடுகிறார்கள். இவர்களை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தைமார், மாமாமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சான்மார் மற்றும் உறவினர் அனைவரும் பிள்ளையார் அருளால் பல்கலையும் பெற்று சீரும் சிறப்புடன் நீடூழி வாழ்கவென மூவரையும் வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
கு. சின்னையா.

5 4/20, ஆத்திகுடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்

(58267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு உண்டு

புடைவைக் கடைக்குரிய 5 கண்ணாடி அலுமாரிகளும், கௌண்டர் மேசை ஒன்றும் உண்டு. தொடர்பு வெ. தயாபரன், செல்லமயில் ஸ்ரோர்ஸ், காட்டுப்புலம், தொண்டமானாறு. (58269)

இரண்டுமாத பேட்டுக் குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் தொடர்பு கொள்ளவும். கே. வி. சாமி, 131/1, அம்பலவாணர்வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (58354)

### வீடு விற்பனைக்கு

மட்டுவில் கிழக்கு புத்தூர் வீதியில் சகல வசதிகளும் கொண்ட வீடும், அருகிலுள்ள வளவும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- திருமதி வேல்நாயகம், மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி. (57854)

நுணாவில் மேற்கு சாவகச்சேரியில் கண்டி வீதிக்குக் கிட்ட ஐந்து பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தேவையானோர் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். ச. நடேசபிள்ளை (ஓய்வு பெற்ற அதிபர்), நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (58303)

இல. 11, சோமசுந்தரம் அவன்யுவில் உள்ள S ரவீந்திரனுக்குச் சொந்தமான 1½ பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதி கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K லோகேந்திரம், 29, சோமசுந்தரம் அவன்யு சுண்டுக்குளி. (58361)

### தவறிவிட்டது

தச்சன்தோப்பைச் சேர்ந்த நாகரட்ணம் தயானி, நாகரட்ணம் தனுஷா ஆகியோரின் விசேட அடையாள அட்டையும், பாதுகாப்புப் பிரிவினரின் அனுமதிப்பத்திரமும், சிறிய பெண்கள் பேர்சுடன் நல்லூர் வீதியில் சென்ற 6. 8. 98 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தொடர்பு கொள்ளவும், சன்மானம் தரப்படும். க. நல்லையா, மே/பா. கி. பவளராசா, தச்சன் தோப்பு, கைதடி. (58342)

### ஆங்கிலக்கல்வி

ஆங்கிலம் இலைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தினரால் தொழில் செய்பவருக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் ஆண்டு 6 முதல் 11 வரை வீட்டுக்கு வந்து கற்பித்துக் கொடுக்கப்படும். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். இல. 771, மே/பா உதயன். (58325)

இவ்வாண்டுக்குரிய O/L மாணவர்களுக்கான விசேட ஆங்கிலமொழி, இலக்கிய வகுப்புக்களும 9ஆம், 10ஆம் ஆண்டுகளுக்கான ஆங்கில இலக்கிய வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதிய மாணவர்கள் 27ஆம் திகதி வரை சேர்த்துக் கொள்ளப்படுவர். தொடர்பு:- கோ. சுப்பிரமணியம், இல. 62, பழம் வீதி, கந்தர்மடம். (58310)

### மெய்வன்மைப்போட்டி

கைதடி கிழக்கு சனசமூக நிலையமும், இந்து வாலிபர் சங்கமும், பாலர் பாடசாலையும் இணைந்து நடத்தும் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.00 மணிக்கு கைதடி கிழக்கு வீரமாகாளி அம்மன் கோவில் முன்றலில் கைதடி கிழக்கு சனசமூக நிலையத் தலைவர் சே. செல்லத்துரை தலைமையில் நடைபெறும். (ஐ-117)

### மணமகள் தேவை

பட்டதாரி அரசாங்க ஊழியர் 33 வயது செவ்வாய்க் குற்றமுள்ள மணமகனுக்கு கல்வி அறிவு உள்ள மணமகளை பெற்றோர் தேடுகிறார்கள். 772, C/O உதயன். (58363)

### மீண்டும் யாழில்

A/L. O/L தமிழ் பாடத்தில் அதிவிசேட சித்திக்கு (6 மாதத்தில்) உத்தரவாதம் தரும் ஆசிரியர் திரு. என். புவனேந்திரனின் B.A. (Hons) வகுப்புக்கள். பிரத்தியேக மாணவரும், வெற்றிடமுள்ள கல்வி நிறுவனங்களும் நாடலாம். 63. பொற்பதிவீதி, கொக்குவில். (58282)

## COMPUTERS FOR SALE

Pentium mmx - 233 mhz

Pentium mmx - 166 mhz

For further details:

V. Kularatnam

273/11, Stanley Road, Jaffna,

(D/4508)

## ஹிருதய பூர்வாஞ்சலி

வேதத்தின் சிகரமாகப் பிரகாசித்து ஸ்ரீலங்கா விப்ர சமூகத்திற்குச் சிறந்த வழிகாட்டியாக தன்னலங்கருதாது உழைத்து தேவலோக பிராப்தியடைந்திருக்கும்

**பிரம்மஸ்ரீ**

**ஸ்கந்த சுப்பிரம்மண்ய சாஸ்திரிகளுக்கு**

இணுவில் காயத்ரீபீடம் தனது இதய பூர்வ அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்.

(58358)

## ஓராண்டு நினைவு மலர்



மண்ணில் 19 — 08 — 1927

விண்ணில் 25 — 08 — 1997

இணுவில் கிழக்கு, காரைக்காலைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் ஞானசம்பந்தர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் ஆண்டி பொன்னு**

திதி: 1998 - 08 - 15 சனிக்கிழமை

எங்கள் அன்புத் தெய்வமே! பாசமிகு தந்தையே!
பண்பின் உறைவிடமே நாமிருக்க எங்கு சென்றீர்?
ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு ஆனாலும்
ஐயா என்று யாரை நாமழைப்போம்?
வருடம் ஒன்று சென்றதையா எம்கவலை தீரவில்லை
ஆண்டு பல சென்றாலும் ஆறுமோ எமது துயர்
தனிமையில் எங்கு ஐயா நிற்கிறீர்?
இனி நாங்கள் எப் பிறப்பில் உமைக் காண்பதையா
புத்தொளி பூவாய் மலர்ந்திடப்பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் அன்பு வலையில் சிக்கித் தவிக்கும்:

மனைவி பொ. பொன்னம்மா

மக்கள்: தேவன், சிவலிங்கம், (காங்கேசன்துறை சி. கூ. தாபனம்) கந்தசாமி. (இத்தாலி) கமலாதேவி, யோகராசா (கனடா) சிவயோகம், (சுவிஸ்)

மருமக்கள்: தனலட்சுமி, ரதி, யோகராசா (சுவிஸ்) லதா, (கனடா) பாஸ்கரன், (சுவிஸ்)

பேரர்கள்: ரேணுகா, ரேகன், கிரிஜா, ரஞ்சித், கௌதமன், வினிதா, கஜிதா, மனோஜன், நிருசன், [illegible]

[illegible]

(58353)

# சுகாதார பகுதி ஊழியருக்கு இடர்காலக் கொடுப்பனவு

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழுள்ள அரசினர் வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள், மலேரியா தடுப்பு இயக்கம் உட்பட அனைத்து பிரிவு ஊழியர்களுக்கும் எட்டுமாத கால இடர் காலக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு ஒன்றரை வருட காலத்துக்கான இடர் காலக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்ட போதிலும் போதிய நிதி இன்மையால் யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் எட்டுமாத கால இடர்காலக் கொடுப்பனவை வழங்கியுள்ளது.

எஞ்சிய காலப் பகுதிக்கான கொடுப்பனவு நிதி கிடைத்ததும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-173)

## இதய பூர்வ அஞ்சலி

தன் வாழ் நாள் முழுவதும் இளைஞர்களுக்குள் இளைஞராகப் பிரகாசித்து அந்தண சமூகத்திற்கு ஒளி விளக்காகத் திகழ்ந்து தன்னலங்கருதா சேவையாற்றி புகழுடம்பு பெற்று இறைவனுடன் சங்கமமாகி நிற்கும்

**பிரம்மஸ்ரீ**

**ஸ்கந்த சுப்பிரம்மண்ய சாஸ்திரிகளுக்கு**

பிராமண இளைஞர் சமாஜம் தனது ஹிருதய பூர்வ அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது

சிவஸ்ரீ சாம். சிவ. சோமசபேசக் குருக்கள்
செயலாளர்,
பிராமண இளைஞர் சமாஜம்.
உரும்பிராய்.

58359)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

**திருமதி ஜெயக்குமாரி கந்தவேள்**

அவர்களின் அன்புச் சகோதரன்

**இ. நித்தியானந்தசிவன்**

காலமானதையிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.

(58360)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 05 — 08 — 1947

நிறைவு 16 — 07 — 1998

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா இலங்கை வங்கிக் கிளைகளில் கடமையாற்றியவரும் ஈற்றில் கொழும்பு இலங்கை வங்கி தலைமை அலுவலகத்தில் உயர் அதிகாரியாகச் சேவையாற்றியவருமான

**அமரர் வெ. ஜெகதீசன்**

எங்கள் குடும்பத்தின் இணையற்ற ஜோதியே! என்றென்றும் மறக்க முடியாத அன்பின் திருவுருவே! உங்கள் பிரிவால் ஒளியற்றுப் போனோம். உங்கள் நினைவே எங்கள் உள்ளங்களில் அணையா விளக்காக ஒளி வீசிக் கொண்டிருக்கும். பரிசுத்தமான உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்தித்துக் கொண்டே இருக்கின்றோம்.

மனைவி, மகள்மார்,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்.

பி 2 - 2/4 சொய்சா பிளாட்,
மொறட்டுவா.

(58411)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## INSTITUTE OF INFORMATION SYSTEMS (PVT.) LIMITED

379, First Floor, Galle Road,
Colombo - 6

- ♥ Computer Sales And Maintenance
- ♥ Corporate Training
- ♥ Computer Networking
- ♥ Computer Training
- ♥ Software Development
- ♥ Desktop Publishing
- ♥ Internet Web page Designing
- ♥ IT Consultancy Services

உங்கள் சகலவிதமான கணனி தேவைகளுக்கும் தலைநகர் கொழும்பில் உள்ள எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.
(வேறெங்கும் கிளைகள் கிடையாது)

மேற்குறித்த சேவைகளுக்கு வடபகுதியில் முகவர்கள் வேண்டப்படுகிறார்கள், தொடர்புகளுக்கு:

R. SENTITCUMARAN
(Managing Director)

Office: 074-517390
Mobile: 077-319426

(சி/4536)


## 3 சடலங்களும் உறவினரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம் ஓக: 15

இராணுவத்தினரால் கடந்த புதனன்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட சிறுவனின் சடலம் நேற்று முன்தினம் இனம் காணப்பட்டது.

கொடிகாமப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கிரனைட் வெடிப்புச் சம்பவத்தில் மரணமான மூன்று சிறுவர்களில் ஒருவரான பசுபதி பாஸ்கரலிங்கம் (வயது 7) என அந்த சடலம் அடையாளம் காணப்பட்டது.

இவருடன் இறந்தமற்றைய இரு சிறுவர்களின் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காகவும், மரணவிசாரணையின் பொருட்டும் கடந்த புதனன்று மாலை, யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டன.

இவர்கள் இருவரும் பொன்னுத்துரை, நகுலேஸ்வரன் (வயது 11), செல்வரத்தினம் துஷ்யந்தன் (வயது 8) என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் நடைபெற்ற பிரேதபரிசோதனை, மணர விசாரணையை அடுத்துமூன்று சிறுவர்களின் சடலங்களும் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

(இ-136-15)


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
27 — 02 — 1935

மறைவு
31 — 07 — 1994

திருமதி
## சரஸ்வதி சேனாதிராஜா

திதி: 15 - 08 - 98

அன்புடனும், பண்புடனும் எமைப் பேணிக் காத்த தெய்வமே! நீங்கள் மறைந்து ஆண்டுகள் நான்கு சென்ற போதும், உங்களின் நினைவு எந்நேரமும் எங்களின் நெஞ்சை விட்டகலாது. உங்களின் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்தித்து நிற்கும்!

கணவன், மகன்மார்,
மகள், மருமகள்.

''சிவ வில்லா'',
உடுவில் றோட்,
மானிப்பாய்.

(58093)



# J.C.I.T.

★ **A Name trusted for its Excellent Service!**

★ **Study and obtain OPEN UNIVERSITY EXEMPTIONS!!**

★ **In the heart of the town Avoid transport problems and Unnecessary Risks**

(1) Diploma in Computer Programming & Data Processing
(Including MS - EXCEL & MS - ACCESS)
(One year - Full time) — JAFFNA CENTRE
ENTRY QUALIFICATION: 6 passes in the G. C. E. (O/L) including credit in Maths and pass in English.

(2) Certificate Courses - Jaffna Centre
☐ MS EXCEL ☐ C++ ☐ d BASE III + ☐ MS WORD
☐ PASCAL ☐ MS ACCESS ☐ VISUAL BASIC
(3 Months Duration) Morning / Afternoon on Weekdays
ENTRY QUALIFICATION: 6 passes in the G. C. E. (O/L) including Credit in Maths and pass in English.

(3) Diploma in Draughts manship (Civil) - Jaffna Centre
One year full time
ENTRY QUALIFICATION: 6 Passes in the G.C.E. (O/L) including Credit in Maths and pass in English

(4) Diploma in Electronics & Telecommunication Engineering (Jaffna Centre)
One year full time
ENTRY QUALIFICATION: 6 Passes in the G. C. E. (O/L) including Credit in Maths and Pass in English

(5) Australian Computer Society Examinations
ENTRY QUALIFICATION: 5 Credits in G. C. E. (O/L) and One Pass in G. C. E. (A/L)

(6) Craft Courses
One year full time (VADDUKODDAI)

TAMIL MEDIUM

[a] Mechanical Craftsman (Lathe work Welding bench & fitting work)
[b] Electrical Wiring & Installation Practice
[C] Automobile Technology
[d] Radio & TV Servicing
5 passes in the G. C. E. (O/L)

Application forms are available at the Jaffna Centre and at Vaddukoddai.
Interview on the 9th Sept.'98 at 10 30 a. m. (S. L. T.)
Post the application forms in time or present Yourself for the interview with your application.

**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**

(Jaffna Centre, Opposite O. P. D., Teaching Hospital, Jaffna.)
464, Hospital Road, Jaffna.

(C/4423)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான நீதிவான் இ. குழந்தைவடிவேலு
## பாராட்டு விழாவையொட்டிய சிறப்புமலர்

## பண்பு பிறழாது செயலாற்றும்
## ஒரு சிறந்த சமூகத் தொண்டன்

திரு. இராமலிங்கம் குழந்தைவடிவேலு அவர்களை நாம் சிறுவயது முதல் நன்கு அறிவோம். கொழும்பில் வர்த்தகத்துறையில் ஈடுபடும் காலத்தில் கலை, கலாசார நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தி மக்களின் பேராதரவு பெற்றவர். வர்த்தகத்துறையில் அவரைப்பலர் ஈடுபடுத்தி முன்னேறச் செய்தும் போதிய முன்னேற்றம் இல்லாததால் சரியாகச் செயற்படமுடியாதுபோகவே தான் பிறந்த இடமான கைதடிக்கு வந்து ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரம செல்லம்மா அம்மையாரின் ஆசியுடன் ஸ்ரீ சச்சிதானந்த என்ரபிறைஸ் என்னும் நிறுவனத்தை உருவாக்கி குரு ஆசியுடன் நல்ல முன்னேற்றம் அடைந்தார். அத்துடன் சென்றசில மாதங்களுக்கு முன்னர் 10 லட்சம் ரூபா செலவில் நல் இதயம் படைத்த ஆன்மீக அன்பர்களின் ஆதரவுடன், தியான நிலையம், ஒன்றும் அமைத்து அழியாப்புகழ் பெற்றார். திரு. குழந்தைவடிவேலு அவர்கள் சைவமக்களின் தொண்டர். அவரது தொண்டு அவரின் விடாமுயற்சியிலும், அன்னாரின் விடாமுயற்சி அவரது முழு மூச்சுமாக இருக்க அரசு அவரைக் கௌரவிப்பதில் நாமெல்லாரும் ஒருங்கு சேர்ந்து மகிழ்ச்சியடைவதில் வியப்பேதுமில்லை.

தொட்டுக்கொண்டதைத் தொடர்ந்து முடிப்பதிலும் பண்புபிறழாது செயலாற்றுவதிலும் அவருக்கு நிகர் அவர்தானென்று ஆணித்தரமாகக் கூறுவதில் மிகையேதுமில்லை. கைதடி கிராம சபைக்குட்பட்ட எல்லா தெய்வீக நிலையங்களிலும், பொது நிறுவனங்களிலும் நிர்வாகசபை உறுப்பினராக விருந்து தன்னலமற்ற பணி புரிவதை நாம் கண்கூடாகக் கண்டு மகிழ்ச்சியடைகின்றோம். ஆன்மீக நெறியை



வளர்க்க உறுதிபூண்டவருக்கு இந்தப்பதவிகள் பட்டங்கள் மேலும் ஊக்கத்தையும், தேச உணர்வையும் அதிகரிப்பிற்கும் என நம்புகிறேன்.

ஆறுமுகம் கந்தையா J.P.
(ஸ்தாபகர், சைவச்சிறுவர் இல்லம் கைதடி)
அதிபர்
அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
கைதடி. கொழும்பு.

நாம் இதயபூர்வமாக அவரைவாழ்த்தி அவர்பணி வெல்லுமாறு இறைவனை வாழ்த்துகிறோம்.

## அருளாசி



திரு. இராமலிங்கம் குழந்தைவடிவேலு அவர்களின் சலியா உழைப்புக்கு என்மனம் நிறைந்த பாராட்டுக்கள், இவரின் முயற்சியினால் பலகாலமாக இருந்துவந்த ஒரு பெருங்குறை தீர்க்கப்பட்டிருக்கிறது. அவருக்கு சமாதான நீதிவானாக கிடைத்துள்ள கௌரவம் மேலும்அவரது தொண்டை வளர்க்க உதவுமென நம்புகிறேன். அவரும் அவரது குடும்பத்தினரும் துன்பமேயின்றி இன்பமாக என்றென்றும் வாழ வாழ்த்துகிறேன்.

ஸ்ரீ சச்சிதானந்த செல்லம்மா அம்மையார்
ஆசிரம முதல்வர்.

## பதவிக்குப் பெருமை

திரு. இ. குழந்தைவடிவேலு அவர்களுக்கு சமாதான நீதிவான் பதவி கிடைத்தமையால் சமாதான நீதிவான் பதவி பெருமையடைகின்றது. அவர் பல்லாண்டு வாழ்ந்து எல்லா நலன்களும் பெற இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

சு. செல்வராசா
வரவேற்புக் குழுத்தலைவர்

## கிராமத்து மக்கள் வாழ்த்துகிறார்கள்

சமய சமூகப்பணிகளில் முன்னின்று உழைத்து வரும் எங்கள் கிராமத்து மைந்தன் இராமலிங்கம் குழந்தை வடிவேலு அவர்களுக்கு சமாதான நீதிவான் என்னும் கௌரவமான பதவி கிடைத்தது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியையும், பெருமையையும் தருகிறது.

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் சீடரான இராமலிங்கம் குழந்தை வடிவேலுவுக்கு பாராட்டு விழா நடைபெறும் இவ்வேளையில் அவர் நோய் நொடியின்றி நீண்ட ஆயுளுடன் வாழ ஆண்டவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

- கைதடிமக்கள்

## பாராட்டு விழா

திகதி: 16-08-1998 ஞாயிற்றுக்கிழமை
மு. ப. 9-00 மணி

இடம்: ஸ்ரீசச்சிதானந்த ஆச்சிரமம், கைதடி
தலைவர்: திரு. சு. செல்வராசா
(பாராட்டு விழாக்குழு)
முன்னிலை: சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையார்
பிரதம விருந்தினர்: திருமிகு. பு. சுந்தரம்பிள்ளை
(பிரதேச செயலர், தென்மராட்சி)
வரவேற்புரை: திரு, பொ. கந்தசாமி
(பாராட்டுக் குழு சார்பாக)
தலைமையுரை: தலைவர்
மங்கள இசை: தங்கவேலு குழுவினரின் மேளக்கச்சேரி
ஆசியுரை:
நல்லை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள்
சிவஸ்ரீ மு. கணேசக் குருக்கள்
சிவஸ்ரீ யோ. குருசாமிக் குருக்கள்
சிவஸ்ரீ சி. மனோகரக் குருக்கள்
வாழ்த்துப்பாவும், பொன்னாடை போர்த்தலும்.
வாழ்த்துரைகள்
டாக்டர் வ. சின்னப்பு (சாவகச்சேரி)
சங்கீத பூசணம் திரு. எஸ். பேரம்பலம் (உசன்)
திரு. சி. சக்திகிரீவன் (இந்து பேரவை செயலாளர்)
குலபதி ஆறுமுகம் கந்தையா, J. P.
டாக்டர் K. S. T. சபாநாதன்
திரு. க. கோபாலகிருஷ்ணன் (ஓய்வு பெற்ற அதிபர்)
திரு. நா. திருச்செந்திநாதன் (இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி கோயில்)
திரு. வி. கனகசபாபதி (கயற்றசிட்டி கந்த சுவாமி கோயில்)
திரு. சி. சுப்பிரமணியம் (வீரகத்திப் பிள்ளையார் கோயில்)
செல்வி க. இராசேஸ்வரி (வாலாம்பிகை அம்மன் கோயில்)
திரு. வே. நடராசா (தாக்கடிப்பெத்தான் ஞானவைரவர் கோயில்)
திரு. வ. சுப்பையா (சைவ ஐக்கிய சங்கம்)
திரு. ப. செல்லத்துரை (அதிபர், கலைவாணி வித்தியாலயம்)
செல்வி ராதிகா சந்திரசேகரம் (சைவ ஐக்கிய சங்கம்)
திருமதி சி. ஈஸ்வரன் (நுண்கலைப்பீடம் யாழ். பல்கலைக்கழகம்)
திரு. வே. சின்னத்தம்பி (மின்னொளி ச. ச. நிலையம்)
திரு. மா. சிவபாதம் (கைதடி கிழக்கு கி. மு. சங்கம்)
திரு. ந.ஜெயரூபன் ஆசிரியர்(கைதடி சி.க.உ.ச)
திரு. சே. செல்லத்துரை (கைதடி கிழக்கு சன சமூக நிலையம்)
திரு. சி. சுப்பிரமணியம் (தலைவர், தென்மராட்சி மேற்கு. ப. நோ. கூ. சங்கம்)
பதில் உரை:
நன்றியுரை: திரு. அ. லோகநாதன் B. Sc.

விழாவைச் சிறப்பித்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சு. செல்வராசா,
பாராட்டு விழாக்குழுத் தலைவர்.


## அன்பர் குழந்தை வடிவேலு பல்லாண்டு வாழ்ந்து சமய, சமூகப் பணி செய்ய வாழ்த்தும் கைதடி வர்த்தகர்கள்

- நியூ லீலாவதி ஸ்ரோர்ஸ்
- ஸ்ரீ கணேசா ஸ்ரோர்ஸ்
- ஆரியபவான் உணவகம்
- ஸ்ரீ காந்தா ஸ்ரோர்ஸ்
- தீபன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
- கரன்ஸ் றேட் சென்ரர்
- சிவா பல்பொருள்வாணிபம்
- சிவா அச்சகம்
- சிவா அறிவொளி புத்தகநிலையம்
- சண் பார்மஸி & குறோசறி
- சொருபிணி விற்பனை நிலையம்
- வசந்தாஸ் மதுபான நிலையம்
- எரிபொருள் விற்பனை நிலையம்
- குணம் களஞ்சியம்
- ஞானம் மிதிவண்டி திருத்தும் நிலையம்
- யோகேஸ்வரன் மதுபான நிலையம்
- சி. சிவசந்திரராஜா பல்பொருள் வாணிபம்
- நவா அழகு சாதனம்
- த. மதிவதனன், ஹப்பி தையலகம்
- ஓம் முருகன் நகைமாடம்
- ஐங்கரன் ஸ்ரோர்ஸ்
- சண்முகலிங்கம் கேசவநாதன் நகைத்தொழிலகம்
- ராஜீவன் ஸ்ரோர்ஸ்
- ராஜீகா ஸ்ரோர்ஸ்
- திருவருள் ஸ்ரோர்ஸ்
- சிவபூதவராய் ஸ்ரோர்ஸ்
- செல்லப்பா களஞ்சியம்
- வீ. சிங்கராஜ & வீ. சிங்கராணி அரைக்கும் ஆலை
- பகீரதன் வெதுப்பகம்
- நா. கணேசலிங்கம்
- மகேஸ்வரன் களஞ்சியம்
- ஞானம் ஸ்ரோர்ஸ்
- அ. லோக நாதன் ஸ்ரோர்ஸ்
- ச.ஆறுமுகம்விநாயகர் ஸ்ரோர்ஸ்
- சச்சிதானந்த ஸ்ரோர்ஸ் ஊழியர்கள்

(விளம்பர இல. 58322)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோ. சைக்கிள் கடத்தல்: இருவர் விளக்க மறியலில்!

யாழ்ப்பாணம், ஒக. 15

மோட்டார் சைக்கிளை ஓட்டிப் பார்த்து விட்டு அதனை விலைக்கு வாங்குவதாகக் கூறிவிட்டு மோட்டார் சைக்கிளுடன் தலைமறைவான சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களை மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

சுதுமலையில் கடந்த வாரம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக சுதுமலையைச் சேர்ந்த எஸ். சிறிதரன், எஸ். ரகுநாதன் ஆகிய இருவருமே விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களாவர்.

அறிமுகம் இல்லாதவர்களுக்கு மோட்டார் சைக்கிளைப் பெற்றுக் கொடுத்த காரணத்துக்காகவே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் அபகரித்துச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிளின் பெறுமதி ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா என தெரிவிக்கப்பட்டது. (உ-5-15)

## வடக்கிலிருந்து பத்துப் பேர்

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் கொத்மலையில் நாளை ஆரம்பமாகும் சமூக அணி திரட்டல் தொடர்பான இருவாரகால பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பத்து அலுவலர்கள் செல்லவுள்ளனர்.

உள்ளூராட்சித் திணைக்களம், சமூக அபிவிருத்திமன்றம், பனம்பொருள் அபிவிருத்திச்சபை ஆகியவற்றை சேர்ந்த அலுவலர்களே இந்தப் பயிற்சிநெறியில் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-5)

# போலி விஸா பயன்படுத்திய ஏழு யாழ். வாசிகளுக்கு தலா ரூ.10,000 அபராதம்

கொழும்பு, ஒக.15

போலி விஸா பயன்படுத்தி மலேசியா பயணமாகவிருந்த சமயம் கைது செய்யப்பட்ட இரு யுவதிகள் உட்பட ஏழு யாழ். வாசிகள் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

ஜயகாந்தன் கிருஷ்ணலட்சுமி, மனோரஞ்சிதம் ஹரிந்திரன், பெருமாள் ரவிநாதன். மகேந்திரபிள்ளை ஜெகநாதன், குலேந்திரன் சஞ்ஜீவன், கைலாசபிள்ளை புஷ்பகுமார், விமலேந்திரன் பிள்ளை ஆகியோர்தான் மேற்படி 7 பேருமாவார்.

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நீர்கொழும்பு மாஜிஸ்திரேட் பியசேன ரணசிங்க மேற்படி அபராதத்தை விதித்தார். (உ-21)

## கார்த்திகையில் சுபமங்களம்!

கார்த்திகையின் குமரனுக்குச் சுபமங்களம்
காருண்ய சீலனுக்குச் சுபமங்களம்
சீர்த்திதரும் முருகனுக்குச் சுபமங்களம்
செந்தமிழர் சேந்தனுக்குச் சுபமங்களம்
மூர்த்திசிவ மைந்தனுக்குச் சுபமங்களம்
முழுப்பொருளை உரைத்தவர்க்குச் சுபமங்களம்
நேர்த்திகளை முடிப்பவர்க்குச் சுபமங்களம்
நிட்டூரர் கட்டவர்க்குச் சுபமங்களம்
போர்த்திறனில் வல்லவர்க்குச் சுபமங்களம்
புகழ்வேலை உடையவர்க்குச் சுபமங்களம்
மங்களம்பெரு மங்களம்பெறச் சுபமங்களம்
எங்களின்குறை தீர்த்திடுவீர் சுபமங்களம்

- முருகனடியான்

## கார்த்திகேய நாமம்

கார்த்திகை மாதர் அறுவரின் அமுதினை உண்ட
கார்த்திகேயனின் நாமத்தை அனைவரும்
அமர்ந்தினி தேத்த
கூர்த்தவேலினைக் கையினில் எடுத்துச் சூரனை
மடித்தவன்
கார்த்திகைத் திருவிழாவினைக் கண்டு களிப்பாம்.

- கந்த முருகேசதாசன்

## ஆன்ம விழா

பத்தினிலே மஞ்சத்தில் வீதி உலா
பக்தர்கள் கண்டிடும் ஞானவிழா
முத்தி தந்திடும் கார்த்திகையில்
மூவர்கள் வலம்வரும் ஆன்மவிழா
சக்திகள் அமர்ந்திட சாரதியாய்
சங்காரம் செய்திடும் கோலவிழா
சித்திகள் பெற்றிடும் தீர்த்தமது
சித்திகள் பலதரும் அருள்விழா.

நல்லை செ. சண்முகலிங்கம்

# புன்னாலைக்கட்டுவன் ம. வியில் மேலும் எலும்புக்கூடுகள் உள்ளன?

## தேடுதல் நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 15

புன்னாலைக்கட்டுவன் பாடசாலை வளவில் மேலும் பல எலும்புக்கூடுகள் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதால் அந்தப் பகுதியில் இது தொடர்பான தேடுதல்களை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களில் இணையம் மனித உரிமைகள் ஆணைக்குழுவைக் கோரியுள்ளது.

இது தொடர்பாக ஆணைக்குழுத் தலைவருக்கு இணையம் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புன்னாலைக்கட்டுவன் பாடசாலை வளவில் மீட்கப்பட்ட எலும்புக்கூடு 1995ஆம் ஆண்டில் காணாமல் போன தனது கணவனுடையது என்பதை அப்பகுதியில் வசிக்கும் திருமதி இந்திராணி இரத்தினசிங்கம் மல்லாகம் நீதிமன்றத்தில் இடம்பெற்ற மரண விசாரணையின் போது பதில் நீதிவான் மு. சபாநாதனிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தனது வேதனையை வெளிப்படுத்துகிறது அங்கு விரிவான தேடுதல் நடத்தப்பட வேண்டும்—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## சுப்பிரமண்ய சாஸ்திரிகள் சிவபதமெய்தினார்

யாழ்ப்பாணம், ஒக. 15

வேதவிற்பன்னரும் அந்தணகுருமார்களுக்கெல்லாம் குரோர் குருவுமான வியாகரண சிரோன்மணி, வேதஜோதி சுப்பிரமண்யசாஸ்திரிகள் (வயது-73) நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை சிவபதமடைந்தார்.

இவர், கணபதீஸ்வர குருகுலம், சிவானந்த குருகுலம் ஆகியவற்றைப் பல ஆண்டுகளாக நடத்தி ஆலய பூசை, ஆகம நெறிமுறைகளை அந்தணர்களுக்கு பயிற்றுவித்து வந்தார். இலங்கையிலுள்ள அந்தணப் பெருமக்களிற் பெரும்பாலானோர் கோயில் கிரியைகள் சம்பந்தமாக எழும் சந்தேகங்களை இவரிடமே கேட்டுத் தெளிவதுண்டு.

அண்ணாமலை சமஸ்கிருத கலாசாலையில் "வியாசரண சிரோன்மணி" பட்டம் பெற்ற மிகக் குறைந்த எண்ணிக்கையான சமஸ்கிருதப் புலமையாளர்களில் இவரும் ஒருவர் ஆவார்.

இலங்கையின் பலபாகங்களிலும் உள்ள ஆலயங்களில் நடைபெற்ற மகாகும்பாபிஷேகங்களை நெறிப்படுத்திய பெருமையும் இவருக்கு உண்டு. (அ-9)

## மருத்துவ பரிசோதனை

யாழ்ப்பாணம், ஒக. 15

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இலவச பரிசோதனை முகாமில் பங்கு பற்றி பயனடைய விரும்புவோர் இணுவில் இந்துக் கல்லூரியில் நாளை காலை 8 மணிமுதல் 12 மணி வரை அதற்கான பதிவுகளை மேற்கொள்ளலாம்.

வசதி குறைந்தமக்களுக்கு இப் பரிசோதனையின் அடிப்படையில் பிறிதொரு தினத்தில் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும். (உ)

★ ★ ★

தென்மராட்சி, ஒக. 15

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கொடிகாமம் தவசிகுளம் கிராம மக்களுக்கான இலவச மருத்துசிகிச்சை முகாம் ஒன்றை நாளை காலை 9 மணி தொடக்கம் மிருசுவில் ஆஸ்பத்திரியில் நடத்தவுள்ளனர்.

இந்த சிகிச்சை முகாமில் கண், இரத்த அமுக்கம், சலரோகம், வாய்ப்புற்று, தொழுநோய், பொது மருத்துவம் ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளதாக கழகச் செயலாளர் லயன் அ. பொ. செல்லையா தெரிவித்தார். (உ-117)

# ரெலோ குழு இந்தியாவுக்கு

மட்டக்களப்பு, ஒக. 15

ரெலோ அமைப்பின் முன்னாள் தலைவர் ஆரோக்கியநாதன் அடைக்கலநாதனை (செல்வத்தை) வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்குமாறு கேட்டுக் கொள்வதற்காக ரெலோ அமைப்பின் முதல்வர் என். கே. சிவாஜிலிங்கம் தலைமையில் நான்கு பேர் அடங்கிய குழு ஒன்று இந்தியா சென்றுள்ளது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த எஸ். சண்முகநாதன் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அடுத்து—அதிக வாக்குகளைப் பெற்ற வேட்பாளர்கள் பட்டியலில் அடுத்த இடத்தில் இருந்த அடைக்கலநாதனை பதவியேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் அவர் இன்னும் தனது முடிவை வெளியிடவில்லை.

அரசியலில் இருந்து விலகித் தற்சமயம் இந்தியாவில் தங்கியுள்ள அவரைச் சந்தித்து பதவியை ஏற்குமாறு கேட்டுக் கொள்வதற்காகவே இந்தக் குழு இந்தியா சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-21-9)

## கண்ணீர்ப் பூக்கள்

நியாய சிரோன்மணி, சமஸ்கிருத கல்விமான் பிரம்மஸ்ரீ

### சுப்பிரம்மண்ய சாஸ்திரிகள்

அவர்கள் அமரராகிய செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகிறோம். அவர் இழப்பு அந்தணர் குலத்திற்கு ஒரு பெரும் இழப்பாகும். அகில இலங்கைக்கும் ஓர் இழப்பாகும். அன்னாரின் குடும்பத்துக்கு ஆறுதல் கூறுவதோடு அவரது ஆத்மா, சாந்தியடைய பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி!

இங்ஙனம்

ச. சிறீஸ்கந்தராஜாக் குருக்கள்
மாணவன்
(சிறீஜயா)

கோண்டாவில் மேற்கு. (58371)

## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

பொருளியல் திரு. S. வரதராஜன்

புதிய பிரிவுகள் நாளை ஆரம்பம்.

A/L 99 — பிரிவு I 10.00 a.m, பிரிவு II 12.00 p.m
A/L 2000— பிரிவு I 8.00 a.m, பிரிவு II 11.00 a m

யாழ்./பேராதனை பொருளியல் மாணவர்கள் நேர அட்டவணையைச் சனிக்கிழமை பெற்றுக்கொள்ளவும்.

(சி/4564)

## கண்ணீர் அஞ்சலி

யா/கனகரத்தினம் ம. ம. வித்தியாலயத்தில்
எழுதுநராகக் கடமையாற்றிய
செல்வி. மகாலக்ஷ்மி அவர்களின்
பாசமிகு தந்தையார்

### கி. சுப்பிரமண்யசாஸ்திரிகள்

அவர்களின் திடீர் மறைவு கேட்டு அதிர்ச்சி அடைவதுடன் அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்தித்து அவர்களது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
யா/கனகரத்தினம் ம. ம. வி.

(58373)



## பார்மீதில் என்ன பயம்!

தையனார் மையலிற்றான் மயங்கும் மாந்தர்காள்!
வையமெல்லா மாள மருந்துண்டே - ஐயன்றான்
காலையொடு மாலை கடல் சூழிலங்கையில்
சாலவே போற்றுவீர் தான்

பொல்லாப் புழுமலியும் புன்குரம்பை யாமுடலை
நல்லோர் நயப்பரோ நாடோறும் - கொல்லாமற்
கூர்வேலன் பாதங் குறிப்பீ ரிலங்கையீர்
பார்மீதி லென்ன பயம்

- யோகர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல் போய்

# 13 நாள்களின் பின் பெண் எலும்புக்கூடாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக. 15

பதின்மூன்று நாட்களுக்கு முன் வீட்டில் இருந்து புறப்பட்ட பெண்மணி ஒருவர் நேற்று எலும்புக்கூடாக மீட்கப்பட்டார்.

சாவகச்சேரி கச்சாய் வீதிப் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த— ஆறுபிள்ளைகளின் தாயாரான—கோபாலன் எமிலிநோனா (வயது 35) என்பவரே எலும்புக்கூடாக மீட்கப்பட்டார்.

இவர் புறப்படும் போது அணிந்திருந்த தங்கநகைகள், சாறி, சட்டை, சிலிப்பர் என்பனவும், வெறுமையான சோடாப்போத்தலும் அவரின் அடையாள அட்டையும் எலும்புக்கூட்டுடன் சேர்த்து மீட்கப்பட்டன.

இச்சம்பவம் குறித்து இவரது கணவனான கோபாலன் தெரிவிக்கையில்—

கடந்த இரண்டாம் திகதி வீட்டில் இருந்து உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் செல்வதாகப் புறப்பட்டுச் சென்ற தனது மனைவி இதுவரை நாளும் திரும்பவில்லை எனவும்—

தினமும் இவரைத் தாம் தேடிவந்ததாகவும்—

நேற்று, தமது வீட்டில் இருந்து சுமார் ஐந்நூறு மீற்றர் தொலைவில் பிணவாடை வீசுவதை உணர்ந்து அவ்விடத்திற்கு சென்ற சிலர் பற்றைக்கருகில் அடையாள அட்டை ஒன்று கிடந்ததைக் கண்டதாகவும்—

அவர்கள் தன்னிடம் தெரிவித்த தகவலைக் கொண்டு தான் அங்கு சென்று பார்த்த போது தலைவேறு, கைகால்கள் வேறுவேறாக சடலம், எலும்புக் கூடாகக் காணப்பட்டதாகவும்— தெரிவித்தார்.

எலும்புக்கூடு கணவரினால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எலும்புக்கூடு மரண விசாரணையின் பொருட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (உ-15-117-139-173)


எமது

புதிய வெளியீடு!

சாய்குமார் நடித்த

★ பார்த்திபன்

ஒறிஜினல் வெளியீடு

★ சொந்தக்காரன்

★ நண்பர்கள்

ஒறிஜினல் வீடியோ CD வெளியீடு

★ ஜீன்ஸ்

புதிய போஸ்டர்களும் விற்பனைக்குண்டு

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/4565)



INSTITUTE OF INFORMATICS STUDIES

98/99

கல்வி ஆண்டுக்கான

3 ஆம் பருவகாலத்துக்கு உரிய கணனி கற்கை நெறிகள் பல புதிய கணனித் தொழில்நுட்ப அறிமுகங்களுடன் ஆரம்பம்.

05 - 09 - 98

மேலதிக விவரங்கள்.

29 - 08 - 98 உதயனில்

– Director

I. I. S.

(சி/4523)


## இன்றைய கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஒக. 15

டொனால்ட் கணேசகுமார் வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது கால் இறுதி யாட்டம் இன்று காலை 9-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவன் சி. முபீனின் ஆதரவுடன் நடைபெறும் இன்றைய ஆட்டத்தில் மானிப்பாய் பரிஷ் அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதும்.

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக. 15

இலங்கை சைவ மன்றத்தின் ஆதரவுடன் இயங்கி வரும் புலோலி மேற்கு ஆத்தியடி பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி நாளை 16 ஆம் திகதி பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

புலோலி மேற்கு கிராம சேவையாளர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விளையாட்டு விழாவில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-15)

## புளொட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்)

பொருள் கட்டுப்பாடுகள் மக்களைப் பெரிதும் பாதித்துள்ளன. விடுதலைப் புலிகளுக்கு தேவையான எரிபொருள் மன்னார் மாவட்டத்திலிருந்தே செல்கின்றது. எனவே புலிகள் வவுனியாவில் இருந்து எரிபொருளை எடுத்துச் செல்லவேண்டியதில்லை.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு எரிபொருள் வழங்குவதில் இதுவரை கடைப்பிடிக்கப்பட்டுவந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. அது மட்டுமன்றி பூவரசங்குளம் ஊடானபாதை திறப்பதற்கான வேலைகளும் பூர்த்தியாகி உள்ளன.

இந்நிலையில் வவுனியா மக்களை வஞ்சிக்காது புதிய நடைமுறையினை மீள்பரிசிலனை செய்வதே உசிதமானதாகும். இது பற்றி இராணுவ உயரதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்கள் எவையும் வெற்றியளிக்கவில்லை.

எனவேதான் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் கடையடைப்பு நடவடிக்கையில் ஈடுபடத்தாம் தீர்மானித்திருப்பதாகவும் —

வைத்தியசாலைகள், தொலைத் தொடர்பு நிலையங்கள், தனியார் வர்த்தக நிலையங்கள் ஆகியவை தவிர்ந்த ஏனைய அனைத்து அரச திணைக்களங்களும் இந்தக் கதவடைப்பில் கலந்து கொள்ளுமாறும்—

புளொட் அமைப்பு கேட்டுள்ளது. (உ-9)

## கப்பலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கட்டடப் பொருள்கள்.

★ 104 மோட்டார் சைக்கிள்கள்

★ 20 ஓட்டோக்கள்

★ 10 லாண்ட் மாஸ்டர்கள்

★ இரண்டு பாவிக்கப்பட்ட கார்கள்

★ சாராயம், பியர், குளிர்பானங்கள்

★ பல நூற்றுக்கணக்கான பரல் தேங்காய் எண்ணெய்கள்.

★ அரிசி, பருப்பு, சீனி, கோழித்தீன் முதலியவை அடங்கிய ஆயிரம் தொன் பொருள்கள்.

★ ஈருருட்டுக்குப் பயன்படுத்தப்படும் [illegible]

★ தனியாருக்கான காகிதாதிகள் (உ)

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)

கடற் புலிகளின் அணி ஒன்றினால் வழிமறிக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது விமானப்படை விமானங்கள் அக் கப்பலின் மீது குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன என்றும் 'புலிகளின் குரல்' அறிவித்தது.

இந்தக் கப்பலில் மாலுமிகள், சிப்பந்திகள் உட்பட 22பேர் இருந்தனர். அவர்களில் கப்டனும் மற்றும் 17 பேரும் இந்தியர்களாவர்.

ஜே. எம். பி. ஜயசுந்தர, எம். டபிள்யூ. சு. பண்டார, பி. எம். வி. எஸ். செனிவிரத்ன, பி. எம். பி. சர்ஜாத் ஆகிய நான்கு பேரே இலங்கையர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-21-3-7)


DCS

College of Computer Technology

DIPLOMA COURSES 98/99

The above courses will commence on Monday 7th September for those students who have sat the A/L exams.

DCS,
College of Computer Technology,
124/2, Palaly Road,
Thirunelvely,
P O Box 144,
Jaffna.

(58339)



ஆங்கில வகுப்பு

பல்கலைக் கழக மாணவர்கள், வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்கள், உயர் கல்வியைப்பெற இருக்கும் மாணவர்கள் ஆகியோருக்கான பிரத்தியேக ஆங்கில வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

நேரில் விண்ணப்பித்து அனுமதியைப் பெறலாம்.

இல. 27, முதலாம் ஒழுங்கை,
பாடசாலை வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(சி/4563)


## எட்டுப்...

(முதலாம் பக்கத் தொடர்)

சர்வதேசக்குழுவின் அலுவலகத்தில் வைத்து சடலங்கள் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

இச்சடலங்களை வவுனியாவுக்கு எடுத்துச் செல்வதற்கான ஒழுங்குகளை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நேற்று நண்பகல் செய்திருந்தது. [உ-7-164]

## யாழ்.-...

(முதலாம் பக்கத் தொடர்)

களில் இன்று முதல் இரவு 8-30 மணி தொடக்கம் அதிகாலை 4மணிவரை ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும்.

மேற்படி இரு உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கும் பொறுப்பான இணைப்பதிகாரியும் 512 படையணியின் கட்டளை அதிகாரியும் யாழ். நகரத் தளபதியுமான பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் இவ்வாறு அறிவித்துள்ளார்.

இப்பிரதேசங்களில் நேற்று வரை இரவு 9.00 மணி தொடக்கம் அதிகாலை 4.00 மணி வரை ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்து வந்தது. (உ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

களுக்கு மாறாக அப் பிரதேசத்தில் கப்பல் தரித்திருப்பதனால் அதனை அங்கிருந்து நகர்த்திச் செல்லுமாறு கப்பலின் கப்டனுக்கு உத்தரவிட்டனர்.

எனினும் இந்தப் பணிப்புரைகளுக்கு அமைய எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடற்படையினர் தமது கோரிக்கைகளை காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை மீண்டும் மீண்டும் தெரிவித்தனர்.

முல்லைத்தீவுக் கடலில் இருந்து அப்பால் செல்லத் தவறியதனால் கப்பலை அங்கிருந்து நகர்த்துமாறும்—

அல்லது சகல மாலுமிகளுடன் அதனைக் கைவிடுமாறும் —

கப்பல் கப்டனுக்கு கடற்படையினர் உத்தரவிட்டனர்.

இதனை அடுத்து கடற்படையினர் கப்பலை நோக்கி எச்சரிக்கையாகச் சுட்டார்கள்.

இந்தக்கப்பலைச் சுற்றிவளைத்த கடற்படை வள்ளங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இந்தக் கப்பலின் நடமாட்டத்தைக் கண்காணித்துக் கொண்டிருந்த இலங்கை விமானப் படையின் விமானம் ஒன்றை நோக்கி ஏவுகணைகளும் ஏவப்பட்டன. பிற்பகல் 2 மணியளவில் இந்தக் கப்பலை நோக்கி பல வள்ளங்கள் சென்று வருவதை அவதானிக்க முடிந்தது.

இந்தக் கப்பலில் இருந்த விடுதலைப் புலிகள் கடற்படை வள்ளங்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள்.

எனினும் கடற்படையினர் அக் கப்பலின் மாலுமிகள் தமது பணிப்புரையை ஏற்று நடக்க மேலும் 30 நிமிட அவகாசத்தை வழங்கினார்கள். அது கைகூடாத பட்சத்தில் விமானப் படையினர் அக்கப்பலைத் தாக்கியழிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டார்கள்.

இந்தக் கப்பலில் 21மாலுமிகள் இருந்தார்கள் இலங்கையர்கள் உட்பட பல இனத்தவர்கள் இந்த மாலுமிகளில் அடங்குவர்.

விடுதலைப் புலிகளுக்கு அபாயகரமான பொருள்களை எடுத்துச் சென்று வழங்க விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து கப்பலின் கப்டன் சூழ்ச்சி செய்கிறார் என்ற சந்தேகம் கொண்ட பாதுகாப்பு அதிகாரிகளுக்கு, அவரின் நடத்தை மேலும் சந்தேகத்தை உறுதிப்படுத்தியதனால், இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டி இருந்தது — இவ்வாறு பாதுகாப்பு வட்டார அறிக்கை மேலும் தெரிவித்தது. (உ-9)

## அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 15

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இயங்கும் தொலைக் கல்வி நிலையத்தில் தொடர் கல்விச் செயலமர்வில் பங்குபற்றும் ஆசிரியர்களுக்கான பாடநெறி நாளை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறுமென சிரேஷ்ட போதனாசிரியர் அறிவித்துள்ளார். (உ)

## கடத்தப்பட்ட..

(முதலாம் பக்கத் தொடர்)

இறக்கும் இடத்தில் வைத்து இந்தக் கப்பலில் இருந்து பொருள்களை இறக்க முடியாது என்றும்—

அந்த இடத்தில் இக்கப்பல் தரிப்பதற்குத் தேவையான கடல் ஆழம் இல்லை என்றும் —கூறப்பட்டது.

ஆனால் அந்த இடத்தில் இருந்து இரு மைல் தூரம் தள்ளியே இந்தக் கப்பலை நிறுத்தி பொருள்களை இறக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த 10 ஆம் திகதி பின் இரவு— 11 ஆம் திகதி அதிகாலை — கொழும்பிலிருந்து கப்பல் புறப்பட்டது.

நேற்று மாலை அது காங்கேசன்துறையை அடைவதாக இருந்தது.

ஆனால் நேற்று அதிகாலை 2-30 மணியளவில் அது வழிமறிக்கப்பட்டு முல்லைத்தீவு கரைப் பிரதேசத்தை நோக்கிக் கடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நேற்று மாலை கப்பல்மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

கப்பல் தாக்கி அழிக்கப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்த போதிலும்—

விமானப்படை விமானங்கள் அக்கப்பலின் மீது குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன என்று அறிவித்த போதிலும்—

குண்டுத் தாக்குதலில் தீப்பற்றிய கப்பல் முற்றாக அழிந்ததா? அல்லது முற்றாக மூழ்கியதா? அல்லது தரை தட்டியநிலையில் தீ அணைக்கப்பட்டு கப்பல் இன்னும் நீருக்கு மேல் தெரிகின்றதா? தொடர்ந்து மிதந்து கொண்டிருக்கின்றதா? அதில் உள்ள பொருள்களை அகற்றும் வேலை தொடர்கின்றதா?— என்பவை குறித்து சுயாதீனமான தகவல் எதனையும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

(உ-3-7-9-164-21-8)

## நல்லூர்,...

(முதலாம் பக்கத் தொடர்)

மீறிய நிலையில்பழகுவதுடன் மற்றவர்களுக்குத் தொல்லை கொடுப்பதாகவும் மூத்த பிரஜைகளும், கல்விமான்களும், சமூக அபிமானிகளும் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

வணக்க ஸ்தலங்கள் புனிதமானவை. அங்கு ஆசாரங்களும் ஒழுக்கமும் கடைப்பிடிக்கப்பட வேண்டியது அவசியமாகும். பக்தர்களுக்குத் தொல்லை கொடுக்கும் விதத்தில் குழப்பம் விளைவிக்கும் வகையில் நடந்து கொள்வதை அனுமதிக்க முடியாது. ஆலயங்கள் காவாலித்தனம் நடத்துவதற்கான இடங்கள் அல்ல என்பதனை எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும்.

ஆகையால் ஆலயத்தையும் அதன் சூழலையும் மாசுபடுத்துவோரைத் தண்டிப்பதில் எவ்வித தயக்கமும் காட்டப்பட மாட்டாது.

நேற்று முதல் யாழ். மாநகர சபை அலுவலகத்தில் தற்காலிக பொலீஸ் நிலையம் ஒன்று இயங்குகின்றது. ஒழுக்க நெறிகளுக்கு ஒவ்வாதமுறையில் நடந்து கொள்வோர் குறித்துஉடனுக்குடன்பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு அடியார்களைக் கேட்டுக் கொள்கிறேன் குற்றம்இழைப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sporting Goods
For
Genuine & Quality
Goods
Try us First
We Give
The Lowest Price
Tel: 021-2030



**Aruns Sports Spot**
347, Kasthuriyar Road, Jaffna.
(C/4538)

கருத்துக் கலசம் மயூரா

## நல்லாருடன் சேர்தல்

மனிதனின் உலக வாழ்வு மிகவும் குறுகியது. நூறுக்குக் குறைந்த ஆண்டுகளே இங்கு அவன் வாழ்கிறான். விஞ்ஞானம் வளர்ந்து உயிர் காப்பதற்குப் பல மருந்துகளைக் கண்டுபிடித்த போதிலும், அரை வயதில் இறுதிப் பயணம் செய்வோரே அதிகமானோர்.

கடல் அலை கொந்தளித்து எழும் நடுக்கடலில் சிக்குண்டு தவிக்கும் கப்பல் போன்று மனித வாழ்க்கை அந்தரமானது. இருதலைக் கொள்ளி எறும்பு போன்று தவிப்பும், அழிவும் அபாயமும் உள்ளது மனித வாழ்க்கை. நாகபாம்பு குடிகொண்ட குடில் ஒன்றில், அது எப்போது கடிக்குமோ என்ற அச்சத்துடன், வாழும் குடியானவன் போன்றது உலக வாழ்க்கை.

இவ்வாறு மனித வாழ்வின் நிலையாமை, அந்தரமும், அவலமும், அச்சமும் நிறைந்த தன்மை என்பனவற்றை விவரிப்பதற்கு, விளக்குவதற்கு அறிஞர்களும், அனுபூதிமான்களும் வேறு பலபொருத்தமான உதாரணங்களைக் காட்டியுள்ளனர்.

அதேபோன்று வாழ்க்கைப் பயணத்தில் மனிதன் எதிர்கொள்ளும் தடைகளை, கஷ்டங்களை நீக்குவதற்கான வாழ்க்கை நெறிகளையும், அறங்களையும் மூதறிஞர்கள், நாயன்மார்கள், வகுத்துச் சென்றுள்ளனர்; மூதுரைகள், பாடல்கள் மூலம் புகட்டியுள்ளனர்.

வாழ்க்கையை எப்படியும் வாழலாம் என்ற கருத்துடையவர்களும் இக்காலத்தில் உளர்.

வகுக்கப்பட்ட நன்னெறிகள், வரன்முறைகள், நீதிகளின் அடிப்படையில் இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்பவனே இறுதியில் தடைகளைத் தாண்டி வெற்றி காண்கிறான்.

வாழ்க்கையின் வெற்றிக்கு நல்லொழுக்கமும், நீதிக்குத் தலைவணங்கும் தன்மையும் அவசியம். அறிஞர்களின் அறிவுரைகள் மக்கள் தார்மீக வாழ்க்கையைத் கைகொள்வதற்கே வழிநடத்துகின்றன.

ஒருவனது வாழ்க்கை நல்ல வாழ்க்கையாக அமைய வேண்டுமாயின் அவன் நல்லாருடன் சேர்ந்து பழகுதல் அவசியம்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலம் மிக்க நல்லார் சொற்கேட்பதுவும் நன்றே; நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்று—என்ற ஔவைப்பிராட்டியின் மூதுரை தரும் செய்தி அதுவே.

வாழ்க்கை சீராகவும் சிறப்பாகவும் அமைவதற்கு நல்லொழுக்கம் அத்தியாவசியமானது. அறிஞர்களின் நல்ல அறிவுரைகளைக் கற்று அதன் வழி ஒழுகுவதும், நல்லவர்களோடு உறவு கொள்வதும் நல்லொழுக்கத்தின் விளை நிலங்கள்.

இன்றைய இளம் சந்ததியினர் இதனை மனதிற் கொண்டு செயற்பட்டால், தற்காலத்தில் தலையெடுத்துள்ள சமூகக் கேடுகள் பலவும் நீங்கி விடும்.

# உடலும் உள்ளமும் நலந்தானா?

பகுதி 1

மனதை அழுத்தும் சுமைகளோ அல்லது உடலில் ஏற்படும் மாற்றங்களோ—தாக்கங்களோ இதயத்தைப் பாதித்துவிடக்கூடும் — மார்பு வலிவந்து ஆளை முடித்துவிடக்கூடும் — என்றெல்லாம் தினம் தினம் அஞ்சிச்சாகும் மனிதர்களைக் கொண்ட உலகம் இது.

உயர் இரத்த அழுத்தம் என்று கலங்காமலும், மார்புவலி வந்துவிடுமோ என்று கவலைப்படாமலும் அசண்டையாகத் திரிந்து வில்லங்கத்தை விலைக்கு வாங்கும் மனிதர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இவ்விரு சாராரிலும் எவர் புத்திசாலிகள்? எவரை இலகுவில் மார்புவலி பதம்பார்க்கும்?—என்றெல்லாம் சரிவரக் கணித்திடுதல் இயலுமா? நிபுணர்களின் கருத்துக்களும் புள்ளிவிவரங்களும் ஒன்றுக்கொன்று முரண்டுபிடிக்கின்றன.

நேற்று இருந்தவர் இன்று இல்லை. காரணம் மார்புவலி என்பார்கள். இதய நோய் இருக்கின்றது என்பதைத் தெரிந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் கொடுக்காமலே இது சிலவேளைகளில் ஆளைப் பதம்பார்த்து விடுகிறது. அதற்கு இளமை, முதுமை என்றெல்லாம் வேறுபாடுகள் தேவையில்லை.



இதயநோய் கண்டு மரணம் வரப் போகிறதே எனப் பயந்து பயந்து மருந்தும் கையுமாகவே பல தசாப்தங்களைக் கழித்துவிடுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

புகைப்பவர்களுக்கும், குடிப்பவர்களுக்கும் மார்புவலி வரும் சந்தர்ப்பங்கள் அதிகம் என்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் முதுமைவரை ஆரோக்கியமாக வாழ்வதும் உண்டுதான்.

உயர் இரத்த அழுத்தம் உள்ள வரை—நீரிழிவுநோய் கண்டவரை—என்ன மனக்கவலை என்று வைத்தியர் கேட்கிறார். கவலைகள் அதிகம் உள்ள போது ஆஸ்துமா இழுப்புக்கூட அதிகரிப்பது உண்மை எனலாம்.

அப்படியானால் வைத்தியம் உடலுக்கா மனதுக்கா அவசியம் தேவைப்படுகிறது? இரண்டையுமே ஆரோக்கியமாக வைத்திருந்தால்தான் வாழலாம் என்ற நிலைமை.

உடல்நிலையைக் கண்டறிய ஆயிரமாயிரம் கருவிகள்—கணனிகள் உலகினில் உண்டு. விதவிதமான வைத்திய வசதிகளும் உண்டு. ஆனால் உள்ளத்து நிலையையினைக் கண்டறியும்பக்குவம் அவரவரிடம்தான் வரல் வேண்டும். தனக்குத்தானே வைத்தியம் பார்க்கத் தெரியவேண்டும்.

கடல்போலப் பரந்த மனதில்—கடுகளவேனும் துன்பம் துயரம் புகுந்து அழுத்திக்கொண்டே இருக்குமானால் உடல் தளரத்தான் செய்யும். இதயம் வலிக்கத்தான் செய்யும்.

ஆரோக்கியத்தில் பாதி உடலிலே தங்கி உள்ளது. மீதி உள்ளத்திலே தேங்கி உள்ளது. இரண்டையுமே சரிவர ஆளாதபோது சிக்கல் [illegible]. இதயம் அமைதி இழக்கிறது. இதயம் வலி எடுக்கிறது. அமைதியின்மை இதயத்துக்கு மேலதிக வேலைப்பழுவைக் கொடுக்கிறது.

அவன் அவளைத் தீவிரமாக விரும்புகிறான். அவளோ அவனை அலட்சியம் செய்து தனது இலட்சியப் பயணத்தில் குறியாக இருக்கிறாள். அவன் அவளுக்காக புழுவாய்த் துடிக்கிறான். அவளோ இது வெறும் உடற்பசி — காமம் என்று அவனை ஒதுக்குகிறாள்.

அவனது இதயம் சுக்குநூறாகப் பிளக்கிறது. பாறாங்கல்லை மனதில் ஏற்றிய சுமை அழுத்த அழுத்த அவன் தவிக்கிறான். அவளோ அதைப் போலி என்றும் நடிப்பு என்றும் ஒதுக்கும் போது அவனது வேதனைகள் மேலும் பலமடங்கு ஏறுகின்றன.

விளைவு? அது உடலையும் பாதிக்கத்தானே செய்யும். இந்த உடல் உள்ளப் பாதிப்புகளுக்கு அவன் தன்னை அவளிடமா காப்புறுதி செய்து கொள்ள முடியும்? விளைவுகளைச் சந்திக்க அவனுடல் தயாராகத்தான் வேண்டும்.

இப்படியான நீண்டநாள் தாக்கங்கள்கூட மார்பு வலியைத் தந்துவிடலாம் என்கிறார்கள் நிபுணர்கள்.

போதிய வருமானம் இன்மையும், கடன் பழுவும் மனதை அழுத்தும் போது அதன் தாக்கம் பாரதூரமானது. இதற்கெல்லாம் அடுத்தவர் வந்து ஆறுதல்தர இயலாது. 'கடன்பட்டார் நெஞ்சம்போல' என்று எப்போதோ கூறிவிட்டார்கள் இக்கலக்கம் பற்றி.

வீட்டிலும் சூழலிலும் தினம் தினம் ஏற்படும் சர்ச்சைகள் மனதை நிம்மதியடைய விடுவதில்லை. குடும்பத் தகராறுகள், பிள்ளைகளின் நடத்தைகளால் ஏற்படும் மனப்பாதிப்புகள், துணையுடனான பாலியல் முரண்பாடுகள் அல்லது விரக்தி போன்றன கூடவே இருந்து கழுத்தறுக்கும் சக்திகள். அன்றாடம் இவை சிறிது சிறிதாகவே தென்பட்டாலும் தாக்கம் சிறுதுளி பெருவெள்ளம் ஆகிறது. மனைவி திரும்பிப் படுத்தால் மனது மாய்கிறதா?

இப்படியான தாக்கங்களை வெல்லவோ அலட்சியப்படுத்தவோ மனதைப் பழக்கிக்கொண்டால் ஓரளவுக்கு உடற்பாதிப்புகளைத் தவிர்த்துவிடலாம்தான். சொல்வது சுலபம். சமாளிக்க ஞானியாக அல்லவா இருக்க வேண்டும்?

அயல் வீட்டுக்காரர் ஓர் எரிச்சல் தரும் பேர்வழியாக உங்கள் கண்களில் படுகிறார் என்றால் அதுகூட ஒரு கோளாறுதான். சிலவேளைகளில் அவர்கூட தீவிரமாக இருக்கலாம். அல்லது உங்களுக்கு அவரது புறக்கணிக்கக் கூடிய சிறு செயல்கள்கூட எரிச்சலூட்டலாம்.

**மூ. சிவநேசன்**

அவரைத் திருத்தித் திருப்திப்பட முயல்வதைக் காட்டிலும் உங்கள் மனதைக் கட்டி மேய்த்துச் சமாளித்துவிட்டால் வெற்றி உங்கள் உடல், உள ஆரோக்கியத்துக்குத்தான் என்பதை மறந்துவிடாதீர்கள்.

நானாந்த பழக்கவழக்கங்களைச் சீர்தூக்கிப் பார்த்துக் கூட மனநிலைச் சமநிலையை ஓரளவுக்கு அளந்தறியலாம். அழுத்தம் அதிகரிக்கும் போது இவ்வழமைகளில் மாறுதல் ஏற்படச் செய்யும்.

காலையுணவில் நாட்டம் அதிகமில்லை என்றால் ஏதோ சிக்கல் இருக்கிறது என்று அர்த்தம் கொள்ளலாம். அப்படியானால் விரதம் கூட ஏதாவது மன விரக்தியின் வெளிப்பாடுதானோ?

விடிந்ததும் பல்துலக்கி, உடலைச் [illegible] பயிற்சிகள் செய்து உடலில் அக்கறை காட்டுபவர்களின் மனதை அழுத்தும் சுமைகள் குறைவாகவே இரு[illegible] உட[illegible] அதிகரிப்பைக் கவனித்து உணவில் அக்கறை செலுத்துபவர்களும் ஆரோக்கியமாகவே இருக்க முனைகிறார்கள்.

இனிப்பு, உப்பு, கொழுப்பு உணவுகளை அதிகம் உண்ண விரும்புபவர்கள் உணவு கிடைத்தால் உடலைக் கெடுக்கிறார்கள். கிடைக்காதபோது மனதைக் கெடுக்கிறார்கள். இரண்டுமே பாதிப்புத்தான்.

நாவினால் சுவையின்பம் அனுபவிப்பதை விடுத்து மனக்கட்டுப்பாடாக இருந்து உடலைத் தக்கவைக்கும் மனோபக்குவம் பெற்றவர்கள்பாடு வெற்றி வெற்றிதான்.

வாகனத்தில் ஏறியவுடன் இருக்கைப் பட்டிகளைப் பொருந்துபவர்களோ, மோட்டாசைக்கிள் என்றவுடன் ஹெல்மெட்டைப் போடுபவர்களோ பயந்தவர்கள் என்ற பழிப்புக்கு ஆளாகக் கூடாது. அவர்கள் தம்மீது காட்டும் ஓரளவு கணிசமான அக்கறைகூட ஓர் உள ஆரோக்கியத்தையே பிரதிபலிக்கிறது எனலாம்.

கோபமோ பதற்றமோ ஏற்படும் போது அதைஉணர்ந்து தன்னிடம்ஏதோ கோளாறு என்று நின்று நிதானித்துச் செயற்படுகிறவர்கள் தப்பிவிடுகிறார்கள். உங்களுக்குக் கோபம் புட்டுக்கொண்டு வரும்போது எதிரில் இருப்பவர் மல்லுக்கட்ட வராமல் ஒதுங்கி விடப்பார்க்கிறார்கள் அல்லது புன்னகை பூத்துச் சமாளிக்கிறார் என்றால் நீங்கள் சமாதானம் அடையத்தான் வேண்டும். தப்பினால் சிக்கல் உங்களிடம் உண்டு என்றுதான் அர்த்தம்.



சின்னச்சின்ன விடயங்களுக்கெல்லாம் கோபம் பொத்துக்கொண்டு வருகிறதா? அதிகம் துள்ளிக்குதிக்கிறீர்களா? அதிகாரத்தைப் பயன்படுத்தி அடுத்தவரை நசிக்கத் துடிக்கிறீர்களா? குருதி ஓட்டம் பொங்கிப் பிரவாகம் எடுக்கிறதா? உங்கள் நாடித்துடிப்பு உங்களுக்கே விளங்குகிறதா? அப்படியானால் சற்று நிதானம் அவசியம். காரணம் கோளாறு உங்களிடம்தான்!

நீங்களாகவே விரும்பி உடலுக்குச் சற்று ஓய்வு கொடுக்கிறீர்களா? அப்படியென்றால் உள்ளமும் ஆரோக்கியமாக இருக்கிறது என்றுதான் அர்த்தம்.

அளவுக்கு அதிகமாகப் புகைப்பதுதான் மனதை ஆற்றும் வழியாகப் படுகிறதா? குடிக்கும்போது மூக்கு முட்டக் குடிக்கச் சொல்லி மனது அழுத்துகிறதா? மனதைச் சமாதானம் செய்ய வேண்டித்தான் குடிக்கிறீர்களா?—அப்படியென்றால் சிக்கல் சிக்கல்தான்.

ஒரு விளையாட்டாக—ஒரு சந்தர்ப்பத்துக்காக—ஒரு சுவாரசியத்துக்காக—குடித்துவிட்டால் அது பாதிப்பான விடயம் ஆகிவிடாது. அங்கே மனம் ஆரோக்கியமாகவே இருக்கிறது எனலாம். நினைத்தபோதெல்லாம் தவிர்க்கும் சக்தி உங்களிடம் இருந்தால் ஓ. கே...!

மன அழுத்தத்தை மதிப்பீடு செய்

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் கப்பல் பயண ஏற்பாடு இழுபடுகிறது;

# பிரதேச செயலகங்கள் தர்மசங்கட நிலையில்!

## நல்லூரில் வரம்பு மீறும் இளைஞர்

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்துக்கு நாளாந்தம் மக்கள் கூட்டம் அதிகரித்து வருகிறது; இந்த மக்கள் கூட்டத்தில் உண்மையான பக்தர்கள், அடியார்களின் எண்ணிக்கை பத்துச் சதவீதமே இருக்கும் என்று உத்தேசமாக மதிப்பிடப் படுகிறது.

மிகுதியானோரில் பெயருக்குக் கோயிலுக்குச் செல்வோர், கடைகளில் பொருள்கள் வாங்குவோர், மாலைப் பொழுதை ஒய்வாகக் கழித்துப் பொழுதுபோக்குவோர், சேட்டை பகிடி விட்டுப் பொழுதைக் கழிக்கும் இளவட்டங்கள் என்று பல ரகத்தினர், பலவகையினர் அடங்குவர்.

நல்லூர்த் திருவிழாவை ஒருகளியாட்டக்காலமாகவே; வெளியார் நினைக்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்து வருவது ஆன்மீகத்திலும், சமயாசாரங்களிலும் ஈடுபாடும், நாட்டமும் உடையவர்களின் மனதைப் புண்படுத்துவதை அவதானிக்க முடிகிறது.

அதுவும், இந்த வருடத்தில் திருவிழாக் காலத்தில் இளைஞர்கள் நடந்து கொள்ளும் முறை எமது சமயத்தையும், கலாசாரத்தையும், சமூகப் பண்புகளையும் மாசுபடுத்தும் வகையில் வரம்புமீறி விட்டது. இதனைச் சுட்டிக் காட்டியும் கண்டித்தும் பலர் எழுதியுள்ளார்கள்.

ஆலயத் திருவிழாக் காலம் சண்டை, சச்சரவுகளைத் தோற்றுவித்திருப்பதை கட்டுரையாளர் ஒருவர் உதயனில் வெளிப்படுத்தி இருந்தார்.

இந்தமோசமான நிலையை நீக்குவதற்கு இளைஞர்கள் மனம் திருந்தவேண்டும் என்பதே மக்களின் ஏகோபித்த வேண்டுதலாக உள்ளது. மற்றவர்கள் எங்களைப் பார்த்துக் கேலி செய்யும் அளவுக்கு, ஆலயங்களையும், ஆலய விழாக்களையும் மாசுபடுத்தும்வகையில் இளையவர்கள் சின்னத்தனமாக நடந்து கொள்ளக்கூடாது. அறிவுரை கூறியோ அல்லது நடவடிக்கை எடுத்தோ அவர்களைத் திருத்தியாக வேண்டும். வெளிநாட்டில் இருந்து சொந்த ஊர் வந்திருக்கும் பெண்கள் சிலர் தமது புதிய 'நாகரிகத்தை' ஆலயத்தில் காட்ட வருவதும் இம்முறை வரம்பு மீறலுக்கு ஒரு காரணம் என்று அறியப்படுகிறது.

நல்லூர்த் தீர்த்தத்திருவிழாவன்று இளவட்டங்கள் பெண்களைத் தண்ணீரால் நனைத்து, ரசித்து, தொல்லை கொடுப்பதை இம்முறை தடுக்கவேண்டும் என்று அன்பர் ஒருவர் தெரிவித்தார்.

ஒரு சில வருடங்கள் இந்தச் "'சினிமாக் காட்சிகள்" 'இடம் பெறாமல் தடுக்கப்பட்டிருந்தன. இவ்வருடம் ஆலயச் சூழலில் நடைபெறும் காவாலித்தனத்தையும், அடாவடித்தனத்தையும் பார்க்கும் போது தீர்த்த நாளில் என்னென்ன நடைபெறுமோ என்று மனம் பயப்படுகிறது. இந்த விடயத்தில் பெரியவர்கள் ஆலய நிர்வாகத்துக்கு உதவிசெய்து அபச்சாரத்தைத் தடுக்கவேண்டும்—என்றார் அந்த அன்பர்.

* * *

"கப்பல் வந்தது; கப்பல் வந்தது; மிதந்து வந்தது பார்"—என்ற சிறுவர் கவி போன்று அரசாங்கமும் தமிழ் மக்களைப் பார்த்து "கப்பல் வருகுது; கப்பல் வருகுது; காத்திருந்துபார்"—என்றுநாளாந்தம் கவிதை பாடிக் கொண்டிருக்கிறது.

மாரி காலத்தில் வெள்ளத்தைக் கண்டதும் சிறுவர்கள் காகிதத்தில் கப்பல் செய்து விளையாடி மகிழ்வர். தாம் "கட்டிய" கப்பல் வெள்ளத்தில் அள்ளுண்டு போகாமல் அல்லது மூழ்கிப் போகாமல் தாம் குறித்த இலக்கைப் போய் அடைந்து விட்டால் அவர்கள் அடையும் மகிழ்ச்சிக்கு அளவில்லை.

ஆனால் கப்பலில் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு ஆவலுடன் காத்திருக்கும் தமிழ் அகதிகளுக்கு — இடம் பெயர்ந்தோருக்கு — அத்தகைய ஒரு மகிழ்ச்சி இப்போதைக்குக் கிடைக்குமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது!

இந்த வாரம் கப்பலில் ஏறிச் சொந்த இடம் போகலாம்: அடுத்த மாதம் போகலாம்; அதற்கு அடுத்த மாதம் செல்லலாம் என்று மனதில் இலக்குகள் வைத்து அவற்றை அடைய முடியாமல் ஏக்கப்பெருமூச்சு விட்ட வண்ணம் உள்ளனர் ஆயிரக் கணக்கானோர்.

வவுனியாவிலிருந்தும் மன்னாரிலிருந்தும் தமது குழந்தை குட்டிகளுடன், வயதான தாய் தந்தையருடன்— நோயாளிகளான நடக்க முடியாத பெற்றோருடன் — கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வருவதற்கு மொத்தம் 14,000 பேர் காத்திருக்கின்றனர். அகதிமுகாம்களில் இருந்து கொண்டு கப்பல் பயணத்துக்குப் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கையே இதுவாகும். திருமலையில் 1,000 பேர், மன்னார் பேசாலையில் 10,000 பேர். வவுனியாவில் 3,000 பேர் என்று கணக்கு நீளுகிறது!

இவர்களைவிட, திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான கப்பற் போக்குவரத்து ஒழுங்காக, கிரமமாக நடைபெற்றால் யாழ்ப்பாணம் வருவதற்கு மேலும் ஆயிரக்கணக்கானோர் திட்டமிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து சென்று வன்னிப் பிரதேசங்களில் வாழ்ந்தவர்களை, வவுனியாவுக்கு வருமாறு அரசாங்கம் "வெற்றிலை வைத்து" வரவேற்றது. 1996 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மூன்றாம் வாரத்தில் அரசு இது தொடர்பான தனது உத்தியோக ரீதியான அழைப்பை விடுத்தது.

அதனைத் தொடர்ந்து ஆரம்பத்தில் திருமலை—காங்கேசன் கப்பற் சேவை விட்டு விட்டாயினும் ஓரளவு திருப்திகரமாக நடைபெற்றது. ஆனால் இப்போதோ கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகித் தொடர்கிறது.

1997 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் திகதிக்குப் பின்னர் திருமலை — காங்கேசன் பயணிகள் கப்பற் சேவை மந்தம் அடையத் தொடங்கியது. படிப்படியாகத் தேய்ந்து இப்போது அதமம் நிலையை எட்டியுள்ளது.

கப்பல் போக்குவரத்து நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்படுவதும் பின்னர் பிற்போடப்பட்டுப் புதிய திகதிகள் அறிவிக்கப்படுவதும் அரச தரப்பின் வழமையான நடைமுறையாகிவிட்டது.

அனேகமாகச் சரக்குக் கப்பல்களே பயணிகள் கப்பல்களாகவும் பயன்படுத்தப்படுவதால் அறிவிக்கப்பட்ட திகதிகளில் கப்பற்சேவை இடம் பெறுவதில்லை. சில வேளைகளில், கப்பல்கள் பழுது பார்க்கப்படுவதால் அல்லது பழுதடைந்துவிட்டால் திட்டமிட்டவாறு கப்பற்சேவையை நடத்த முடியவில்லை என்றும் கூறப்படுவது உண்டு.

சரக்குக் கப்பல்களைப் பயன்படுத்துவதால் உண்டாகும் தடங்கல்களையும் ஒழுங்கீனங்களையும், ஒத்திவைப்புகளையும் நீக்குவதற்காகத் தென்கொரியாவிலிருந்து "ஜனநாயகம்" என்ற பயணிகள் கப்பல் கொள்வனவு செய்யப்பட இருப்பதாகவும், அதன் பின்னர் பயணிகள் கப்பற்சேவை கிரமமாகவும் ஒழுங்காகவும் நடைபெறும் என்றும் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் தெரிவிக்கப்பட்டது.

உள்ளும் புறமும்
குருமணி

அகதிகளும், யாழ்ப்பாணம் வரவிருக்கும் ஏனையோரும், ஏன் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கு விமானத்துக்குச் சுமையாகப் பணம் செலுத்த வசதியற்ற சாதாரண பொதுமக்களும் அரசின் மாற்று ஏற்பாட்டைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால் அந்த மகிழ்ச்சியும் எதிர்பார்ப்பும் அர்த்தமற்றவையாகிக் கரைந்து போயுள்ளன.!

"ஜனநாயகம்" குறித்த தகவல் வெளியான சில நாள்களில் அந்தக் கப்பலை எந்த நாட்டுக் கொடியுடன் சேவையில் ஈடுபடுத்துவது என்பது பிரச்சினைக்குரியதாகி இருப்பதாகச் சொல்லப்பட்டது;

இப்போது —

அந்தக் கப்பல் தொடர்பாகக் கொரிய நாட்டில் இரண்டு வழக்குகள் தாக்கலாகி இருப்பதால் இப்போதைக்கு அதனைக் கொண்டு வந்து சேவையில் ஈடுபடுத்துவது சாத்தியமானது அல்ல என்று கூறப்படுகிறது! அதனால் "லங்கா முடிதா" சரக்குக் கப்பலையே அகதிகளை ஏற்றி இறக்குவதற்கு உபயோகிக்க இப்போது முடிவாகி இருக்கிறது.

அகதிகளை யாழ்ப்பாணம் கொண்டு வந்து சேர்க்கும், காங்கேசன் — திருமலை கப்பற் சேவையை நடத்தும் அலுவல் சனியன் பிடித்தது போல மக்களை அலைக்கழிக்கிறது; ஏமாற்றுகிறது; கைகூடாத காரியமாகத் தொடர்கிறது!

இவ்வாறு கப்பற் சேவை ஒழுங்கு செய்யப்படுவதும், பின்னர் ஏதோ ஒரு வகை — புதிய வகை — நியாயப்படுத்தலுடன் ஒத்திவைக்கப்படுவதும் ஏன்? உண்மையான காரணம் என்ன? உள்நோக்கம் யாது?

இவை பற்றிய விளக்கம், விவரம் என்பன மூடு மந்திரமாகவே உள்ளன.

"ஜனநாயக" த்தை நோக்குவோம். ஆரம்பத்தில் அந்தக் கப்பல் அத்தியாவசிய சேவைகள் பகுதியின்சேவைக்கெனச் சொந்தமாகக் கொள்வனவு செய்யப்படும் என்று கூறப்பட்டது; பின்னர் குத்தகை அடிப்படையில் நாளொன்றுக்கு 7750 டொலர் கட்டணத்தில் ஒழுங்கு செய்யப்படுவதாகச் சொல்லப்பட்டது.

[illegible] சேவைக்கு உகந்ததா என்று சோதனை செய்வதற்கும் என்று அரச அதிகாரிகள் கொரியா சென்று வந்தனர். அதற்கான செலவு பல்லாயிரம் ரூபாவாகும். குத்தகை எழுதுவதற்கு முன்னர் "ஜனநாயகம்" மீது வழக்குகள் இருப்பது தெரியாமல் போனது ஏன்?

இத்தகைய செயல்கள் அரச அதிகாரிகள் மக்கள் நலன் நாடாமல் தமது நலன்களைக் கருதியும், அவரவர் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவும் நடைபெறுகின்றனவா என்ற சந்தேகத்தை எழுப்புகின்றன.

இது குறித்து தமிழ்க் கட்சிகள் வாய்பேசாது இருப்பது ஏனோ? வன்னிக்கு இடம் பெயர்ந்து சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாகி வரும் மக்களின் நலனில் அரசாங்கத்தைப்போன்று, அவர்களுக்கும்அக்கறை இல்லாமற் போய்விட்டதோஎன்று கேட்கிறார் ஸ்ரீமான் பொதுஜனம்.

காங்கேசன்—திருமலை கப்பற்சேவையை ஒழுங்காக, சீராக நடத்தினால், கொழும்பு மற்றும் பிற மாவட்டங்களுக்குத் தேவை கருதிச் செல்லும் மக்கள் அதனையே பயன்படுத்துவர்.

அதன் விளைவாக விமான சேவைகளின் வருமானம் குறைந்து விடும். கப்பல் சேவை எவ்வளவுக்கு எவ்வளவு சீரற்றதாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு விமானசேவை நடத்துவோருக்கு நல்லது என்ற அடிப்படையில் தான் கப்பற் சேவை தாமதமாகிறதோ என்ற சந்தேகம் குடாநாட்டு மக்களிடம் இல்லாமல் இல்லை;

இத்தகைய சந்தேகங்களுக்கு இடம் தராமல் கப்பற் சேவை குறித்த விவரங்களையும், அதனை ஒழுங்காக கிரமமாக நடத்த முடியாமைக்கான காரணங்களையும் அரசு வெளியிட வேண்டும். மக்கள்தேவையை நிறைவேற்றக் கூடிய கப்பற் சேவையை நடத்துவதற்கு அரசு எடுத்துவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கை என்ன என்பது மக்களுக்குத் தெரிய வேண்டும்.

ஒளிவு மறைவில்லாத நிர்வாகம் என்பதே ஜனாதிபதியின் கொள்கை. அகதிகளை ஏற்றி இறக்கும் கப்பற் சேவையிலாவது உள்விடயங்கள் வெளிச்சப்படுத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.

ஈழத்தமிழர்களின் இதய பூமியாக விளங்குவது யாழ்ப்பாணம். அது யுத்தத்தினால் தனது பழைய கீர்த்தியையும் செழிப்பையும் எழிலையும் இழந்துள்ளது. யாழ்ப்பாணத்தைப் பழைய நிலைமைக்கு கொண்டு வருவதென்பது பெரும் சாதனையாகவே இருக்கும். இந்தச் சாதனையைத் தான் நிகழ்த்திக் காட்டப்போவதாக அரசாங்கம் கூறிவருகிறது. வெளிநாடுகளில் தீவிர பிரசாரமும் செய்யப்படுகிறது.

இந்தவகையில் வெளிநாடுகள் பலவற்றின் அரசாங்கப் பிரதிநிதிகள், வர்த்தகப்பிரதிநிதிகள், தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள் என்ற பல தரப்பினரும் வந்துபோகிறார்கள். அவர்கள் குடாநாட்டின் பலபகுதிகளுக்கும் நேரில் சென்று தாமே மதிப்பிடுகிறார்கள்; மக்களிடம் நேரில் கேட்டும் தெரிந்து கொள்கிறார்கள். கடந்த சுமார் இரண்டு வருடங்களாக இத்தகைய வரவுகளும், மதிப்பீடுகளும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

ஆனால் இவற்றின் பெறுபேறாக யாழ்ப்பாணத்தை மீளக் கட்டி எழுப்புவதற்கான ஆக்க பூர்வமான பலாபலன்கள் கிடைத்துள்ளனவா என்பதனை நுணுக்காட்டி வைத்துத்தான் பார்க்கவேண்டியுள்ளது. வெளிநாடுகள் எதுவும் அல்லது தொண்டர் நிறுவனம் எதுவும் அல்லது சர்வதேசநிறுவனம் எதுவும் யாழ்ப்பாணத்தை மீளக் கட்டும் பணிக்கு, இப்பிரதேச மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கு குறிப்பிடத்தக்களவில் உதவிகள் செய்தனவா என்பது இன்னும் வெளிச்சத்துக்கு வரவில்லை.

அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சிலசில திட்டங்கள் குறித்தும் உதவிகள் பற்றியுமே பேசப்படுகிறது — தெரியவந்துள்ளது.

ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்காது. வெளிநாடுகளை நம்பித்தான் யாழ்ப்பாணத்தின் புனர்நிர்மாணமும் புனரமைப்பும் நடைபெறவேண்டும் என்று காத்துக்கொண்டிருக்க இயலாது. யாழ். மக்களின் நலனில் —அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டில், உண்மையான —உளமார்ந்த அக்கறை உண்டெனில் அரசு தனது சொந்தப் பணத்தைச் செலவிடுவதற்கு பின்னடிக்கலாகாது. ஆனால் நடைமுறையில் இடம் பெறுவதோ அதற்கு நேர் மாறானதே!

புனரமைப்பு, புனர்வாழ்வுக்குப் புதிதாக நிதி வளத்தைக் கண்டுபிடிப்பது என்பது ஒருபுறமிருக்க வழமையான நடைமுறையில் யாழ்ப்பாண மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அரசாங்க நிதியுதவிகள், ஏனைய உரிமைக்குரிய கொடுப்பனவுகளில் அரசாங்கம் கைவைப்பது பிரசாரத்துக்கும் அதன் வழியான எதிர்பார்ப்புக்கும் முற்றிலும் மாறுபட்டதாகும்.

அரசாங்கத்தின் பணப்பை சுருங்கிப்போகிறது என்ற காரணம் காட்டி, யாழ்ப்பாண மக்களின் இடம் பெயர்ந்தோர் நிவாரணம் மிகக் கணிசமான அளவில் நிறுத்தப்பட்டிருப்பது பற்றி சென்ற வாரம் இப்பத்தியில் எழுதியிருந்தோம். அந்த வரிசையில் வடக்கு—கிழக்கிலுள்ள பிரதேச செயலகங்களுக்குப் பிரமாண அடிப்படையில் வழங்கப்படும் நிதியும் வெட்டப்பட்டுள்ளது.!

ஒவ்வொரு நிதியாண்டிலும் பிரதேச செயலக அதிகாரத்துக்குட்பட்ட பகுதிகளில் சிறுசு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள ஒதுக்கப்படும் நிதியே பிரமாண அடிப்படை நிதி எனப்படுகிறது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகங்களுக்கும் இந்த நிதியாண்டுக்கென ஒவ்வொன்றுக்கும் 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. பிரமாண அடிப்படையிலான அந்நிதி மத்திய அரசினால் ஒதுக்கப்பட்டபோதிலும், நிதி மாகாணசபை ஊடாகவே பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்படுகிறது.

நிதி ஒதுக்கப்பட்டு விட்டது என்ற நம்பிக்கையில்!—உரிய பணம் நிச்சயமாக கைக்கு வந்து சேரும் என்ற நம்பிக்கையில் — வடக்கு — கிழக்கு மாகாண சபை, யாழ்ப்பாணத்திலுள்ள பிரதேச செயலகங்களை தத்தமது அபிவிருத்தி வேலைகளைச் செய்யுமாறு பணித்திருந்தது.

இந்தப் பணிப்புரையை தொடர்ந்து குடாநாட்டி

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதிர்பருவத்தினர் முனைப்பும் அதன் விளைவுகளும்

நா. க. சண்முகநாதபிள்ளை

மனித வாழ்வில் பல்வேறு வளர்ச்சிநிலைப் பருவத்திலும் மனித பண்பியல்புகளை — நல்லது கெட்டதை — தனக்கே உரிய பாணியில் தொடராக விளக்கி வருகின்றார் இக் கட்டுரையாளர்.

''கருவுற்ற நாள் முதலாக...'', ''பிள்ளைக் கனியமுது'', ''தீராத விளையாட்டுப் பிள்ளை; ஓயாத தொல்லைதரும் கிள்ளை'', ''கட்டிளமைப் பருவத்தினரின் வளர்ச்சியும் இட்டமுடன் ஏற்படும் துடுக்கும் மிடுக்கும்'' என்ற வரிசையில் அவர் படைக்கும் மற்றொரு கட்டுரை இது.

## முதிர்பருவத்தினரின் முனைப்புகள்

கட்டிளமைப் பருவத்தினர் கல்லூரிப் படிப்பை முழுமையாக முடித்துக் கொண்டு முதிர்பருவத்தினராக வெளியேறுகின்றனர். கல்லூரிப்படிப்பு முழுமை பெறு முன்னரே, திறமையின்மை, குடும்பச்சூழல், படிப்பில் விருப்பமின்மை, நாட்டுநிலைமை என்பன போன்ற பல காரணங்களால் பலர் சமுதாயத்திற்குள் உட்புகுகின்றனர். கல்லூரிப்படிப்பை முடித்தவர்களுள்ளும் மிகச் சிறிய வீதத்தினரே பல்கலைக்கழகப் படிப்பைப் பெறும் வாய்ப்பை பெறுகின்றனர். இவர்களுள் சிலர் வறுமை காரணமாகப் பல்கலைக்கழகப் படிப்பையும் இடைநிறுத்திக் கொள்கின்றனர். பல்கலைக்கழக கல்வி வாய்ப்பில்லாதவர்கள் தொழில் நுட்பக் கல்



லூரிகளிலும் பிற தொழில் சார்நிறுவனங்களிலும் சேர்ந்து தொழில் தகைமைகளைப் பெறுகின்றனர். இரண்டிற்கும் தகுதியில்லாதவர்கள் சுயதொழில்களிலும், கூலிவேலைகளிலும் ஈடுபடுகின்றனர். தற்போதைய சூழ்நிலையில் படித்தவர்கள், படியாதவர்கள் எல்லோர் மனங்களிலும் வெளிநாட்டிற்குச் செல்லும் மனப்பாங்கே ஓங்கியிருக்கின்றது. மிகப்பலர் அப்படிச் சென்றும் விட்டனர். ஒருவழியும் புரியாமல் தத்தளிப்போர் சமுதாயத்திற்கு பெரும் சுமையாகவும், தலையிடியாகவும் இருந்து புறம்போக்கான சமூகச் சீரழிவுச் செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர். இதனைச் சீர் செய்து இவர்களின் வாழ்வைச் செழிப்பாக்கி நாட்டிற்கு நலம் சேர்க்கும் திட்டங்கள் எதுவும் எம்மிடமில்லை.

இருபது வயதிற்கு மேற்பட்ட இந்த முதிர் பருவத்தினரில் பல்கலைக்கழகக் கல்வி வாய்ப்பைப் பெற்றவர்கள் அவரவருடைய துறைகளைப் பொறுத்தவரை நான்கு தொடக்கம் எட்டு ஆண்டுகள்வரை படிப்பைத் தொடரவேண்டியுள்ளது. முதிர்பருவத்தினரைத் தலைமைப் பருவத்தினர், குடும்பப்பருவத்தினர் என நாம் பிரித்துக் கொள்ளலாம். 20—35 வயதினரைத் தலைமைப் பருவத்தினர் எனவும், 35—55 வயதினரைக் குடும்பப்பருவத்தினர் எனவும் கருதுவோம். தலைமைப் பருவத்தினர் தொழில் தேடுவதிலும் துணை தேடுவதிலும் ஈடுபட்டிருப்பர். துணைக்குப்பின் தொழிலா? தொழிலுக்குப் பின் துணையா? என்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது. துணை என்பது வாழ்க்கைத் துணையையே இங்கு குறிக்கிறது. இப்பருவத்தினரில் சிலர் சூழ்நிலை காரணமாகவும், தவிர்க்கமுடியாத எதிர்ப்பாலர் உறவு காரணமாகவும், சிக்கல்களில் மாட்டிக்கொண்டு சோடிகளாகியும் விடுகின்றனர். தொழில் இல்லாமல் வாழ்க்கை ஓட்டத்தில் பின்னடைவுகளையும் சந்திக்கின்றனர். இதில் ஆண்கள், பெண்கள் என்று பிரித்துப் பார்த்தால் பெண்களைப் பொறுத்தவரை படிப்பிருந்தும், தொழில் இருந்தும் ஏற்ற வரன்கிடைக்காமல் காத்திருக்க வேண்டியுள்ளது. சீதனம், அழகு, அந்தஸ்து, குலம், கோத்திரம் என்ற குடும்பப் பெறுமானங்களும், இந்தக் காத்திருத்தலுக்கு அடிப்படையாக அமைகின்றன. இவர்களில் சிலர் வாழ்நாள் முழுவதும் மணவாழ்வில்லாமலேயே இருந்தும் விடுகின்றனர். இவர்களுடன் உடன்பிறந்த ஆண் சகோதரங்களும் கூட சகோதரிகளில் கொண்ட பாசம், பற்றுக்காரணமாக வாழ்நாள் முழுவதும் பிரமச்சாரிகளாகவே இருந்து விடுகின்றனர். இப்படியான குடும்ப உறுப்பினர்களின் வாழ்க்கை சோகச் சாயல் படிந்தே தொடரும் துர்ப்பாக்கிய நிலையை எய்துகின்றது.

## பொறுப்பும் புறவாழ்வும்

இந்தத் தலைமைப் பருவத்தைச் சேர்ந்த இருபாலர்களும், தொழிலும், வருவாயும் வரத்தொடங்கியதும் தாய், தந்தை, வளரும் சகோதரர்கள் என்று குடும்பப் பொறுப்பும் வந்து விடுகின்றது. பெண் சகோதரங்களோடு பிறந்த ஆண்களுக்கு இப்பொறுப்பு மேலும் அதிகரிக்கின்றது. அவர்கள் வாழ வகை செய்த பின்தான் மணம் முடித்தல் அல்லது பொருத்தமற்ற மாற்றுச் சம்பந்தங்களுக்கு உடன்படல் போன்றவற்றை எதிர்கொள்ள நேரிடுகிறது. வீட்டிலுள்ள நெருடுதல், நச்சரிப்புக்களுக்கிடையில் சகிப்புத் தன்மையைக் கடைப்பிடித்து நல்ல ஆளுமைப் பண்புகளையும், தலைமைதாங்கும் இயல்புகளையும் இவர்கள் வளர்க்க வேண்டியுள்ளது. வயது ஏற ஏற ''நான் யாரை முடிப்பது என்ற தெரிவு நிலைமாறி என்னை யார் முடிப்பார்கள்'' என்ற விரக்தி நிலைவந்து விடுகிறது. இதனால் தம்மை விடுவித்துத் தூர தேசங்களுக்குச் சென்றும், இணைக்குழுக்களில் இணைந்தும் அவற்றினூடாகத் தனித்துவம் தேடவும் முனைகின்றனர். நல்ல கல்வித் தகைமை பெற்றுவிட்டவர்கள் வல்ல மணக்கொடைகளைப் பெற்றுமென்ன நாட்டை விட்டே சென்று விடுகின்றனர். நாடும் மக்களும் இவர்களின் சேவையை இழந்து விடுவது மட்டுமல்ல, இவர்களை நம்பியிருந்த தாய், தந்தையரும் ஏமாந்துபோகின்றனர். தூர தேசங்களில் சென்று வாழ்பவர்கள் புதியன கண்டவர்களாக மனம்போன போக்கெல்லாம் சென்று மாண்பை மறந்து மவுசு ஒன்றையே மதிப்பெனக் கருதுகின்றனர். வெளிநாடுகளில் மணம்புரியாத ஆண்களை நம்பிக் கப்பலேறும் பலகன்னிப் பெண்களின் தொடர்கதைகள் நாம் மறவாததல்ல. ஏதோ விடுமுறையைக் களிப்பதற்காகவென்றும், ஊராரை, உற்றாரைப், பெற்றாரைப் பார்க்கவென்றும் பற்றோடு வருகின்ற ஒருசிலரைத்தவிர ஏனையோர் தத்தமது நாகரிக மேம்பாட்டைக் காட்டவும், பணவலுவைக்காட்டவும் வந்து ''உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன்'' என்றவாறு ஒரு சமூகப்பிறழ்வையே ஏற்படுத்திவிட்டுச் சென்று விடுகின்றனர். இது ஓர் தற்கால மனக்கோட்டத்தை (Temporary Insanity) இங்கிருப்பவர்களுக்கு ஏற்படுத்திவிட, படிப்பும் வேண்டாம் பதவியும் வேண்டாம் வெளிநாட்டிற்குப் போய் உழைத்துப் பணம் தேடிக் களியாட்டமாடுவோம் என்று இங்குள்ளவர்கள் எண்ணுகின்றார்கள்.

பணம்தான் எல்லாம் அல்ல என்பதையும் நாம் உணர்வோமாகுக!

இத்தலைமைப் பருவத்தினரில் மிகக் குறைந்த வீதத்தினர் 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே' என்ற இறுக்கமான பிணைப்போடும் பிரியத்தோடும் இம்மண்ணோடு இறுகப் பிணைத்துக்கொண்டு இழப்புக்களை, ஏமாற்றங்களையும் சந்தித்துக்கொண்டு மகத்தான பணி புரிந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இன்னும் சிலர் ''எரிகின்ற வீட்டில் பிடுங்கினது அறுதி'' என்று ''குழம்பிய குட்டையில் மீன் பிடித்துக் கொள்வது போல'', ''இறால் போட்டுச் சுறாப்பிடிக்கவும்'' செய்கின்றார்கள்தான். சட்டமும் ஒழுங்கும் சரிவரக் கண்காணிக்கப்படும் சமூக நிர்வாகம் சரிவர இயங்காத ஒரு சூழ்நிலையில் இவற்றைச் செப்பனிடுவது எப்படி முடியும்? அவரவராய்ப் பார்த்து தாம்தாம் செய்யும் தீய செயல்களிலிருந்து படிப்படியாகத் திருந்த முன்வர வேண்டும். மத நிறுவனங்களும், சமூகமுன்னேற்ற நிலையங்களும் இவற்றில் ஊன்றிய கவனம் செலுத்தி ஏற்ற பணிகளைச் செய்ய முயற்சிப்பது பயனளிப்பதாகும்.

## குடும்ப வாழ்வும் குறை நிறைகளும்

இனிக் குடும்பப் பருவத்தினரைப் பற்றிச் சிந்தித்தால்—

மண்ணில் நல்லவண்ணம் வாழக் குடும்பவாழ்வே சிறந்தது என்பது ஆன்றோர் கருத்து.

''அறத்தாற்றின் இல்வாழ்க்கை
ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன்''

என்றார் திருவள்ளுவர். அதாவது ஒருவன் இவ்வாழ்க்கையை அறத்தின் வழியே நடத்தத் துணிவானாயின் அதுவே அவனுக்குச் சகல நலன்களையும் தரும். அவ்வில்வாழ்க்கையை விட்டு அதற்குப்புறம்பான வழிகளிற் சென்று அவன் வேறு என்ன பெரிய பேறுகளைப் பெறப்போகிறான்? என்று வள்ளுவர் வினா எழுப்புகின்றார்.

அறஞ் செய்தற்குரிய மேலான வாழ்வு இல்லாளோடு கூடிவாழும் இல்வாழ்வேயாகும். ''திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவன'', ''தாரமும் குருவும் தலையில் எழுத்து'', ''சம்சாரம் மின்சாரம்'' என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

திருமணமாகாதவர்கள் திருமணம் முடிக்க விரைகின்றனர்; திருமணமானவர்களோ ஏன்தான் முடித்தோம் என்று சலிக்கின்றனர்.

சமணம், பௌத்தம் போன்ற மதங்கள் இல்வாழ்வை வெறுக்கின்றன.

''சையம்பூண்டு சமுத்திரம் நீந்துவான் எய்துமேல் தொடர்ப்பாட்டினீங்கு யாவையும் எய்தினார்களும் எய்துவ'' என்றும் ''நோய் முதிர் குரங்கு போல நுகர்ச்சிநீர் நோக்கவேண்டாம்'' என்றும் சீவகசிந்தாமணி சாற்றும். கல்லைக் கட்டிக்கொண்டு சமுத்திரத்திற்குள் குதிப்பவன் கரை சருதல் எப்படிச் சாத்தியமில்லையோ, அதுபோல இல்லறத்தில் குடும்பச்சுமையோடு இருப்பவனும் கரைசேர்வது சாத்தியமில்லை என்றும், இல்வாழ்வென்பது குரங்கிற்குச் சிரங்கு பிடித்தமாதிரி எந்நாளும் துன்பமே என்றும் சமண, பௌத்தர்கள் கருதுவார்.

''பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை'' இருப்பதை எண்ணியும் போற்றியும் வண்ணமுற இல்வாழ்வை வகுத்தவர்கள் சைவர்கள். உலகில் செய்யப்படும் அனைத்து நலம் பேணும் செயல்களுக்கெல்லாம் இல்லறத்தலைவியும் தலைவனுமே காரணமாக இருப்பதால் இவர்களே பிரமச்சாரியம், துறவறம் ஆகியவற்றில் நிற்பவர்களிலும் பார்க்கச் சிறந்தவர்களென்று நூல்கள் சாற்றுகின்றன. அன்பும் அறனும் இல்வாழ்வின் பண்பும் பயனுமாக அமைதல் வேண்டும். அன்பு என்று இங்கே சொல்லப்படுவது தலைவன் தன்தலைவி மேல் செய்யத்தகும் அன்பையே முதன்மைப்படுத்துகிறது. இதனால் தலைவன் மேல் தலைவின் அன்பு இயல்பாகவே ஏற்படுமென்பது பெறப்படும். இந்த அன்பு இரு வழியும் செல்வதால் பிறருக்குப் ''பகுத்து உண்டலும்'' ''பல்லுயிர் ஓம்பலுமாகிய'' அறப்பேற்றோடு இல்வாழ்விற்குப் பெரும்பயனைத் தருகின்றது. அன்பு, பண்பாக மலர்ந்து குற்றமிலாதவர்களாக ஏனையோரையும் தம்பால் ஈர்த்துச் சுற்றமாய்ச் சூழ வைக்கின்றது.

இல்வாழ்வில், மனையறத்திற்கு ஏற்ற நற்குண நற்செய்கைகளான குழந்தைவளர்ப்பு அற்றாரையும் அலர்ந்தாரையும் ஆதரித்தல், வருந்தி வந்தவர் அரும்பசி தீர்த்து அவர்களின் திருந்திய முகங்கண்டு திளைத்தல், அன்னம் பாலிப்பதில் சிறந்த ஆற்றல், ஒப்புரவு செய்தல் போன்ற நல்லியல்புகள் இல்லத்தலைவியிடம் அமைந்திருத்தல் வேண்டும். இதனை



''மனைமாட்சி'' என வள்ளுவர் சுட்டுகிறார். இந்த மாண்புடைய இல்லாள் அகத்திருப்பாளேயானால் அங்கே இல்லாதது, ஒன்றுமிருக்காது. வருவாய்க்கேற்ற செலவு செய்தலும் வறுமையிற் செம்மையாயிருப்பதும் இல்லாளுக்கு இருக்க வேண்டிய மற்றுமொரு இயல்பாகும். ''ஐம்பது ரூபாய்ச் சம்பளக்காரன் பெண்டாட்டி ஐம்பது ரூபாய்ச் சேலை கட்டுவது அநீதி'' என்று என். எஸ். கிருஷ்ணன் நகைச்சுவையாகப் பாடிய பாடலை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

கணவனையே தெய்வமாகப் பேணுகின்ற கற்பென்னும் மனத்திண்மை உடைய மனைவி ஒருவனுக்குக் கிடைக்கப் பெறுமாயின் இவ்வுலகில் அவனுக்கு அதைவிடச் சிறந்த பொருளே கிடைக்காது. எனவேதான் மனைமாட்சியின் மங்கலம் — மனைவிதான் என்றனர். அத்தகைய மனைவிதான் அந்த இல்வாழ்வை அலங்கரிக்கின்ற அறிவறிந்த மக்களை ஈன்று புறந்தருவாள் என்பதும் உணரப்படும்.

மேற்கூறியவற்றைக் கருத்திற் கொண்டு மணப்பருவம் அல்லது குடும்பப் பருவத்தில் நிற்கும் முதிர் பருவத்தினர் தமது வாழ்க்கையை நல்வாழ்க்கையான இல்வாழ்க்கையில் செலுத்துவதற்கு முன்வருதல் வேண்டும். ஒருமித்த அன்பும் ஒருமித்த பண்புமுடைய வரைத் தெரிவின் மூலம் தேர்ந்தெடுத்தல் வேண்டும். நவீனத்துவம் என்ற போர்வையிலே மேற்குலகில் ஏற்பட்டு வரும்—குடும்ப வாழ்வை அலட்சியப்படுத்தும்—மனபாங்குகள் எம்மையும் எமது பாரம்பரியமான பண்பாடுகளையும் சிதைத்துக் குடும்ப வாழ்வை சீர்குலைத்து விடாது நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு இளைஞனும் கன்னியும் இதில் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

''பெண் உதவும் காலை
பிதாவிரும்பும் வித்தையே
எண்ணில் தனம் விரும்பும்
ஈன்றதாய் — நண்ணிடையில்
கூரிய சுற்றம் குலம்விரும்பும்
காந்தனது
பேரழகு தான்விரும்பும் பெண்''

என்பது ஓர் பாடல். இப் பாடலின் கருத்து, ஒரு பெண்ணை மணம் முடித்துக்கொடுக்க விரும்பும் தந்தையானவர், வரப்போகும் மணமகன் அல்லது மருமகன் படித்துத் தொழில் பெற்றவனாய் இருக்க வேண்டுமெனவும், தாயானவள் அந்த மருமகன் பொருள்வளமுள்ளவனாயிருக்கவேண்டுமெனவும், சுற்றத்தவர் அவன் நல்ல குலத்தைச் சேர்ந்தவனாக இருக்கவேண்டுமெனவும், பெண்ணானவள் அவன் அழகனாக இருக்கவேண்டுமெனவும் விரும்புவர் என்பதாகும். இவை எல்லாம் எல்லார்க்கும் பொருந்தி வரா.

எனினும் ஆய்ந்து ஒய்ந்து பெரியோர்கள் கூடி நிச்சயிப்பதற்கு இப்பருவத்தினர் இடந்தருவது நல்

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரத்தின் தன்மைகள்

உழைக்க நேரத்தை எடுத்துக்கொள்
— அது வெற்றியின் விலை.
சிந்திக்க நேரத்தை எடுத்துக் கொள்
— அது சக்தியின் ஊற்று.
விளையாட நேரத்தை எடுத்துக் கொள்
— அது இளமையின் இரகசியம்
படிக்க நேரத்தை எடுத்துக்கொள்
— அது அறிவின் வாயில்.
அன்புகாட்ட நேரத்தை எடுத்துக்கொள்
— அது இறைவனின் கொடை.
சேவைபுரிய நேரத்தை எடுத்துக்கொள்
— அது வாழ்வின் குறிக்கோள்.
சிரித்துமகிழ நேரத்தை எடுத்துக்கொள்
— அது இதயத்தின் இன்னிசை.

# நற்பரிசு

எதிரிக்கு கொடுக்கும் நற்பரிசு
— மன்னிப்பு.
பகைவனுக்குக் கொடுக்கும் நற்பரிசு
— விட்டுக்கொடுத்தல்.
நண்பனுக்கு கொடுக்கும் நற்பரிசு
— செவிமடுத்தல்.
குழந்தைக்கு கொடுக்கும் நற்பரிசு
— முன்மாதிரிகை.
தந்தைக்கு கொடுக்கும் நற்பரிசு
— நல்வணக்கம்.
தாய்க்கு கொடுக்கும் நற்பரிசு
— அருகிலிருத்தல்.
எல்லாவற்றிற்கும் கொடுக்கும் நற்பரிசு
— தியாகம்.

— சாளின் நவரட்ணம் —
(ஆண்டு 8, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

# தமிழில் கலப்பு!

"ராமசாமி சதுக்கத்தில் உள்ள சர்க்கார் இலாகாக் கட்டடத்தில் கந்தோர் விறாந்தையில் இருந்து பீரோவைக் களவாடிய ஆசாமி துரதிர்ஷ்டவசமாக பொலிசாரால் கைது செய்யப்பட்டு விலங்கத்தில் மாட்டிக் கொண்டான்."

இச்சொற்றொடரில் சதுக்கம் என்பது பாலிச்சொல். சர்க்கார் என்பது பாரசீகச் சொல். இலாகா என்பது அராபியச் சொல். கந்தோர் என்பது ஒல்லாந்துச் சொல். விறாந்தை என்பது போர்த்துக்கீசச் சொல். பீரோ என்பது பிரெஞ்சுச் சொல். ஆசாமி என்பது இந்திச் சொல். துரதிர்ஷ்டம் என்பது சமஸ்கிருதச் சொல். பொலிஸ் என்பது லத்தீன் சொல். கைது என்பது உருதுச் சொல். விலங்கம் என்பது மராட்டிச் சொல்.

பார்த்தீர்களா? ஏனைய மொழிகள் தமிழில் நுழைந்து தமிழை என்ன பாடு படுத்தியிருக்கின்றன?

— வே. ஸ்கந்தமயூரன் —
(ஆண்டு 6, யாழ். இந்துக்கல்லூரி)

# எறும்பும் புறாவும்

ஒரு மரத்தின் கிளையில் ஓர் எறும்பு இருந்தது. அப்பொழுது கடும் காற்று வீசியது. எறும்பு கீழே இருந்த தண்ணீருக்குள் விழுந்து விட்டது. அது தண்ணீரில் நீந்தியது.

எறும்பினால் தண்ணீருக்கு வெளியே வர முடியவில்லை. மரத்தில் இருந்த புறா இதைக்கண்டது. உடனே வாயினால் ஓர் இலையைப் பிடுங்கியது. இலையைத் தண்ணீருக்குள் போட்டது.

எறும்பு இலையின் மேல் ஏறியது. பின்பு தண்ணீருக்கு வெளியே வந்தது. எறும்பு புறாவிடம் சொன்னது. "புறாவே, உங்கள் உதவிக்கு நன்றி. நானும் ஒருநாள் உங்களுக்கு உதவி செய்வேன்."


அடுத்த நாள் ஒரு மனிதன் அங்கே வந்தான். அவன் ஒரு துப்பாக்கி வைத்திருந்தான். அந்தத் துப்பாக்கியினால் புறாவைச் சுடக் குறி பார்த்தான். எறும்பு அவனைக் கண்டுவிட்டது. புறா காணவில்லை.

எறும்பு மனிதனுக்குக் கிட்ட ஓடிப்போனது. அவனுடைய காலை இறுக்கிக் கடித்தது. அவன் 'ஆ!' என்று கத்தினான். புறா திரும்பிப் பார்த்தது. அது மனிதனையும் துப்பாக்கியையும் கண்டது. உடனே தப்பிப் பறந்து விட்டது.

# கொட்டும் கொடுந்தேள்!

ஆயிரத்து நானூறு வகையான தேள்கள்—பெரும்பாலும் வெப்பமண்டல நாடுகளில்—வாழ்கின்றன.

மஞ்சள், பழுப்பு, சிவப்பு, கறுப்பு ஆகிய நிறங்களில் காணப்படும் இவை பெரும்பாலும் இரண்டு முதல் 20 சதமமீற்றர் வரை நீளமாக வளர்கின்றன. இனத்திற்கு ஏற்ப அவற்றின் அளவும் பருமனும் வேறுபடும்.



ஆண் தேளும், பெண் தேளும் நடனமாடும் காட்சி

தேளின் உடல் நீண்டு குறுகலாக இருக்கும். தலையும், முன் நெஞ்சுப்பகுதியும் (கால்கள் இணையும் பகுதியும்) சற்றுப் பருத்துக் காணப்படும். எட்டுக் கால்களில் முன்னிரு கால்களும் நண்டின் கொடுக்கு போல் பெரிய இடுக்கிகளைக் கொண்டிருக்கும். வாலின் நுனியில் நஞ்சுச் சுரப்பியுடன் கூடிய கொடுக்கும் முள்ளும் காணப்படும்.

**பிராணிகள் உலகம்**

முன்கால்கள் இரண்டிலும் உள்ள கொடுக்கிகளினால் தன் இரையைப்பிடித்துக்கொண்டு, கொடுக்கினால் கொட்டி, நஞ்சை உள்ளே செலுத்தும். இரை மயக்கமடையும்; அல்லது இறந்துவிடும். பிறகு அதன் இரத்தத்தைத் தேள் உறிஞ்சிக்குடிக்கும். கரப்பான்பூச்சி, சிலந்தி, மரவட்டை, பூரான் முதலிய பூச்சிகளே தேளின் முக்கிய உணவாகும். உணவு இல்லாமல் தேள் ஓராண்டு காலங்கூட உயிரோடு இருக்கும். இது பகலில் மரம், கல் இடுக்கு முதலியவற்றுக்கு அடியில் பதுங்கி ஒளிந்துகொண்டிருக்கும். இரவில் தான் இரை தேடும். தேள் வளர வளர, அதன் மேல்தோல் முழுவதும் உரிந்து கழன்றுவிடும். இவ்வாறு உரித்ததோலைச் சட்டை என்று கூறுவர்.

பெண் தேளைவிட ஆண் தேள் மெலிந்து இருக்கும். இரண்டும் ஒன்றை ஒன்று பிடித்துக்கொண்டு, வாலோடு வாலைச் சேர்த்து, களிப்புடன் சுற்றிச் சுற்றி நடனமாடுவது வேடிக்கையாக இருக்கும். பிறகு ஆண்தேளைப் பெண் தேள் கொன்று தின்று விடுவதுண்டு. தாயின் உடலுக்குள்ளே முட்டைகள் வளர்ச்சியடைந்து, குட்டிகளாகப் பிறக்கின்றன. பிறந்த தேள்கள், தாயின் முதுகின்மேல் ஏறித் தம் கால்களால் பற்றிக்கொண்டிருக்கும். தாய் அவற்றைச் சுமந்து திரியும்; வளர்ச்சியடைந்ததும் அவை இறங்கிவிடும்.

தேள் கொட்டினால் நீண்ட நேரம் கடுக்கும்; வியர்க்கும்; மயக்கம் வரும். சிலவகைத் தேள்கள் கொட்டினால் மரணம் ஏற்படுவதுண்டு. எனவே, தேள் கொட்டினால் உடனடியாகச் சிகிச்சை செய்ய வேண்டும்.

தேளின் விஷம், தாக்கப்படும் பிராணியின் நரம்பு மண்டலத்தைத் தாக்கி அதனை செயலிழக்க செய்யும்.

பூரான், வெள்ளைப்பூரான் என நாம் அழைக்கும் ஜந்துகளும் இதன் இனத்தைச் சேர்ந்தவையே.

# மூளைக்கு வேலை

1. எனது கிராமத்தில் இரண்டே இரண்டு நாவிதர்கள்தான் உள்ளனர். ஒருவர் தாடி, மீசையுடன், வாரப்படாத நீண்ட தலைமயிருடன் காணப்பட்டார். மற்றையவர் ஷோக்காக — அழகான தலை வெட்டுடன் — இருந்தார். நான்முடிவெட்டிக்கொள்ள அழுக்கு ஆசாமியிடம் சென்றேன். நான் செய்தது சரியா?

2. நாலு பேருக்கு நான்கு கடிதங்களை அவர்கள் விலாசமிடப்பட்ட நான்கு உறைகளில் இஷ்டப்படி உள்ளே வைத்து அனுப்புகின்றேன்.

சரியான விலாசத்துக்கு
அ) ஒரு கடிதம் மட்டும் செல்வதற்கு —
ஆ) இரண்டு கடிதங்கள் மட்டும் செல்வதற்கு
இ) மூன்று கடிதங்கள் மட்டும் செல்வதற்கு —
ஈ) நான்கு கடிதங்களும் செல்வதற்கு —

சாத்தியக் கூறு உண்டா என்பதற்குத் தனித் தனியாகப் பதில் தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மலிங்கம் கார்த்திகா
(ஆண்டு 6, சாவகச்சேரி, இந்துக்கல்லூரி)

(விடை XI ஆம் பக்கத்தில்)

# சிறந்த வாழ்வில்...

பறந்து பறந்தெங்கும் — திரியும்
பறவை வாழ்வினைப் போல்
சிறந்த வாழ் வேதும்—இந்தச்
செகத்தில் கண்டதுண்டோ?

நாளைக் கில்லையென—இன்று
நைந்து நைந்துருகி
மூளை கலங்கியே—இருந்து
முணுமு ணுப்பதில்லை.

இரப்ப வருமில்லை—சோம்பி
இருப்ப வருமில்லை
புரப்ப வருமில்லை—அவரைப்
புகழ வாருமில்லை.

வெற்றி தோல்வியில்லை—பணத்தால்
வெறியும் கொள்வதில்லை
கற்றறிந் தோமென்று—செருக்கும்
காட்டி நிற்பதில்லை.

ஸ்ரீசந்தனராஜா பபிதா.
(ஆண்டு 7, மானிப்பாய் மகளிர் கல்லூரி.)




# உங்களுக்குத் தெரியுமா?

பின்வரும் தகவல்களை வைத்துக் கொண்டு, அவை குறிப்பிடும் சொற்களைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

1) மூன்றெழுத்தில் மணக்கும் சொல்; முன்னால் ஒரெழுந்துச் சேர மூச்சுவிடும். அதற்கு முன்னால் மற்றொரு எழுத்துச் சேர எஜமான் எதிர்பார்ப்பது வரும். எஜமான் எதிர்பார்ப்பது எதை?

2) மூன்று எழுத்தில் அமைந்த கொடை இது. அதற்கு முன்னால் ஒரெழுத்துச் சேர்த்தால் சமநிலைபேண அவசியமானது வந்துவிடும். அதற்கு முன்னால் மேலும் இரண்டெழுத்துச் சேர்க்க இறைவன் வீற்றிருக்கும் இடமாகி விடும். அந்த இடத்தின் பெயர் என்ன?

3) மூன்றெழுத்தில் வரும் காயம்; முன்னால் ஒரெழுத்துச் சேர யானை ஆகும். அதற்கு முன்னால் மேலும் ஒரெழுத்துச் சேர இப்போது நம்மில் பலர் எதிர்பார்த்துத் தங்கியிருப்பது வரும். பலருக்கு அதை வெட்டப் போகிறார்களாமே! பலர் இழக்கப் போகும் அது எது?

4) மூன்றெழுத்தில் செல்வம்; அதற்கு முன்னால் ஒரெழுத்துச் சேர்த்தால் சம்பளம் கிடைக்கும். மேலும் ஒரெழுத்தை முன்னால் சேர்க்க இறைவனுக்குப் படைப்பதாகி விடும். இறைவனுக்கு படைப்பது என்ன?

5) மூன்றெழுத்துக் கழிவுப் பொருள்; முன்னால் ஒரெழுத்துச் சேர தாமரையாகும். அதற்கு முன்னால் மேலும் ஈரெழுத்துச் சேர்க்க தாமரை சிவப்பாகும். அது என்ன?

6) இரண்டெழுத்தில் ஆங்கிலக்குடிவகை; முன்னால் ஓர் எழுத்துச் சேர உறைக்கும். அதற்குமுன்னால் மற்றொரு எழுத்துச் சேர உருவம் திரிபுபடும்; திரிபுபட்ட உருவத்தை எப்படி அழைப்பர்?

7) ஒரெழுத்தில் தரக்கேட்பது; முன்னால் ஒரெழுத்துச் சேர தாயாவாள்; மேலும் ஒரெழுத்து முன்னால் சேர பசுத்தாய் ஆவாள். அவள் யார்?

8) இரண்டெழுத்தில் தமிழருக்கு உரியதைக் குறிக்கும். முன்னால் ஒரெழுத்துச் சேர திங்களாகும். அதற்குமுன்னால் மற்றிரு எழுத்துகள் சேர மிகச் சிறப்பாகி விடும். அது என்ன?

(விடை XI ஆம் பக்கத்தில்)

# நொடிப்பொழுது

(1) பொட்டுப் போல் இலையிருக்கும்; பொரிபோல் பூ பூக்கும்; தின்னக்காய் காய்க்கும்; தின்ன பழம் இல்லை. அது என்ன?
(2) மேயாத மரை என்ன மரை?
(3) அடித்தால் அழுவான்; பிரித்தால் சிரிப்பான். அவன் யார்?
(4) கொக்கு நிற்க குளம் வற்றுகிறது; அது என்ன?
(5) அள்ளுவார். ஆனால் தின்னமாட்டார். அவர் யார்?

எஸ். சுஜித்தா,
(ஆண்டு 3,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.)

## விடை

[illegible]

# ஒரு பிஞ்சின்... பிரார்த்தனை...

விடியற்காலை அஞ்சு ...ணி. அடுத்த மாசம் வரவி...க்கும் புலமைப் பரிசில் ...ட்சைக்காகப் படித்துக் ...காண்டிருக்கிறன். படிக்க ...டியவில்லை. கண்ணை ...ழற்றி நித்திரை நித்தி...ரயா வருகுது. என்னை ...டிக்க எழுப்பி விட்டிட்டு ...ம்மா குசினியிலை ...வலையா இருக்கிறா. ...ம்மா பாவம். இரவு ...ழுக்க நித்திரையில்லாமல் ...ழுது கொண்டு படுத்திருந்...வ. இரவு முழுக்க நித்தி...ரயே கொண்டிருக்க ...ட்டாபோலை. அப்பா ...ணாமல்போன நாள் ...தாடக்கம் அம்மா அழுது ...காண்டே தான் இருக்கிறா. ...ம்மாவின்ர முகத்திலை ...ரிப்பைப் பாத்து இரண்டு ...ருசமாகுது.

நல்லூர் தேரிலன்று சனக் ...ட்டத்துக்குள்ள சின்னப் ...ள்ளையள் தான் காணாமற் ...பாய் பிறகு அவையின்ர ...ம்மா, அப்பா தேடிப்பிடிக்கி...வை. ஆனா இப்ப பெரியாக் ...ளும் காணாமல் போகின ...ாம். அவையளை யார். ...ங்கே கொண்டுபோய் வைக் ...னமோ தெரியேல்லை. எங் ...ட அப்பாவை நாங்கள் ...தடாத இடமே இல்லை. ...னா அப்பாதான் கிடைக் ...கல்லை.

அப்பாவை நினைக்க ...னைக்க எனக்கு அழுகை ...ழுகையா வரும். ஆனா ...ான் அழுதா அம்மாவும் ...ன்னை கட்டிக் கொண்டு ...பரிசா அழுவா. அம்மா ...ழுதால் என்னாலை தாங்க ...டியாது. அதுக்காக நான் ...ம்மா முன்னாலை அழவே ...ாட்டன்.

என்னை ஸ்கூலுக்கு ...காண்டு போய்விட, கோயி...க்கு கூட்டிப்போக, பாடம் ...சால்லித்தர, என்னோடை...ம் தம்பியோடையும் ...சர்ந்து பந்தடிச்சு விளை...ாட என்ர அப்பா எனக்கு ...வணும். அப்பா நீங்க எங்க ...ப்பா போயிட்டீங்க? அம்மா ...வும் நாங்களும் இரவிலை ...ிய இருக்க மாட்டம். ...யப்பிடுவம் எண்டு உங்க...ளுக்கு தெரியும்தானே? உங் ...ளை யாரப்பா ஒளிச்சு வைச் ...ிருக்கினம்? உங்கடை ...ிரிவை எங்களாலை தாங்க ...டியேல்லை. அப்பா, எங்க ...ிட்டை ஓடி வாங்கோ!...

என்னாலை கவலையை அடக்க முடியேல்லை. வாய் விட்டு பலமா அழுகிறேன். குசினியுக்கை இருந்த அம்மா ஓடி வந்து என்னை அணைத்துக்கொண்டு விக்கி விக்கி அழுகிறா.



என்ர அப்பாவும் அம்மாவும் சண்டை பிடித்து நான் ஒரு நாளும் பாக்கேல்லை. அப்பா எங்களிலை எவ்வளவு அன்பா இருந்தவர்!

அப்பா எங்களோடை இருக்கேக்கை அம்மா எப்பவுமே சிரித்தபடி எவ்வளவு சந்தோசமா இருப்பா? இப்ப சிரிக்கவே மறந்து போட்டா போலை.

எங்களை வளர்க்கவேணும் படிப்பிக்க வேணும் எண்டதுக்காக அம்மா இப்ப வேலைக்கு போகிறவ. எங்களுக்காய் அம்மா படுற கஷ்டத்தை பார்க்க சரியான துக்கமாக் கிடக்கு.

நான் நல்லா படிச்சு பெரிய ஆளா வளர்ந்து நல்ல வேலை பாத்து அம்மாவை அழவிடாமல் சந்தோசமாய் வைச்சிருப்பன். அதுக்காகத்தான் இந்த குளிருக்கையும் படிக்க எண்டு எழும்பினனான். ஆனா அப்பாவை நினைச்சுக் கொண்டதாலை படிக்க முடியாமல் இருக்கு.

அப்பா காணாமல் போன அண்டும் என்னை ஸ்கூலிலை விட்டிட்டு, ரொபி வாங்கித் தந்து, "கவனமாக படிக்க வேணும் குஞ்சு. அப்பா வேலைக்கு போட்டு வாறன்" எண்டு சொல்லி என்னைக் கொஞ்சிப் போட்டுத்தான் போனவர். அண்டு போன அப்பாவை இன்னும் காணவே இல்லை. அப்பா உங்களை உடனை பாக்க வேணும் போலை இருக்கப்பா... திரும்பவும் அழுதிடுவேனோ எண்டு பயமாய் இருக்கு.

நான் அழக்கூடாது. நல்லா படிச்சு முதல் ஸ்கொலசிப் பாஸ் பண்ண வேணும். நான் பாஸ் பண்ணினா அம்மா எவ்வளவு சந்தோசப் படுவா! ஆனா நான் பாஸ் பண்ணுவனோ என்று ஒரே பயமாய் இருக்கு. பேப்பர் சரியான கஷ்டமாய் இருக்கும் எண்டு எல்லோரும் பயமுறுத்தினம்.

முந்தி எல்லாம் 'பொம்பர் வருது... அவ்ரோ வருது...' எண்டு பயந்து ஓடிப்போய் பங்கருக்குள்ள ஒளிக்கிறனாங்கள். இப்ப பள்ளிக்கூடத்திலை எண்டாலும் ரியூசனிலை எண்டாலும் 'ஸ்கொலசிப் வருது... ஸ்கொலசிப் வருது...' எண்டு பயமுறுத்தினம். இதுக்குப் பயந்து ஒளிக்கேலாது போலை.

எங்கட வகுப்பிலை நான் தான் முதலாம் பிள்ளையா வாறனான். எல்லாப் பாடத்திலையும் எனக்குத் தான் கூட மாக்ஸ். ஆனாலும் ஸ்கொலசிப் சோதினை என்ன மாதிரி வருகுதோ எண்டு கவலையா இருக்கு.

"மொடல்' பேப்பர் பள்ளிக்கூடத்திலை சொல்லித் தாறபோது ரீச்சருக்கே சில கணக்குகள் விளங்காமல் வேறை ரீச்சர்மாரிட்டைக் கேட்டுத்தான் எங்களுக்குச் சொல்லித் தாறவை... அப்பிடி பெரியாக்களுக்கே விளங்காத கணக்குகள் எப்பிடி எங்களுக்கு விளங்கும்?

நாங்கள் சின்னப் பிள்ளையள் எண்டு தெரிந்தும் ஏன் பெரிய பெரிய கேள்வியளை போடுகினமோ தெரியாது.

அப்பா இருந்தா எல்லாம் வடிவா விளங்கக்கூடியதாக சொல்லித் தருவார். சோதினைக்கு முதல் அப்பா வந்தால் எவ்வளவு நல்லம். அப்பா எப்ப வருவர்? வரவே மாட்டாரோ?

அம்மா சொன்னா "எங்களைப்போல நிறைப்பேர் அப்பாவை காணாமல் அழுதுகொண்டே இருக்கினம்"—எண்டு அப்பிடியெண்டால் என்னைப் போல நிறைய சின்னப்பிள்ளையள் அப்பாவின்ரை அன்புக்காக எங்கி ஏங்கி அழுவினம் போலை.

பக்கத்து வீட்டு கண்ணன்ரை அப்பா "முன்னேறிப் பாய்தல்" நடந்தபோது சூடுபட்டு செத்துப்போனார். அதுக்குப் பிறகு கண்ணன்ரை அம்மா நெத்தியிலை பொட்டு வைக்காமல்தான் இருக்கிறா. அவை அப்பா இல்லாமல் எவ்வளவு கஷ்டப்படுகினம்? கண்ணன் சொன்னான் தன்னுடைய அப்பா மாதிரி என்ட அப்பாவும் இனிமே வரமாட்டார் எண்டு. தங்கட வீட்டிலை கதைச்சவையாம். அதை கேட்டவுடனை எனக்கு அழுகையா வந்தது.

அப்பிடி எண்டா என்ர அம்மாவும் பொட்டு வைக்காமல் இருக்க வேணுமோ...? ஐயோ! அம்மாவை அப்பிடி என்னாலை நினைச்சுப்பார்க்கவே முடியாது.

கடவுளே! என் அப்பாவை எங்கவிட்டை கொண்டு வந்து சேர்த்துவிடு. எங்கட வீடு பழைய மாதிரி கலகலப்பாக சந்தோசமாக எப்ப இருக்கும்.?

கண்ணன் சொன்னதை அம்மாவிட்டை சொல்லுவமோ...? இல்லை. வேண்டாம். அம்மா ஓவென்று அலறி அழத் தொடங்கி விடுவா. அப்பா இல்லாத

(X ஆம் பக்கம் பார்க்க)

**சுலோஜனா**

---

சஞ்சீவி

# சிறு கதைகள்

# சின்னத்தங்கம் கொழும்புக்குப் போகிறாள்

**துரை சுப்பிரமணியம்**

"...ஐயா..."

"...உம்..."

"எனக்கொரு கடிதம் அடிக்க வேணும்..."

"...என்ன கடிதம்..."

"ஏதோ முன்னுரிமைக் கடிதமாம்"

அப்பொழுது தான் நான் தலையை நிமிர்த்தி ஆளைப் பார்த்தேன். அது சந்தையில் பலாப்பழம், மாம்பழம் விற்கின்ற சின்னத்தங்கம்.

"என்னத்துக்கு முன்னுரிமைக் கடிதம்...?"

"நான் கொழும்பு ஆசுபத்திரிக்குப் போறன். ஆச்சியைக் கூட்டிக்கொண்டு..."

"ஆச்சிக்கு என்ன வருத்தம்...?"

"...அவவுக்கு கலிடசல்... இஞ்சை ஒப்பறேசன் செய்தது... ஆனால், இப்பவும் மனுஷி ஒண்டுக்குப்போக முடியாமல் கத்துது... இவங்க விட்டைக் கொண்டைக் காட்டினால் 'சுகம் வரும், சுகம் வரும்' எண்டுறாங்கள். ஆனால், சுகம் வந்த பாடாய் காணேல்லை..."

"போம் எடுத்தாச்சோ...?

"ஓமய்யா..."

"நிரப்பியாச்சோ...?"

"ஆரய்யா நிரப்புறது...?"

"...சரி...போமைந்தா..."

நான் சின்னத்தங்கத்திடம் விவரங்களைக் கேட்டு படிவத்தை நிரப்புகின்றேன்.

"...ஐயா, நான் பிளேனிலைதான் ஆச்சியைக் கூட்டிக்கொண்டு போகப் போறன்... அதுக்குத்தக்க தாய்தான் கடிதத்தை அடியுங்கோ..."

"பிளேனிலை போக உன்னட்டைக் காசு இருக்கா...?"

"காசோ... என்னட்டை எங்காலை ஐயா உவ்வளவு பணம்...?"

"அப்ப நீ... கப்பலிலை போவன்

..."கப்பலிலையோ... கப்பல் ஓடுற திறத்திலை... நான் மனுஷியை வைச்சுப் பார்த்துக் கொண்டிருந்திட்டுச் சாகச்சொல்லச் சொல்லுறியளே..."

"அப்பபணமெங்கால...?"

"ஆச்சியின்ரை கொடியை வித்துப் போட்டன்... வரேக்கை கப்பலோடினால் பார்ப்பம்... சரி ஐயா. கடிதத்தை அடியுங்கோ..."

சற்று நேரம் அமைதியாக இருந்தாள்.

"ஐயா... நான் பயங்கரவாதியில்லை எண்டும் அடிக்க வேணுமாமையா..."

"...சரி எல்லாம் போட்டுத் தான் அடிச்சிருக்கு...

"எவ்வளவு காசு ஐயா..."

"...ஐம்பது ரூபாய்..."

"...ஐம்பதோ... ஐயா என்னட்டை முப்பதுதான் கிடக்கு..."

"...சரி தந்திட்டுப்போ..."

"...இனி நான் விதானையைப் பிடிச்சதின் மேலை எல்லோ மிச்சம் எல்லாம்... சரி ஐயா வாறன்..."

ஒரு வாரம் கழித்து சின்னத்தங்கம் மீண்டும் என்னிடம் வந்தாள்...

"ஐயா..."

"உம்..."

"விதானயாரிட்டை திரிதிரியெண்டு திரிஞ்சு ஒரு மாதிரிக் கண்டு பிடிச்சு என்ரை போமையும் நீங்கள் அடிச்சுத் தந்த கடுதாசியையும் குடுத்தன். அவர் அதை நல்லாப் பார்த்துப் போட்டு எல்லாம் சரியாம்...அதிலை ஒண்டை விட்டிட்டடமாம்.

"என்ன அது..."

"...எங்கடை ஆச்சியும் பயங்கரவாதத்திலை ஈடுபடேல்லையெண்டும் அடிச்சுக் கொண்டரட்டாம்."

"...சரி அடிச்சுத்தாறன்... கொஞ்சம் பொறுத்துக் கொள்..."



"...ஆச்சிக்கு எத்தினை வயது..."

"ஆச்சி எட்டாம் ஆண்டு பிறந்ததெண்டால் கணக்கைப்பாருங்கோவன்..."

"...ஐயா விதானையார் போடப்போறார் கெதியா அடிச்சுத்தாருங்கோ..."

வெற்றுக்கட்டில் பிள்ளையைக் கிடத்தியவள் போல அவசரப்பட்டாள் சின்னத்தங்கம். அடித்துக் கொடுத்த கடிதத்தைக் கொண்டு வெயிலுக்குள்ளால் ஓட்டமும் நடையுமாகச் சென்றாள் அவள்....

"...ஐயா, ஏ. ஜீ. ஏ. துரை இருக்கிறாரோ..."

"...இருந்தால் என்ன..."

—பியோன் சிதம்பரபிள்ளை.

"ஐயாட்டை ஒரு கையெழுத்து வாங்கவேணும்..."

"...எத்தினை பேர் நிக்கினமெண்டு பார்... நீ வந்தோண்ணை நுழையிறன் எண்டு நிக்கிறாய்..." சீறி

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தா காலம் மாறுமா?

வீதியிலே சுற்றுகின்ற வேல் முருகா — நாங்கள்
வீதியிலே சுற்றுகின்ற காலம் மலருமா?
ஆதிசிவன் பொறியில் அவதரித்த முருகா — நாங்கள்
அவலமுடன் வாழ்கின்ற காலம் மாறுமா?

மயிலுடன் உலகம் சுற்றிய மாம்பழக் கந்தா — நாங்கள்
மகிழ்வுடன் வாழக் காலம் மலருமா?
வள்ளி தெய்வானையுடன் வாழும் வடிவேலா — எங்கள்
கல்வி, பொருளாதாரம் கணனியாய் மாறுமா?

வேறு

ஆழக் கடல்களிலும் காட்சி அளிக்கின்றாய் முருகா,
ஏழைக் குடிகளிலும் காட்சி அளிக்கின்றாய் கந்தா
கூலி உழைப்பவர்களிலும் காட்சி அளிங்கின்றாய் குமரா,
கொடுமைகள் அழிந்திடக் காட்சி அளிக்காயோ வேலவா?

— புலேந்திரராஜா —

# நலமெலாந் தருவான்!

*இராகம் — சண்முகப்பிரியா* *தாளம் — ஆதி*

எடுப்பு

நல்லூர் முருகையன் நலமெலாந் தருவான்
சொல்லால் விளங்காத சரவணப் பொருளான்

தொடுப்பு

ஆருயிர் அனைத்தும் அருவமாய் நிற்பான்
அண்ட சராசரங்கள் அனைத்தையும் காப்பான்

முடிப்பு

பார்தனில் அறுமுகம் பரமரில் உதயம்
ஓர் அந்த முகமொன்று ஓமெனும் விளக்கம்
கூர்முனை அயில்வேல் கொடுவினை போக்கும்
போர்தனில் க்ரவுஞ்சம் பொடி பொடி யாக்கும்
(நல்லூர் முருகையன்)

வெற்றிவேல் முருகன் விசை கொண்ட மயிலோன்
பற்றிய தொடர்வினைப் பாவங்கள் அழிப்பான்
முற்றிய பிறவியை முற்றுறச் செய்வான்
பற்றினால் அவன்பதப் பரமுத்தி அருள்வான்
(நல்லூர் முருகையன்

— கைதையூர் க. நடராசா —

# பேரெழிலைப் பேசலாமோ...?

வேலாட, வினையோடத் தேனோடும்
தேவாரத் தொலிகள் கூட......
பூவாடப் புயங்களிலே ஒளியாடப்
பூவையரின் மனங்களெல்லாம் மகிழ்ந்துபாட...

காவடத் தென்றலிலே கனிந்துருகிக்
களைதேய்ந்து கண்கள் பாயத்.....
தானாடி வருகின்ற தேவனிவன்
திருவதனப் பேரெழிலைப் பேசலாமோ...?

கருணைபொழி கண்களிலே தெளிவிருக்கும்!
சற்பூரச் சுடரொளியோ பாவம் தீய்க்கும்!
திருநீறு நெற்றியிலே திகழும் பாங்கில்
திவ்ய ஒளி சூழுமிங்கு! இருட்டுப் போகும்!

கொடியேறும்! கோடிமுறை தொழுது போகச்
சனம் திரளும்; சத்திரமும் நிரம்பியாகும்!
முடியோடு வருந்தேங்காய் சிதறிப் போகும்!
முற்றமெல்லாம் இளநீரால் ஈரமாகும்!

மணியாரம் இளங்கழுத்திற் கோலம் போடும்!
மலர்மாலை அதைச் சூழ்ந்து தானும் ஆடும்!
துணிவோடு உரம் சேர்க்க மின்னும் வேலும்,
துயர் விலக்கி வைக்கவென்று முன்னே தோன்றும்.

'நல்லூரான்' பேரெழிலைப் பருகவென்றே
நலம் தேடிச் சனம் சேர்ந்து ஒன்றிப்போகும்!
தொல்லையெல்லாம் சிலநாளில் மறந்து விட்டு
திருநாளின் இனிமையிலே புனிதமாகும்!

இளமையிலே பொலிந்து வரும் இதயச் செம்மல்...
அபிஷேகம் காணவெனக் காத்திருந்தோம்!
வளமெல்லாம் சேர்ந்திருக்கும் வண்ணவேலன்
வலம் வருமிவ் வேளையையே பார்த்திருந்தோம்!

வெற்றியினைத் திலகமெனச் சூட்டிக்கொண்டு...
நரைத்திளைக்கா இளமையுடன் எளிமை பூண்டு
குற்றமெலாம் களையவென்று கொள்கையுற்று
கூர்வேலைக் கொண்டவனின் எழிலோ மங்கும்?

பேரெழிலே! புவனியிலே உள்ள எல்லாப்
பொருள்களுக்கும் கர்த்தாவே! உன்னில் சிந்தும்
சீரெனவே அவையாகும்! வேறே இல்லை!
செந்தமிழால் உன்னெழிலைப் பேசப் போமோ?

— தாட்சாயணி —

# வன்னியில் இருந்து வாவென்றது...

முதுமைக் கிழவியின்
முகத்துச் சுருக்கம் போல்
கனரக வாகனங்களினதும்
கால் பூட்சினதும்
அடையாளங்கள்
எம்
தாய் மண்ணில்
பிள்ளை பெற்ற
பெண்ணை அவள்
அடி வயிற்றின்
சுருக்கங்கள்
அடையாளம் சொல்வதைப்
போல்
தமிழனின்
அடிமைத்தனத்தை
அடையாளம்
காட்டி நிற்க
வன்னியில் இருந்து
என்னை
யாழ். வாவென்றது
சத்தமின்றி
உயிரோடு சமாதி கட்டவா?

— நா. நவாஸ் —

# வாழ்க நம்தேசம்!

கால்களைக் கட்டியிங்கே
கடுந்தவமிருக்கின்றேன்!
என்மோனத்தவம் கலைத்து
முகிலைக் கிழித்தங்கே
சின்னக் குருவிகளே
என்ன தேடுகிறீர்?

வானத்து வீதிகளில் — உங்கள்
வண்ணக் குரலிசைத்து
வடிவமேன் காட்டுகின்றீர்?
தின்ன இரைகளங்கே
சிதறிக்கிடக்கின்றனவோ?
என்ன! விழலுக்கேனிந்தஆர்ப்பாட்டம்?

நான்வாழும் தேசமும்
வளமாகி விட்டதிங்கே
பாணும், மீனும்
பல்சுவை பண்டங்களும்
வண்ணத் திரைகளிலே
"சின்ன"ப் படங்களும்,
இடறிவிழுந்தால்
விழுந்த இடத்திலேயே
இளைப்பாற மதுக்கடையும்;

காலையும் மாலையும்
வெள்ளை யுடையுடுத்த
கள்ளமில்லா பள்ளிப்பெண்களோடும்
வாயும் கையும் நீளுமட்டும்
வாந்தி வரும் வார்த்தைகள் வீசி
வீதிதோறும் நாறிப்போக
வாய்ப்பாய்ப் போச்சிங்கே!
தட்டிக்கேட்க ஆளில்லை
உன்னைப்போல் இங்கும்
ஒரே சுதந்திரம்!
வண்ணக் குருவிகளே
வான்விட்டொருகணம்
வந்துசேருங்கள்!

நான்மட்டுமிங்கு
கடுந்தவமிருக்கின்றேன்!
நெஞ்சுக்கனலெல்லாம்
நெடுந்தூரம் எரிந்தாலும்
உள்ளங்கையால் ஒருசேரப்பொத்தி
கண்ணை இருளாக்கி
கடுந்தவமிருக்கின்றேன்!

எத்தனை பிள்ளைகளை
எங்கெங்கோ புதையவிட்டு
ஏங்கித் தவிக்கும்
அன்னையர் தவிக்கட்டும்!

கட்டுமரமேறி, கடல் மூழ்கி
கரைதட்ட உடல்சிதைந்து
நாறிப் பிணமாக
நம்மவர்கள் ஒதுங்கட்டும்!

வாழுங் குருத்துக்கள் வழிதவறி
சீரழிந்து சிதறிப் போகட்டும்!
இனி நோகும் சமுதாயம்
நொடிப்பொழுதில் தோன்றட்டும்!

கோயில் விழாக்களிலும்
கும்மாளத் தாளங்களிலும்
கோஷ்டிச் சேட்டைகளிலும்
குப்புற முகம் புதைத்து
எல்லாமும் மறப்போம்!
எல்லாமும் மறப்போம்!!
வாழ்க நம்தேசம்!
வாழும் நம்தேசம்!

— சஞ்சயன் —

# அகராதி

மரங்கள்

வானத்தந்தையும்
பூமித் தாயும் சேர்ந்து,
பெற்றெடுத்த
பச்சைக் குழந்தைகள்.

★ ★ ★

சுதந்திரம்

அறுசுவை உணவு உண்ணக்
கனவு கண்டேன்,
விழித்துப் பார்த்தபோது
அருகிலிருந்த பிச்சையெடுக்கும்
திருவோட்டைக் காணவில்லை.

★ ★ ★

சூரியனும் பூமியும்

நானோ,
எப்போதும் உன்னையே
சுற்றிக் கொண்டிருக்கிறேன்.
நீயோ,
என் காதலை மறுத்து
உன் வெப்பக் கிரணங்களால்
தாக்கிக் கொண்டுருக்கிறாயே.

★ ★ ★

நேர்மாறு

ஓர் இனத்திற்காக
உழைப்பவர்கள்
பயங்கரவாதிகள்,
அந்த இனத்தையே
அழிப்பவர்கள்
பலே, வீரர்கள்!

— குழியூரான் —

# வெளிநாடே வேண்டாம்

ஆயிரமாய் செலவழித்து
அகதியாக அநாதையாக
கடல்கடந்து வெளிநாட்டில்
கரைசேர வேண்டுமா?
உள்ளூரில் படித்து நல்ல
உத்தியோகம் பார்த்தாலே
உயர்வு தன்னால் வரும்
உள்ளமும் அமைதி பெறும்.

மதிகெட்டு வெளிநாட்டு
மயக்கத்தில் நிலைகெட்டு
வெளிநாடு செல்லவென்று
வீட்டை விட்டுப் புறப்பட்டு
ஒருநாடு போவதற்கு
பலநாடு தான் அலைந்து
விதி என்று பழி போட்டு
வீண்செலவு தான்செய்து

படித்ததை இடையில் விட்டு
பார்த்த வேலை குறையில் விட்டு
பெற்றவரை உற்றவரை
கற்றவரைக் கைவிட்டு
சுகபோகம் தனைநினைத்து
சிறகடித்துப் பறந்து சென்று
அடைகின்ற பயன் என்ன
கரைகின்ற பணம் தானே!

இயந்திர வாழ்க்கையிலே
இயந்திரமாய் மாறி அங்கு
சுதந்திரமாய் வாழ்ந்தாலும்
சுகபோகம் இருந்தாலும்
கோடியாய் உழைத்தாலும்
குபேரனாய் ஆனாலும்
பிறந்தமண்ணில் உள்ள சுகம்
பிறநாட்டில் கிடைத்திடு(மே)மா?

கால்வயிற்றுக் கஞ்சியேனும்
கஷ்டப்பட்டு உழைத்துண்டு
களிப்போடு எம் மண்ணில்
காலத்தைக் கழித்திடுவோம்
அஞ்ஞானம் அகல்வதற்கு
மெய்ஞ்ஞானம் படித்திடுவோம்
விஞ்ஞானம் அலைபாயும்
வெளிநாடே வேண்டாம்.

— கங்கா —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கற்பகம்

வானோங்கி நீண்டு வளர்ந்த பனைமரங்கள்
னோ குறைந்து மடிந்தன இன்றைக்கு
ஆர்தான் இதைத்தடுக்க இங்குள்ளார் ஆண்டவனே
ஆர்வமாய் சந்ததி நட்ட பனைமரத்தை
போரென்னும் பேரிலே வெட்டி விரயமாக்கி
ஊரெல்லாம் மக்களிடம் உள்ளக் குமுறல்
ல் ஆண்டு காலப் பரம்பரையாய் நீண்ட
லவளத்தைப் போக்குவதை நித்தமும்
யார்பொறுப்பர்?
யாழ்ப்பாணக் கற்பகம் மண்ணாக ஆகிப்
னந்தோப்புப் பாலை வனமாறிடுமோ?

— ஜெ. நிவேதன் —

# செந்நீரே கண்ணீராய்...!

(கடந்த 25-07-98 அன்று தமிழகம் நோக்கி அகதிகளாய் செல்கையில்
லில் மூழ்கிமாண்ட தமிழ் மக்களிற்காக)

தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா''
மிழ்தையொத்த வரிகளாம் அருமையான சொற்களாம்
வழும் காற்றும் அலைகளும் தமிழர்புகழ் பாடமுன்
வளுகின்ற இனமதாம் தொன்தமிழன் நிலையிதாம்!

வும் (எறி) கணைகள் குண்டுகள் உயிர்
வ வரும் (வான்) ஊர்திகள்—ஐயோ
வும் வந்து வாட்டமுன் யாமும்
ாவோம் தமிழகம்; யாசித்தேனும் வாழுவோம்

ன்றெடுத்தா முடிவென்று ஏறியே படகினுள்
கன்றுடன் பசுக்களும்'' கனவு கண்டிருந்திட
வன்றிட முயுமா விதியையாரும் மாற்றவா
கான்றிடாது விட்டிடேன் கொடுமறலி குதித்திட

சியெழுந் தலைக்கரம் மூர்க்கமாக மோதிட
சிற்காகக் கூட்டத்தைக் கவனமின்றி ஏற்றியே
யாசிக்காது செய்ததால் யோகமங்கோ கடலிற்கு
சிடாமல் நுழைந்தது; படகு குப்புறக் கவிழ்ந்தது!

மூழ்போதும் கடலிலே மிதக்கையிலும் ஐயகோ
ளும்போதும் மக்களே மனதில் நினைத்ததென்னவோ?
ழியதே இறுதியில் அந்திம இல்லமாய்
ழிகையில் மாறிய ஞாபகம் வருத்துததே

ங்கிருந்தாலும் நம் இனத்துக் கழிவு சொந்தமோ
மில் கடவுளே—தமிழர் புரிந்த பாவமென்னவோ
கமித்தே ஏகமாய் சாகரத்தில் துயின்றிடும்
சாந்தங்களின் நினைப்பிலே சொரியும் செந்நீர் கண்ணீராய்.

— அனலையூர்ச் சேந்தன் —

# போக்கான காலம் மீண்டுவரும் மீதமிரு!

ராரோ ஆரிவரோ ஆரடித்து நீயழுதாய்?
சிப்பழுத்த'' உன்தந்தை கடித்தாரோ சொல்லியழு
ாத உன்துயரம் மீதியையும் கூறிவிடு
ாத அவர்காதில் ஈயமதை ஊற்றிவிடு!

ாதாதோ உன்வயதும் பொல்லாப்பைச் சொல்லியழ
ததோ செய்கின்ற ஏக்கமதை எரித்துவிட
பிர்'' போட்ட உன்அப்பன் குதிர்தனையே கொளுத்திவிடு
ற்றாத் துயர்தன்னை ஆற்றோடு போகவிடு!

சாயேர உன்மழலை வாய்திறந்து அமுதாக
யா அறைந்ததுஉன் பேரழகுக் கன்னத்தில்?
ந்தாள் அடி வாங்கிப்பேச்சற்றுக் கிடக்கின்றாள்
ா (கி) லும் வாய்திறந்து நீதிதனை உரைத்துவிடு.

ட்டியில்லா வெற்றுடம்பு வேகின்ற அடிவயிறு—'பேட்டி'
க்காமலே தெரியுதடி உன்கொப்பன் ''வீரக்கதை!''
டையிலே போவதற்குப் 'பாஸ்போட்டும்' எடுத்தாச்சாம்
ளுக்கொட்டில் 'கிளியரன்ஸ்' எடுத்தாலே எல்லாஞ் சரி!

வீட்டுப் பானையிலே பூனையொன்று—நல்ல
கயத்தான் உறங்குதடி; பார்த்த நெஞ்சம் வேகுதடி;
க்கூலிக்காசுதனைக் கூழுக்கே தாராமல்
த்தடிக்கும்'' உன்தந்தைகுரல் வளையை நெரித்துவிடு!

தையிலேபர தேசிச்செத்தையாய்க்கிடந்தவனை
த்தையிலே போட்டவன்தன் புத்தியைச் செருப்பாலடி
தனைக்கும் அசராமல் அசைவற்றுப் பிணம்போல
திரையாய்க் கிடக்கின்ற நீசனையே நீயும் அடி!

வெட்டிரும்பு'' வேலையிது வெட்டியாய்க்கிடக்கவைத்துப்
டியில்லா நாய்போலப் பாரெங்கும்பாயவிடும்
லிலே படுத்திருக்கும் உன்னப்பன்கை யிருக்கும்
த்திலினால் ரெண்டு அவன்மண்டையிலே போட்டுவிடு!

ம்நீ! அறியாப்பருவம் உன்வயது,
த்தழுது உன்தாயைக் கட்டியழத் தான்தெரியும்
டிவைக்கும் 'அரக்குச்' சாராய அரக்கனை நீ என்ன
செய்வாய்?
க்காதே உன்னுயிரைப் பக்குவமாய் வைத்துக்கொள்,
ாக்கானகாலம்'' மீண்டும்வரும்—மீதமிரு!

— யா. தென்றல் —

# சண்டை

குடும்பத்துள் சொத்துச் சண்டை,
அயலானுடன் வேலிச் சண்டை,
பிறருடன் சாதிச் சண்டை,
ஜாதி ஒன்றாயின் மதச் சண்டை,
மதம் ஒன்றாயின் மொழிச் சண்டை,
மொழி ஒன்றாயின் இனச் சண்டை,
இனம் ஒன்றாயின் நாட்டுச் சண்டை,
உன் குரூரப்புத்தியால் சண்டையிட்டு
சண்டைக்கு சமாதானம் சொல்லி
சமாதானத்துள் சந்தேகம் எழுப்பி
மீண்டும் மீண்டும் சண்டைகளே
வாழ்வாகக் கொண்ட மானிடா,
நீயும் விலங்குதானே(ா)?— ஐந்தறிவு
விலங்கும் உயர்வுதானே(ா)?!

—எஸ். சிறேமா —

# கெட்டுப்போகுது பட்டணச் சமூகம்!

புதுசாக வந்தாலும்
கலந்து ஓடுங்கோ
ஒன்றுக் கொன்று
ஒன்றுமே செய்யாது.
மண்ணெண்ணெய்
மலிவென்று
கலப்பதால் உண்டாகும்
மாசெங்கே போகுதோ?

கொழும்பில் லீற்றர்
ஐம்பது மட்டுந்தான்.
இங்கு லீற்றர்
எண்பது மட்டந்தான்.
முட்டிடும் சென்றிகள்
இறங்கி ஏறிட
முப்பது மைல்தான்
ஓடுது மீற்றர்.

சொட்டு வருத்தமென்று
வாட்டுக்குப் போனால்
கெட்ட வருத்தமென்று
ஒட்ட வெட்டுத்தான்.
கான்சரோர கழலையோ?
வெட்டின பிறகுதான்
சும்மா கட்டியென்று
சிம்பிளாய்ச் சொல்லுகினம்.

எஞ்சினியர் ஒழுங்கைக்கு
இருபது தார்பறல்.
எலக்ரீசியன் றோட்டுக்கு
இரவெல்லாம் மின்சாரம்.
நமக்கு மின்சாரம்
நாலு மணித்தியாலம்.
வெட்டுவினம் அதிலையும்
மூன்று மணித்தியாலம்.

கெட்டுப் போகுது
பட்டணத்துச் சமூகம்.
தொட்ட இடமெல்லாம்
கொட்டகை மினிக்கள்.
மின்மினி நக்மா
போஸ்ரர்கள் ஒட்டி
தட்டியைச் சாத்தி
சரியான கலக்ஷன்.

ஐந்து ரூபாய்க்கொன்று
மூன்றுக்கு ஐந்து ரூபாய்
என்றல்லோ விலைகுறைஞ்சு
போச்சுது பத்திக்கு.
பத்திக்குப் பின்னிருந்து
சுத்திவிடும் புகையால்
சுத்தமான இளசுகள்
சீர்கெட்டுப் போகுது.

வட்டியின் குட்டியில்
அட்டியல் வாங்கி
குட்டிக்குத் தோதான
மாப்பிள்ளை பார்க்கமுன்
பெட்டியைத் தெரியாமல்
மறைகின்ற மாயம்
மலிவாகப் போச்சென்று
படிக்கின்றோம் தினசரியில்.

பட்டணம் படும்பாடு
பாவிகள் வாழ்வதால்
சொட்டு நாம் சிந்திக்க
சுகமான வழியுண்டோ?
பட்டு நாம் நொந்து
போயுள்ள வேளையில்
[illegible]
[illegible] வழியுண்டு.

''சரா''

# மூடர்க்குழைத்த உடல்

கூடிப் பிறப்பதெல்லாம் இந்த மண்ணில்
கூட்டைப் பிரிப்பதற்கே நண்பயோகா
தேடித் தொகுப்பதெல்லாம் சொந்தமென்று
தானாரத் தினத்தினுக்கே நண்பயோகா!
கோடிப் பணமிருந்தால் வந்துசேர்ந்து
கூடி மகிழ்ந்திருப்பர் நண்பயோகா!
ஆடித் தடம்புரண்டால் மண்ணைத்தூவி
ஓட விரட்டிடுவார் நண்பயோகா!

★ ★ ★

உற்ற துன்பமெலாம் நன்மையாக
ஊருக்கு கிறைத்தபுனல் நண்பயோகா!
பெற்ற அன்னையெனில் ஜென்மந்தோறும்
போற்றிப் பணிந்திடலாம் நண்பயோகா
கற்ற நிற்பதெல்லாம் நெஞ்சம் மீந்த
சூதும் சுரண்டலுமே நண்பயோகா!
முற்ற மண்ணில் விழுந் நொந்து கோணி
மூடர்க் குழைத்தவுடல் நண்பயோகா!

★ ★ ★

பாதை திறந்திருந்தால் தஞ்சந்தேடி
பாம் நுழைந்துவிடும் நண்பயோகா!
காதை கொடுத்திருந்தால் கையில் வீழ்ந்து
காசும் கரைந்துவிடும் நண்பயோகா!
கோதை குலத்திருந்தால் பஞ்சம் சேரும்
கோடை விரைந்துவரும் நண்பயோகா!
சிதை எனக்கிருப்பாள் நெஞ்சத்தேற்றி
சோகம் மறந்திருப்பேன் நண்பயோகா!

— மாவை வரோதயன் —

# மனுக்குலமே! மாற்றம் காண்...!

(18. 07. 1998 சஞ்சீவியில் வெளிவந்த ''பிறர்க்குத் துணையாமோ?''
என்ற கவிதைக்குப் பதிலாய் எழுதப்பெற்றது.)

தக்கன் மகளே தாழ்பணிந்து, நீ சுந்த
தமிழ்கொண்டே நீதியை கேட்கிறேன்
நக்கீரன் வழியை நாடியே சாடுகிறேன்
ஏற்பதும் விடுவதும் உன் பொறுப்பு

பெற்றவளே படைப்பினில் பேதமாய் இரப்பார்
ஈவாரென இருபிரிவு வைத்ததேன்?
ஏற்றத்தாழ்வு ஏதும் மாற்றமின்றி இன்றும்
நானிலத்தில் தொடர்வது நன்றோ?

கூனும், குருடும்கூட உடலும் ஊனமாய்
குறை உறுப்பென உள்ளம் நோவார்க்கு
தேனூறும் வாழ்வா தெய்வமே கொடுத்தாய்
சிருஷ்டிப்பிலும் ஏனம்மா சிறுமை

கர்மவினையெனில் காரணகர்த்தா நீயேதான்
ஈன்றவளே ஈனத்தை ஒப்புக்கொள்
சர்வமும் அடக்கிய சக்தியென்ற எண்ணம்
தந்த கர்வமோ, இது தர்மமோ?

சிங்காரரூபமாய், சங்கரன் துணைவியாய்
சரிபாதி கொண்டது சங்கரிநாளும்
சங்காரம் செய்து, சத்தமின்றி உயிர்க்கு
மங்களம் பாடிக் களிக்கவோ?

நிணம் கண்டு நாணாது நிதமும் நாடகம்
நடத்தும் சதிதான் விதியென்றோ
பிணம் கண்டும் பிச்சி கலங்காது நர்த்தனம்
ஆடுவது நின்தாகம் தணிக்கவோ?

ஈயக்குருவிகள் விண்ணில் குண்டுகள் பொரிக்கும்
கிதறி சிதையும் மனித தசைகள் குவியும்
காயாத ஓடும் குருதியும் காணாதோ அஞ்சறிவு
ஜீவனோ அடக்கும் உன்பசியை?

தழை கடிப்பதின் தலை கொய்வது பழி
கதறப் பலிகொள்வது பாவம்
பிழையில்லை எனப்பிதற்றுவாரின் சித்தம்
தெளியாதோ சிரம்வீழ்வதும் மறையாதோ?

பேசாது இருப்பது பெருங்கருணையோ, ஆத்தா
பேடானாலும் பேடியல்ல உன்பேரால்
கூசாதுகூடி கூற்றம் தேடுவோரை தடுத்து
ஆவிபிரியாது காப்பதுன்கடனே.

நின்று கொல்லும் வேதம் நீகாட்டும் பாடமோ
தினமும் போடும் புதிய வேடமோ
அன்றே தோன்றி அக்கிரமத்தை வென்றால்
அறம் வாழும் மறம் தாழும்.

சினம் கொண்டு சீறி தீங்கிழைக்கும் தீயாரும்
பொருள் ஈயாரும் இப்புவியில்
மனம் மாறி மாண்புற வேண்டி எல்லோரும்
எல்லாம் பெற்றுய்யும் வழி கைகூடுமோ?

சமாதி போதிக்கும் சமரசம், எவர்க்கும் போகும்
சுடலை தருமொரு ஞானம், இவை
சன்மார்க்க நெறி செல்ல சரியான பாதை
ஏற்றொழுகின் மனுக்குலம் தழைக்கும்!

— க. தியாகராசா —

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வெள்ளம்

அன்பு என்பது வெறும் பிரமை என்று வாதிடுபவர்கள் இருக்கிறார்கள். காதல் என்பது கூட பொய்யென்றும் இச்சையின் போர்வையே அது என்றும் கூறுபவர்களும் இருக்கிறார்கள். ஆனால் அடுத்தவர்கள் காதலுக்காக உயிரையும் மாய்க்கிறார்களே!

அதை மடைமை என்பதா? இல்லவே இல்லை.

அன்பும் — காதலும் — பாசமும் மனதை ஆட்டிப் படைப்பதும் இதனால் உலகில் பல வரலாறுகள் பிறந்ததும் உண்மைதானே.

அன்பு என்றதும் உடல் புல்லரிக்கிறது. அதனை அளக்க உலகினில் ஓர் அளவுகோல் கிடையாது. உடலைக் கிறியும் கூட அதனைக் கண்டுபிடிக்க இயலாது.

உயிர் என்பதுகூட அப்படித்தான். அதனையும் உடலில் எங்கே ஒட்டி இருக்கிறது எனக் கண்டுபிடித்துவிட இயலாது. இதயத்தில் என்பார்கள்; மனதில் என்பார்கள்; தலையில் என்பார்கள்.

உடம்பில் உயிர் இல்லை என்று கூறிவிடல் இயலுமா? அப்படி என்றால் அன்பும் இல்லை என்று கூறிவிடலாம்.

அன்பு அன்பு என்று வாயால் சொல்லிக்கொண்டே இருந்தால் அன்பு மலிந்துவிடாது. அவனவன் செயலோடும் பண்போடும் பிறப்போடும் இணைந்தது அன்பு.

அன்பு மனதிலே ஆழமாக வேரோடி விடாத போது இவ்வுயிர் உடம்போடு கூடி இருப்பதால் உலகம் பயன் அடையாது. எனவே அன்புக்குத் தலைவணங்கு.

அன்போடு இணைந்தது — இயைந்தது தான் வாழ்க்கை. இவ்வுயிர் என்போடும் உடலோடும் எப்படிச் சங்கமித்து நிற்கிறதோ அவ்வாறே வாழ்வில் அன்பும் கலக்கட்டும்.

அன்பில்லாத போது உயிரில்லா உடலுக்கே அவரவர் ஒப்பாகிறார்.

*அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு*
*என்போ டியைந்த தொடர்பு — 0073*
*(அன்புடைமை)*

*— அம்பிகைபாகன்*

# இந்த வார இராசி பலன்

## [15 - 08 - 1998 முதல் 21 - 08 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| வி | சனி சந் | | |
| கே | இராசிச் சக்கரம் | | சூ செ புத வெ |
| | | | ரா |
| | | | |

மாற்றம்:

15 – 8 – 1998 கார்த்திகை நட்ஷத்திரம் மேடஇராசியில் சந்திரன் இருக்கும்.

அரசியலில் புதிய திசை திருப்பங்கள் ஏற்படும். அவலமான மனித குரல்கள் எழும். ஐ. நா. வின் மெல்ல நடை இங்கு தோன்ற அரசியல்வாதிகள், மதபீடத்தவர்களிடமும் மக்களிடமும் கருத்துக் கேட்க இடம் உண்டு. தொழிலாளர், மாணவர்கள் உரிமைக் குரல்எழுப்புவார்கள்.

இந்தியாவில் எதிர்க்கட்சி அரசாங்கத்தைப் பயமுறுத்தும். மக்கள் செல்வாக்கு எதிர்க்கட்சியின் பக்கம் சாயும். வன்செயல்கள் அதிகரிக்கும். எல்லையில் பதற்றம் அதிகரிக்கும். மேற்கு நாடுகள் தமது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப புதிய திட்டங்கள் தீட்டும். கிழக்கு நாடுகளில் செல்வாக்கு தேட வழி வகுக்கும். கிழக்கு நாடுகளில்இயற்கை, செயற்கை அழிவுகள் மேலிடும்.

மேடம்: வாழ்க்கையே போராட்டம், போராட்டமே வாழ்க்கை. உலகத்திற்கு பயந்து, பயந்து வாழ்வதால் என்ன பயன்? எதிலும் துணிவு வேண்டும். குற்றம், பேசித்திரிபவர்களில் எவராவது குற்றம் செய்யாதவர்களா? தொழில் ஸ்தானத்தில் உறுதியுடன் செயற்படுங்கள். மனச்சோர்வு, பணத் தடங்கல், வீடு மனை, தொழில் பீடசெலவுகளால் சஞ்சலப்படுவீர்கள். வருங்காலம் ஒளிமயமாகும். தொடர்ந்து செயற்பட்டபடி இருங்கள். காணி பூமி, வழக்கு வம்பு அல்லது பலர் பேசித்திரியும் சம்பவமொன்று நடக்கும். உஷ்ணபீடைகள், விஷ, நெருப்புப் பீடைகளால் ஆபத்து வரலாம். வயிற்று வலி, உரசல்காயங்கள் சிலருக்கு வர இடம் உண்டு. குலதெய்வ வழிபாடு, ஆலயதரிசனம் ஓரளவு மனச்சாந்தியைத்தந்து பிரச்சினைகளை தணிக்க இடம் உண்டு.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

இடபம்: என்ன அமைதியாகப் பார்க்கிறீர்கள்? உலகத்தில் மாறி மாறிப்பல பிரச்சினைகள் வந்தபடிதான் இருக்கும். தேவையற்றவற்றை தவிர்த்து, உங்களுக்கு இலாபம் வரும் காரியங்களில் செயற்படுங்கள். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். பணவரவு சுமாராக இருக்கும். நன்மைகள் அதிகரிக்கும். ஆயினும் அயலிலிருந்து ஒரு கண் உங்களைப் பார்த்தபடி இருப்பதை மறந்துவிடாதீர்கள். வீடு மனைச் செலவு அதிகரிக்கும். வாகனச் செலவு அல்லது இழப்பு ஏற்படலாம். சங்கீதம், ரீ. வியால் செலவுகள் அதிகரிக்கலாம். நெஞ்சுநோ, நரம்புச் சோர்வு, அதிக கோபம் என்பன கொடுக்கும். உடல் நிலையில் ஒய்வு உங்களுக்குத் தேவையாகும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வியாழன்.

எவரும் கண்டறிய முடியாது. தொழில் ஸ்தானத்தில் இப்பொழுதுதானே சிரித்து, சிரித்துப் பேசிக்கொண்டிருந்தீர்கள். அதற்குள் என்ன நடந்தது? அரைமணித்தியாலத்துக்கொருதரம் சிரித்துக் கதைப்பதுவும், கோபித்துப்பேசுவதுமாக இருக்கின்றீர்கள். சுயகௌரவம் அதிகம். யாருக்கும் தெரியாமல் ஜாதகக் குறிப்புக்களை பக்கத்திலுள்ள சோதிடரிடம் காட்டி ஆலோசனை கேளுங்கள். உடல்நோ, கைகால் உளைவு, நெஞ்சு படபடப்பு, சலவருத்தம், நாரிநோ, விறைப்பு, உஷ்ணபீடைகள்

## மகாதேவா ஜோதிடம்

என்பன மாறி மாறிக் கொடுத்தபடி இருக்கும். தேவைக்கு அதிகமாக வைத்திருந்தால் அதைப் பரவலாக்கிவிடுங்கள். அதனால் நிம்மதி ஏற்படும். தானதர்மம் செய்துவாருங்கள். தட்சணாமூர்த்தியையோ, அந்தோனியாரையோ உங்கள் சமயப்படி வழிபட்டு வாருங்கள்.

★ அதிர்ஷ்டநாள். புதன், வியாழன்.

## சோதிட சஞ்சீவி

மிதுனம்: எதையாவது எவரும் சொல்லட்டுமே எனக்கென்ன என்று ஏன் சொல்லுகிறீர்கள்? நாலுவிஷயங்களை அறிய நாலு இடங்களுக்குப் போய்வர வேண்டாமா? தொழில் ஸ்தானத்தில் பெட்டிப் பாம்பாக இருப்பதனால் ஒரே அலுப்பாக இருக்கிறது எனச் சொல்லுவீர்கள். அதிகமாக கதைத்து, கதைத்து காலத்தைக் கடந்து கொண்டிருப்பீர்கள். மேலதிகாரிகளின் கண்டிப்புக்கள் வந்தபடி இருக்கும். பழைய பாக்கி சிலருக்கு திரும்பி வரச் சந்தர்ப்பப் பேச்சுக்கள் ஏற்படும். காலத்தை அறிந்து செயற்பட்டு காரியமாற்றுங்கள். வாய்வு, வாத உளைவு, தலைவலி, வயிற்றுவலி, அதிக களைப்பு என மாறி மாறி வரலாம். நிதானமாக எந்த விஷயத்திலும் செயற்படுங்கள்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வியாழன்.

கடகம்: நீங்கள் எதையும் பகுத்தறிந்துதான் ஏற்றுக் கொள்ளுவீர்கள்! ஆனால் இரட்டை மனம் போராடிய படி இருக்கும். உங்களை

சிங்கம்: யார் எதைச்சொன்னாலும் செய்தாலும் உங்களை எவரும் அசைக்கமுடியாது. ஆனால் உங்களைப் புகழ்ந்து எவரும் சொன்னால் போதும். அவர்களுக்கு உதவிகள் செய்து கொடுப்பீர்கள். தொழில்ஸ்தானத்தில் கொஞ்சம் வேகமாக இருக்கிறீர்கள். நிர்வாகச் சிறப்பும், ஆழ்ந்த அறிவு அனுபவமும்உங்களின் தனித்துவத்தைக் காட்டும். பிழை என்றால் பிழைதான், சரி என்றால் சரிதான். எதிர்ப்பாலாருடன் கௌரவமாக நடந்து அவர்களின் உதவிகளைப் பெறுவீர்கள். வீடு மனைச் செலவுகள் அதிகரிக்கும். இடாம்பீகத்தை அதிகம் விரும்பாவிட்டாலும் உலகியலில் அதுவும் கொஞ்சம் தேவைதானே. வாய்வுத் தொல்லை, நெஞ்சுநோய், கைகால்வலி இருக்கும். கோயில் குளம் என ஓடித் திரிவீர்கள். ஆண்டவன் தொண்டு அளப்பரிய அமைதியைக் கொடுக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வியாழன்.

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 63

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| | ■ | 9 | | 10 | | ■ | |
| ■ | 11 | | ■ | 12 | | 13 | |
| 14 | | ■ | 15 | | ■ | | ■ |
| 16 | | 17 | | ■ | 18 | | 19 |
| 20 | | | ■ | 21 | | | |
| 22 | | ■ | 23 | | | ■ | |

சொற்சிலம்பம் இல. 63
சஞ்சீவி,
861, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................................
விலாசம்: ..........................................................
..........................................................

.................... இங்கே வெட்டுக ....................

முடிவு திகதி; 21 — 08 — 1998

**இடமிருந்து வலம்**

1. தனியாக அனுபவித்தல். 5. ஒருங்கு சேர். 7. கிறுகல். 8. எண்ணு. 9. கவிதையின் தந்தை. 11. இந்த எண்ணமே சுயநலத்திற்குக் காரணம். 12. ஆறாவது அறிவு படைத்த பிராணி. 14. போதையால் வருவது. 15. நோவு. 16. ஒற்றிக்கு கொடுத்தல். 18. உன்னுடையது. 20. பிள்ளை. 21. இக்கவிதை வடிவத்துக்கு தந்தை மகாகவி என்பர். 22. ஓரசைச் சொல், 23. விருந்தினன்.

**மேலிருந்து கீழ்**

1. பணிவிடை. 2. எல்லை. 3. உபதேசிப்பவன். 4. வித்தை. 5. ஆசான், 6. மகாபாரத பாத்திரம். 8. திருமணமாகாத இளம் பெண். 10. நாய். 11. வெட்டுதல். 13. தலைகாக்கும். 14. வெகுமானமாகத் தருவது. 15. விதம். 17. சிரசு. 18. தேர்தல்காலத்தில் பேச்சில் வழங்கப்படுவது. 19. மத்திய கிழக்கு நாடு ஒன்று. 21. பாய்.

### சொற்சிலம்பம் 61— விடைகள்

**இடமிருந்து வலம்**

1. அமாவாசை. 5. சிவிகை. 8. மன்னவன். 9. குதி. 10. வன். 11. ஆதி. 12. பார். 13. பாதி.15. அலி 16. கடைக்கண். 18. வத்தல். 20. கருமை. 21. மதலை. 22. அம்மா. 23. தில். 24. காளை 25. திரு.

**மேலிருந்து கீழ்**

1. அமளி. 2. மான். 3. வானவர். 4. சைவன். 6. விகுதி. 7. கைதி. 11. ஆதிக்கம். 12. பாலித்தல். 13. பாடை 14. தண்மை. 15. அவமதி. 16. கல் 17. கருமாதி. 19. தலை 22. அலை.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ **முதற்பரிசு:** க. சுதர்சன், தபாலக வீதி, சாவகச்சேரி.

★ **இரண்டாம் பரிசு:** செல்வி தட்சிகா ஜெயபாலச்சந்திரன், கைதடி வடக்கு, கைதடி.

★ **மூன்றாம் பரிசு:** ரீ. யசோதா, 14 'ஏ', அன்னசந்திர லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 62 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவையே ஒரு கலக்குக் கலக்கும் 'வயக்ரா!'

இந்தக் கட்டுரையும் அது எழுதப்பட்ட நடையும் சஞ்சீவியின் போக்குக்குப் பொருத்தமற்றது என்று சில வாசகர்கள் கருதக் கூடும். 'எய்ட்ஸ்' நோயைப் பற்றி அறிந்து கொள்வது போல மற்றைய புறத்தில் இத்தகைய விடயங்களையும் பொது அறிவு நோக்கில் நமது மக்களும் அறிந்து கொண்டு தான் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இக்கட்டுரை பிரசுரமாகுகின்றது.

(ஆ-ர்)

★ கிளின்டனின்... பொலீஸ்காரத்தன நடவடிக்கைகள்...

★ சதாம் ஹுசெயினின் சவால்கள்...

★ இந்தியா — பாகிஸ்தானின் அணுகுண்டுப் பரிசோதனைகள்...

இவ்வாறு எல்லாமே அமெரிக்காவுக்கு தலைவலி கொடுக்கும் பிரச்சினைகளாக இருந்தாலும், அதையெல்லாம் விட்டுவிட்டு இன்று அமெரிக்க மக்கள் தலையைப் போட்டு உடைக்கும் சமாச்சாரம் ஒன்று உண்டு...

அது 'வயக்ரா'...—!

இப்படித் தலை போகும் பிரச்சினையை எல்லாம் விட்டு விட்டு... தலையைப் போட்டு உடைக்கும் 'வயக்ரா' என்றால் என்ன...? அதன் பணி, பின்னணி என்ன...? மகிமை என்ன...?

சுருக்கமாகச்சொன்னால்—

'முந்தானை முடிச்சு' திரைப்படத்தில் பாக்கியராஜுக்கு முருங்கைக்காய் என்ன செய்ததோ... அதே பணியை ஏமாற்றமின்றி...—கொடுக்கும் உத்தரவாதத்திற்கு பிசகில்லாமல்—செய்கிறது 'வயக்ரா'...!

ஆண்மைக் குறைவு, சக்தியிழப்பு என்பவற்றிற்கு நிவாரணம் என்ற பெயரில் தொடர்பு சாதனங்களில் விளம்பரங்கள் கண்ணைப் பறித்தபடி உள்ளூரிலேயும், வெளிநாடுகளிலேயும். இதற்கான மாத்திரைகள், களிம்புகள், விசிறிகள் ('ஸ்பிறே') என்பன அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருக்க... அண்மையில் சுவிங்கம் வடிவிலும் இதற்கான நிவாரணம் சந்தையில் புகுந்தது...



ஆனால் உள்ளூரில் முருங்கைக்காய், பேரீச்சம்பழம், பாதாம் பருப்பு, வெங்காயம் என்பனவற்றை பலரும் நாடிக் கொண்டிருக்க...

வெளிநாட்டிலே, மூலிகைகள், ஜின்செங் பொடிகள், முதலைப் பவுடர், சிறுத்தை எண்ணெய், ஸ்பானிஷ்ஃப்ளை காண்டா மிருகக் கொம்பில் தயாரிக்கப்பட்ட டொனிக் என்பனவற்றை நோக்கி ஆண்கள் அனைவரும் அணி திரண்டிருக்க...

அவையெல்லாம் எதிர்பார்த்த திருப்தியை கொடுக்கவேயில்லை என்பது ஏமாற்றம்தான்!

அந்த மாதிரி நேரத்தில்... அந்த மாதிரி இருக்கும்... என்று நினைக்கப்போய் நினைப்பே பிழைப்பைக் கெடுத்த மாதிரி ஆகிவிட்டது — பலருக்கு.

இதனால் ஓய்ந்து போய், சோர்ந்து போய் இருந்த பலருக்கு இப்போது 'வயக்ரா' ஒரு வரம்; ஒரு கொடை; ஒரு ஜாக்பொட்—பரிசு என்று தலையில் தூக்கி வைத்து ஆடுகிறார்கள் அமெரிக்கர்கள்!

விற்கும் இடங்களிலெல்லாம் கியூ. இன்னும் விற்பனைக்கு வராத கடைகளில் முன்பதிவு.

> ''மேலிருந்து
> கீழே விழுவது
> நாயக்கரா
> கீழிருந்து
> மேலெழுவது
> வயக்ரா!''

இது தவிர, இந்த 'வயக்ரா' மாத்திரையின் மகிமையையும், கீர்த்தியையும் அறிந்த பலர் மருந்துக் கடைகளுக்கு தொலைபேசித் தொடர்பு கொண்டு 'இருக்கிறதா? இல்லையா?', 'எப்போது வரும்?', 'வேறெங்கே வாங்கலாம்?' — என்று கேட்டு அறுக்கும் அறுவையில் வெளிநாடுகளில் மட்டுமல்ல நம் இலங்கையிலே கொழும்பில் கூட பல பார்மஸிக்காரர்கள் தொலைபேசி கிணுகிணுத்தால் ஓட்டமாக ஓடுகிறார்கள்.

இந்த மாத்திரையின் தன்மையை — குணத்தை — பொறுத்தோ என்னவோ... இதனைத் தயாரிக்கும் பைஸர் நிறுவனம் இந்த மாத்திரைக்கு நீலநிறத்தைத்தான் கொடுத்திருக்கிறது. (மாத்திரையைப் போட்டால் எல்லாம் நீலந்தானே!)

பைஸர்நிறுவனம் ஆண்மை சக்திக்கு என்ற ரீதியில் இந்த மாத்திரையைக் கண்டுபிடிக்கவே இல்லையாம். அக்கடா என்று — தமது பரம்பரைத் தொழிலாக இருந்த—இருதய நோயுள்ளோரின் இரத்தக் குழாய் அடைப்புக்களைப் போக்கக்கூடிய—மருந்துகளை கண்டுபிடித்து சந்தைப் படுத்தி வந்தவர்கள், கொஞ்சம் சக்திகூடிய புதிய ரக மருந்தொன்றைக் கண்டுபிடிக்க நினைத்தனர். அதன்படி பைஸர் ஆய்வு நிறுவன டாக்டர்களால் மருந்தொன்று கண்டுபிடிக்கப்பட்டு சில இதய நோயாளர்களுக்கு பரிசோதனைக்காகக் கொடுக்கப்பட்டது.

'ஐயோ, அம்மா!', 'ஆண்டவா!' என்று மூச்சு விடுவதற்கே கஷ்டப்பட்டு, இன்றைக்கோ நாளைக்கோ என்ற நிலையில் இழுத்துக் கொண்டிருந்த சிலர் இந்த மாத்திரை உள்ளே போனதும் துடித்துப்பதைத்துஎழுந்தனர்...... அருகே ஆராய்ச்சிக்காக நின்ற பெண் டாக்டர்களையும், உதவியாளர்களையும் அசைவப் (?) பார்வை பார்த்தனர். என்னவோ

**- ராஜகுமாரன் -**

ஏதோவென்று அவர்கள் பயந்து ஒதுங்கிக் கொள்ள... 'பெண் வேண்டும்?', 'பெண் எங்கே?', 'பெண், கொண்டா!', 'இங்கே 5 லட்சமோ... 5 கோடியோ கவலையில்லை பெண்தான் வேண்டும்......அதுவும் உடனேயே வேண்டும்'— என்று ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினார்.

ஆராய்ச்சியாளர்களுக்கு எதுவுமே புரியவில்லை. ஒரு மாத்திரை போட்டு 5 நிமிடத்தில் தங்கள் தொழிலையே மாற்றிவிட்டதே என்று மூளையைப் போட்டு குழப்பிக் கொண்டனர். 2 மணிநேர அட்டகாசத்தின் பின் அமைதி வழிக்கு திரும்பியவர்கள்... தலையைச் சொறிந்தபடி டாக்டர்கள் முன் கூனிக் குறுகி நின்றனர். வெட்கப்பட்டுக்கொண்டு ''என்ன? ஏது... இன்னொரு மாத்திரை கொடுங்கள்!''— என்று கேட்டபோதுதான் டாக்டர்களுக்கே உறைத்தது—இது ஏதோ வயது வந்தவர்களுக்கான சமாச்சார மாத்திரையாகிவிட்ட கதை. தொடர்ந்து கொஞ்சம் ஆராய்ச்சிகள், பரிசோதனைகளின்பின் 'வயக்ரா' சந்தைக்கு வந்து...இன்று சந்தையை ஆக்கிரமித்து விட்டது.

வாங்குவதற்கு ஆள்கள் கியூவிலே நிற்கிறார்கள். ஆனால் 'ஸ்டொக்' போதுமான அளவில் இல்லை. இந்த மாத்திரையின் விலை … 650 ரூபாய்தான். ஆனால் ஸ்டொக் இல்லாததால் கள்ளச் சந்தையில் 175 டாலர்கள் வரை —அதாவது நம்மூர் மதிப்பில் 12 ஆயிரம் ரூபாவரை—விலை போகின்றதாம்.


'வயக்ரா', 'வயக்ரா' 'வயக்ரா'—அமெரிக்கா முழுவதும் அங்கிங்கெனாதபடி



எல்லார் வாயிலும் இப்போது வயக்ராவே ஆக்கிரமித்திருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேல் ஒரு படிமேலே போய் ஒரு புதுக்கவிதை கூட வயக்ரா பற்றிப் பாடிவிட்டார் ஒரு கவிஞர்

> ''மேலிருந்து கீழே
> விழுவது
> நாயக்கரா
> கீழிருந்து மேலெழுவது
> வயக்ரா!''

இந்த மாத்திரையின் செயற்பாட்டு நேரம் 2 மணித்தியாலம்தான். சிறிய



'டையமண்ட்' வடிவில் அமைந்த, இந்த மாத்திரைக்கு 'மூர்த்தி சிறிது; கீர்த்தி பெரிது' என்ற பழமொழி நன்றாகப் பொருந்துகிறது.

அட்டா! என்று பக்கத்திலே பட்லிகளை வைத்துக்கொண்டு, கன்னாபின்னாவென்று இந்த குளிசைகளை போட்டால் அவ்வளவுதான். ஆளே அவுட்தான்!

இவ்வாறு இதுவரை கன்னா பின்னாக் 'கேஸ்கள்' 16 பேர் பரமபதமடைந்து விட்டனர். எனவே வைத்தியரின் ஆலோசனையின்றி இதனைத் தொடவே தொட வேண்டாமென்கிறார்கள் வைத்தியர்கள்

ஆனால் இந்த மருந்துக்கு எதிரான விமர்சனங்களுமில்லாமலில்லை. அதாவது 'வயக்ரா' வந்தாலும் வந்தது. ஆட்டம் கண்டு போயிருந்த கிழங்களெல்லாம் இந்த மாத்திரையை போட்டுவிட்டு ஆட்டம் போடத் தொடங்கி விட்டனராம். அதுமட்டுமல்லாது காலங்காலமாக காத்து வந்த தமது பழைய மனைவியரை விட்டுவிட்டு புதிதாக 'டீன் ஏஜ்' ஒரு சின்ன வீடு 'செட்' பண்ணக் கிளம்பி விட்டார்களாம்! இதனால் தனது வாழ்க்கையில் நிம்மதியே போச்சுது என்று ஒரு பெண்மணி 'வயக்ரா' தயாரிப்பாளர்களான பைஸர் நிறுவனத்துக்கு எதிராக வழக்குப் போட்டிருக்கிறார்!

'வயக்ரா' உலகத் தலைவர்களையும் விட்டபாடாக இல்லை. அமெரிக்கா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தோற்ற பொப் டோல் இந்த மாத்திரையின் தீவிர விசிறியாம். அவர் சொல்கிறார்: ''அசத்தலான மாத்திரை இது. அந்த நேரத்தில் சும்மா தூக்குகிறது. ஆனால் அதன் பின் ஒன்றே முக்கால் மணி நேரம் என்ன செய்வதென்றே தெரியவில்லை—'' என்கிறார்.

இந்தோனேஷியாவின் முன்னாள் ஜனாதிபதி சுஹார்ட்டோ இரகசியமாக 100 மாத்திரைகளை வாங்கி பத்திரப்படுத்தி வைத்திருக்கிறாராம்.

அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனுக்கு ஒரு விஷமம் நிறைந்த மனிதர் இந்த மாத்திரைகள் பத்தை அனுப்பி வைத்திருந்தாராம். தபாலில் வந்த இந்த மாத்திரைகள் கிளின்டனுக்கு ஒரு நாளுக்குக்கூடபோதாது என்று மேலும் குறும்பு பண்ணுகிறது ஒரு லண்டன் பத்திரிகை.

'வயக்ரா' செய்வதெல்லாம் பெரிதாக ஒன்றுமில்லைத்தான். என்ன இரத்தக்குழாயில் இருக்கும் அடைப்புகளை நீக்கி இரத்த ஓட்டத்தைச் சீராக்கி விடுகிறது இதனால் இரத்தம் போக வேண்டிய பகுதியெங்கும் வெள்ளமாகப் பாய்கிறது. இதனால்இருதயநோயாளி, சர்க்கரைவியாதிக்காரர் என்ற அனைவரும்தமது நோய்களிலிருந்து விடுபட்டு''ஜிங்குச்சா! ஜிங்குச்சா!! சிகப்பு கலரு ஜிங்குச்சா!! பச்சை கலரும் ஜிங்குச்சா!'' என்று பாடி ஆடத்தொடங்கி விடுகிறார்கள்.

ஆயினும் பாவித்தவர்கள் ''இதன் செயல்பாட்டு நேரம் 2 மணி நேரமாக இருப்பது அதிகம்... ஒரு 10 — 15 நிமி

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத்தங்கம்...

(V ஆம் பக்கத் தொடர்)

வான் பியோன் இதம்பர பிள்ளை.

"ஐயா, இண்டைக்கு எத்தினை நாள் உழைப்புப் பிழைப்பில்லை... சந்தைப்பக்கம் போய் இண்டைக்கு எத்தினை நாள்...நாங்கள் அண்டடிச்சு ஆண்டு வாயிலை போடுற நாங்கள்..."

"எணேய், ஆறெண்டாலும் இஞ்சை முறைப்படி தான் போறது...ஐயா எழும்புறார்...கச்சேரிக்கும் போகப் போகிறார் போல... நீ போயிட்டு மூண்டு மணி போலை வாணை..."

"...மூண்டு மணிக்கோ ஐயா..."

"மூண்டு மணிக்கு வந்தால் என்னைஉடனை துரையைப் பார்க்க விடுவியளோ...?"

"...நீ வந்து பாரன்..."

மூன்று மணிக்கு மீண்டும் வந்த சின்னத்தங்கம் ஏ. ஜீ. ஏ. யின் அறைக்குள் ஒருவாறு நுழைந்தாள்.

"என்ன விசயமணை...?"

"...கொழும்புக்குப் போற போமினையும் கடிதத்திலையும் கையெழுத்துப் போட்டுத் தாருங்கோ ஐயா..."

"...தா பாப்பம் கடிதத்தை..."

"...எணேய்... விதானை இதிலை கனக்க எழுதியிருக்கு ...இப்படி எழுதத் தேவையில்லையாம் ... சுருக்கமாக எழுதட்டாம் எண்டு சொல்லி எழுதிச்சுக்கொண்டு வா..."

"ஐயா, இதுக்கு நான் இப்ப உழைப்புப் புழைப்பு இல்லாமல் திரிகிறனய்யா... விதானை மூண்டு வரிதானே ஐயா எழுதியிருக்கிறார்"...

"...எணேய்... நீயோ நானோ ஏ. ஜீ. ஏ...? நான் தான் கையெழுத்து வைக்கிறது... நீயில்லை... நான் சொன்னது மாதிரி விதானையிட்டைப் போய் சொல்லித் திருப்பி எழுதுவிச்சுக் கொண்டு வா..."

"...அப்ப எல்லாம் புதுக்க அடிக்க வேணுமோ ஐயா..."

"...அடிச்சால் நல்லது..."

★ ★ ★

சின்னத்தங்கம் மிகவும் ஆவேசத்தோடு என்னிடம் வந்தாள்.

"...உந்தக் கோதாரியிலை போவார் என்னைப் போட்டு வதை வதையெண்டு வதைக்கிறாங்கள்... அந்த மனுஷி இராத்திரியும் சலம் விடமுடியாமல் கத்து கத்தெண்டு கத்தினது... விதானையை நான் எங்கையெண்டு தேடுகிறது... எங்களைப் போலை ஏழை எளியதுகளைப் போட்டு சிப்பிலி ஆட்டுறாங்கள்... இண்டையோடை எனக்கு எத்தினை நாள் உழைப்பில்லை...?"—சின்னத்தங்கம் கொதித்துக் கொண்டிருந்தாள்.

"...சரி சின்னத்தங்கம்... நீ உதுகளைக் கொண்டு கச்சேரிக்குப் போ... அங்கையொரு பெரியதுரை இருக்கிறார்... அவருக்கு உங்களின்ரை கஷ்டமெல்லாம் நல்லா விளங்கும்... நீ அவரைப் போய் கண்டு விசயத்தைச் சொல்லு..."

"...அவர் நல்ல மனுஷனோ ஐயா..."

"...ஓம் அவர் கடவுள் மாதிரி..."

சின்னத்தங்கம் தனது விண்ணப்பப்படிவத்தையும் முன்னுரிமைக் கடிதத்தையும் கொண்டு கச்சேரி நோக்கிப் போகின்றாள். கோவலனின் மனைவி கண்ணகி, தனது மற்றைய சிலம்பைக் கையிலெடுத்துக் கொண்டு பாண்டிய இராசனிடம் நீதி கேட்கச் சென்ற வேகத்தை நான் சின்னத்தங்கத்தின் நடைவேகத்தில் கண்டேன். மிகவும் ஆவேசத்தோடு அவள் கச்சேரியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள். ★

(யாவும் கற்பனை)

# மருத்துவமனையில் பிறந்த 18 மலைப்பாம்புக்குட்டிகள்

கர்நாடக மாநிலத்திலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் 14 அடி நீளமுள்ள மலைப்பாம்பு ஒன்று இட்ட 18 முட்டைகளிலிருந்தும் குட்டிகள் வெளிவந்துள்ளன.

தென் கன்னட மாவட்டம் மூடுபித்ரேயில் டாக்டர் மோகன் அல்வா என்பவரின் மருத்துவமனையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

மருத்துவமனையில் பள்ளம் வெட்டப்பட்டு மலைப்பாம்பும் அதன் 18 முட்டைகளும் வைக்கப்பட்டன.

62 நாள்களுக்குப் பின் முட்டைகள் பொரித்தன. 18 குட்டிகளும் ஆரோக்கியமான நிலையில் உள்ளன. அவற்றை வளர்த்து முட்டையிட வைத்து அதன் குட்டிகளை வனப்பகுதிகளில் விட்டுவிட விரும்புவோரிடம் 18 குட்டிகளையும் வழங்க விரும்புவதாக ஆல்வா கூறினார். ★

# ஒரு பிஞ்சின்...

(V ஆம் பக்கத் தொடர்)

வாழ்வை என்னாலையே தாங்க முடியாமல் இருக்கு. அம்மா எப்படித் தாங்குவா?

நான் கெதியா வளந்து, அம்மாவின்ரை கஷ்டத்தை குறைக்க வேணும்.

இண்டைக்கு எங்கட நாட்டிலை, அப்பாக்கள் காணாமல் போன அம்மாவையள் எல்லோரும் தங்கட பிள்ளையளுக்கு சாப்பாடு போட வழியில்லாமல், உடுப்பு வாங்கிக்குடுக்க, படிப்பிக்க வசதியில்லாமல் எவ்வளவு கஷ்டப்படுவினம்?

காணாமல் போனவை உயிரோடை இருக்கினமோ, இல்லையோ எண்டு தெரியாமல் குங்குமத்தை நெத்தியிலை போடவும் முடியாமல், போடாமல் இருக்கவும் முடியாமல் எத்தினை அம்மாக்கள் வேதினையிலை துடிச்சுக் கொண்டிருப்பினம்?

நாங்கள் யாரிட்டை போறது? யாரை கேட்கிறது? ஒருத்தருமே பதில் சொல்ல மாட்டினமோ?

ஆடி அமாவாசை அண்டைக்கு கண்ணன் தன்ரை அப்பாவுக்காக விரதம் இருந்து கோயிலலைபோய் அர்ச்சனை எல்லாம் செய்தவன்.

இனிமேல் நானும் அப்பாவுக்காக ஆடி அமாவாசையிலை விரதம் இருக்க வேணுமோ...?

சீ...நான் ஏன் இப்பிடி நினைக்கிறேன்? அப்பா இல்லாதது எல்லாமே குழப்பமா கிடக்கு. என்ரை மனதிலை இருக்கிற கேள்விகளுக்கெல்லாம், யாரிட்டை பதில் கிடைக்குமெண்டு தெரியேல்லை.

நான் அப்பாவை நினைச்சு அழுகிறநேரம் எல்லாம் "எங்கடை அப்பா நிச்சயம் ஒருநாள் எங்களிட்டை வருவார். அவருக்கு ஒண்டும் நடக்காது. நீ, அழாமல் கவனமா படிகுஞ்சு" என்று என்னை அணைச்சு அம்மா ஆறுதல் படுத்துவா.

பிறகு ஏன் தான் மட்டும் அடிக்கடி அழுகிறா எண்டு எனக்குத் தெரியேல்லை.

கலங்கிற கண்களோடை தம்பியையும் என்னையும் அம்மா பார்க்கிற நேரம் "நான் உங்களுக்காகத்தான் உயிரோடை இருக்கிறன். என் எதிர்காலமே நீங்கள் தான். நான் உங்களுக்காக படுகிற கஷ்டத்தை உணர்ந்து நல்ல பிள்ளையளாய் வளர வேணும்" எண்டு அந்த கண்கள் எங்களை கெஞ்சுகிற மாதிரி இருக்கும்.

நான் வளர்ந்து படித்து வேலை பார்க்கும் வரை அம்மாஎவ்வளவுகஷ்டங்களை தாங்க வேணும். எப்பிடித் தாங்கப் போறா?

நல்லவர்களைக் கடவுள் காப்பாற்றுவார் எண்டு அம்மா சொல்லுறா. பிறகு ஏன் எங்களுக்கு இவளவு கவலைகள்? என்ரை அப்பா எவ்வளவு நல்லவர். அவரை ஏன் கடவுள் காணாமல் போகவிட்டவர்?

கலர் கலரா...அழகழகா... பூத்திருக்கிற பூக்களைப் போல, எப்பவுமே கலகலத்து பறந்து திரியுற பறவைகளைப் போல, எந்தக் கவலையும் இல்லாமல் துள்ளித் திரியுற இந்தச் சின்ன வயதிலை... அப்பாவை பிரிஞ்சு எதை எதையோ நினைச்சு... என்னை ஏங்கி அழவிட்ட கடவுள் மேலை கோவம்கோவமா வருகுது...

"அண்ணா... அப்பா... பாப்பம்...வா" என்று என் கையைப் பிடிச்சு குட்டித் தம்பி இழுக்கிறான். அப்பா காணாமல் போன நாள் தொடக்கம் வாசலில் நிண்டு "அப்பா வாறார்...அப்பா வாறார்" என்று பாட்டுப் பாடியபடியே எட்டி எட்டி றோட்டைப் பார்த்துக் கொண்டிருக்கும் என் தம்பியைப் பார்க்கத் துக்கம் துக்கமா வருகுது.

எழுந்து சுவாமி அறையை நோக்கி ஓடுகிறன். பிள்ளையாரை முறைச்சுப் பாக்கிறன்.

எப்பவுமே மாறாத அன்பு பொங்கும் முகத்தோடை பிள்ளையார் என்னைப்பார்த்துச் சிரிக்கிறது போல இருக்கு.

"அப்பனே கலங்காதை. உன் அப்பா உன்னிடம் விரைவில் வருவார்"—என்று அவர் சொல்லாமல் சொல்லுறாரோ?

விரக்தியும் ஏமாற்றமும் நிரம்பியிருந்த என் மனதில் நம்பிக்கை நிறையுது.

"என்ர பிள்ளையாரப்பா, என்ரை அப்பா இல்லாமல் எங்களாலை சந்தோசமா வாழேலாது. என் அப்பாவை உயிரோடை எங்களிட்டைக் கொண்டுவந்து சேர்த்துவிடு. மற்றது, நான் இந்த முறை ஸ்கொலசிப் சோதினையிலை பாஸ் பண்ணவேணும். நான் பாஸ் பண்ணினால் என்ர அம்மா கொஞ்சம் எண்டாலும் சந்தோசமா இருப்பா. என்ர அம்மாவின்ரை சந்தோசத்துக்காகவாவது என்னை பாசாக்கிவிடு."

"என்ர இந்த வேண்டுதலை நீ நிறைவேற்றி வைக்காட்டி நீ கடவுளே இல்லை. வெறும் கல்லுத்தான்."

சுவாமிக்குமுன்னால் நின்று அழுதுகொண்டிருந்த என்னை எதுவும் புரியாத திகைப்புடன் கண்களை விரித்தபடி அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்த தம்பி, "அண்ணா அழாதை வா... அப்பா...பாப்பம்" என்று தனது வழமையான இடத்துக்கு இழுத்துக் கொண்டு போகிறான்.

கண்களில் வழியும் நீரை துடைத்தபடி நான் அவன் பின்னே செல்கிறேன்.

இங்கே இரு பிஞ்சுகள் அப்பாவுக்காக வழிபார்த்து காத்திருக்கின்றன.

அப்பா ஒருநாள் நிச்சயம் வருவார்.

(யாவும் கற்பனை)

# இந்த வார இராசி....

(VIII ஆம் பக்கத் தொடர்)

**கன்னி:** உங்களுக்கு எதிலும் ஒரு சட்டதிட்டம் இருக்கும். ஓடி ஓடிக் காரியமாற்றுவீர்கள். அங்கேயும், இங்கேயும் உங்களைக் காணலாம். பலவிதகற்பனைகள் உருண்டோடியபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் அதிக உழைப்பு, பொருள் உயர்வுக்காகப் போராடியபடி இருப்பீர்கள். உடல் சோர்வு, களைப்பு, நெஞ்செரிவு, வாய்வுத்தொல்லை, சளி, நாரிநோ, நரம்புத்தளர்ச்சி, வாத உளைவு என்பன கொடுக்கலாம். எதிர்ப்பாலாருடன் நிதானமாக நடந்து கொள்ளவும். எவருக்கும் கடமைப்படாது வாழ முற்படுங்கள். இக்காலத்தில் உங்களை எல்லோரும் குறைசொல்வார்கள். ஆயினும் நீங்கள் நல்லதையே செய்தபடி இருப்பீர்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

**துலாம்:** அவசர, அவசரமாக ஓடியாடித் திரிந்து கொண்டிருக்கும் நீங்கள் ஏன் அமைதியாக இருக்கின்றீர்கள்? எதிலும் ஒரு சலிப்பா? எந்த அலுவலும் உடனே நிறைவேறவில்லையே என்ற ஆதங்கமா? தொழில் ஸ்தானத்தில் ஒரு மந்தநிலை. எதிரிலிருப்பவர்களில் ஒரு சந்தேகப் பார்வை. மேலதிகாரிகளுடன் கருத்து வேற்றுமை என்று காலம் போகும். அழகுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் நீங்கள் அமைதிக்கும் கொடுங்கள். எதிலும் ஓர் ஆழ்ந்த உணர்வு மிக்க இரசிப்புத் தன்மை ஆட்கொண்டிருக்கும் காலமாகும். எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமை ஏற்படும். வயிற்றுப் பெருமல், கைகாலில்கடி, தலைவலி, சளி, மலம் சம்பந்தமான வருத்தங்கள், வாய்வுச் சேட்டைகள் என்பன இருக்கும். பொதுத்தொண்டுகளால் அதிக நன்மையும், புகழும் கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

**விருச்சிகம்:** கட்டுமீறிய செலவு — கழுத்துவரை வந்துவிட்டது. ஆனால் நீங்களோ தெரிந்தும், தெரியாதவர் போன்று இருக்கின்றீர்கள். எதையும் தைரியத்துடன் எதிர்கொண்டு போராடத் துடிக்கும் தன்மை ஏற்பட்டபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் அமைதியாக இருந்து அளந்தறிந்து செயற்படுவீர்கள். கிருமித்தாக்கம், இருதயம், முதுகுவலி, சிறுசிறு காயங்கள், உஷ்ணபீடைகள், தலைவலி, களைப்பு என்பவற்றால் வருந்த நேரலாம். தெய்வ வழிபாடு முக்கியமாகும். ஏழைகளுக்கு அடிக்கடி உதவுங்கள். வாகனம் அல்லது குடும்பத்தினரின் சொத்து, பொருள்களில் அவதானமாக இருக்கவும். அல்லது சட்டமுறைத் தாக்கங்கள் வர இடம் உண்டு.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

**தனுசு:** உங்களைத் தேடித் தேடி வந்து உதவி பெற்றவர்கள் எல்லோரும் நீங்கள் கூப்பிடும் இக்காலத்தில் ஓடி ஒளிப்பார்கள். குடும்பத்தில் எதிர்ப்பாலாரால் அடிக்கடி கருத்து வேற்றுமைகள் வரச் செய்யும். தொழில் ஸ்தானத்தில் பல பிரச்சினைகள் உருவாகலாம். மேலதிகாரிகளுடன் பகை ஏற்படும். நண்பர்கள் உதவி செய்வார்கள். உங்களைச் சுற்றி உள்ளவர்கள் உங்களுக்கு உதவி செய்வார்கள் என நம்ப வேண்டாம். கைகால் வலி, உஷ்ண பீடைகள், சளித் தொல்லை என்பன இருக்கும். உங்கள் தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி நன்மை காண்பீர்கள். எந்த விஷயங்களையும் நாலுபேருடன் கதைத்து முடிவு எடுப்பீர்கள். அதனால் குடும்பத்தில் அடிக்கடி எதிர்ப்புக்கள் ஏற்படலாம்

★ அதிர்ஷ்டநாள்: ஞாயிறு, புதன்.

**மகரம்:** நீங்கள் திட்டம் போட்டு — புதிய காரியமொன்றில் ஈடுபடப் போகிறீர்கள். குடும்பத்தில் எதிர்ப்பாலாரின் எதிர்ப்புக்கள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் ஊக்கமாக இருங்கள். ஊக்கத்திற்குத் தகுந்த முன்னேற்றங்கள் ஏற்படும். ஆடம்பரத்தால் எல்லாக்காரியங்களையும் செயற்படுத்த முடியாதே. பிறர் குறை சொல்வார்களாம். சொல்லட்டுமே. எவரிடத்தில் குறை இல்லை? அதற்காக உங்கள் செயற்பாடுகளைத் தாமதப்படுத்தாது செயற்படுத்தியபடி இருங்கள். வயிற்றில் நோ, நரம்புப் பலவீனம், கைகால் தாக்கங்கள், உளைவுவிறைப்புக்கள், உஷ்ணபீடைகள் என்பன கொடுக்கும். மெல்ல மெல்ல அமைதியான போக்கால் உங்கள் செயற்பாடுகள் ஆணித்தரமாக இருக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

**கும்பம்:** எந்த விஷயத்தையும் மிகவும் நுட்பமாகவும், உணர்ச்சி பூர்வமாகவும் சிந்திக்கும் இயல்பு கொண்டவர்கள் நீங்கள். தொழில் ஸ்தானத்தில் குறைகள் ஏற்படலாம். பொருள் செலவுகள் அதிகரிக்கும். அரசியலில் அதிக அபிப்பிராயங்களை அல்லது பேச்சுக்களைப் பேசியபடி இருப்பீர்கள். இடமாற்றங்கள், வீடு மனைத் திருத்தங்களால் செலவுகள் கொடுக்கும். நண்பர்கள், பெரியவர்கள் உதவி செய்வார்கள். எதையும் திடீர், திடீர் என முடிக்க வேண்டும் எனச் சிந்தித்தபடி இருப்பீர்கள். தெய்வவழிபாடு செய்து வாருங்கள். மனம் அமைதியாகும். உடல் ஆறுதல் அடையும். ஏழைகளுக்கு தானதர்மம் செய்து வரவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

**மீனம்:** எதைத் தொட்டாலும் மனத் திருப்தி இல்லை. எல்லாம் அரைகுறையாகப் போகிறது. விதிவழிச் செல்லும் இயல்பும், நண்பர்களால் ஏமாற்றமும், மனப் போராட்டத்தைக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றது. தொழில்ஸ்தானத்தில் செலவுகள் அதிகரிக்கும். சுற்றி இருப்பவர்கள் அதுக்கு, இதுக்கு என காசு கேட்டுத் தொந்தரவு கொடுத்தபடி இருப்பார்கள். மனம் இப்படிச் செய்வோமோ? அப்படிச் செய்வோமா எனப் போராடியபடி இருக்கும் காலமாகும். கட்டுப்பாடும், அமைதியும் வேண்டும். சளி, கைகால் வலி, நாரிநோ, அதிக யோசனை, சிறு சிறு காயங்கள், முழங்கால், முழங்கை மூட்டுவலி என்பன இருக்கும். குடும்பச் செலவைக் கட்டுப்படுத்துங்கள். அந்நியரால் உதவிகள் கிடைக்கும் காலமாகும். குலதெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகதிகள் கப்பல்...

(11 ஆம் பக்கத் தொடர்)

லுள்ள பிரதேச செயலகங்கள் தத்தமது பகுதிகளில் அபிவிருத்திப்பணிகளைத் தொடங்கி விட்டன. ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் பலவும் அரைகுறையாக இருக்கும் இவ்வேளையில் அவற்றை நிறுத்துமாறு மாகாண சபையிலிருந்து பணிப்புரை வந்திருக்கிறது!

வடக்கு — கிழக்கு மாகாணத்தின் பிரமாண அடிப்படையிலான வேலைத்திட்டங்களுக்கென திறைசேரி 17 கோடியே 90 லட்சம் ரூபாவை ஒதுக்கியிருந்தது. எனினும் கடந்த ஜூலை மாத இறுதி வரை ஒரு கோடி ரூபா மட்டுமே அந்நிதியிலிருந்து மாகாணசபைக்குக் கிடைத்திருக்கிறது. இதனைத் தொடர்ந்தே மாகாண சபை யாழ்ப்பாணத்திலுள்ள பிரதேச செயலகங்களில் தொடங்கப்பட்டுள்ள பணிகளை நிறுத்துமாறு பணித்துள்ளது.

கொழும்பு அரசாங்கத்தின் இந்த 'தாராள' நடைமுறையால் குடாநாட்டிலுள்ள பிரதேச செயலகங்கள் மிகவும் தர்மசங்கடத்துக்கு ஆளாகியுள்ளன. மாகாண சபையை நம்பி ஏற்கனவே தொடங்கப்பட்ட பல வேலைகள் ஒப்பந்த அடிப்படையிலேயே செய்யப்பட்டன. அந்த வேலைகள் அரைகுறையான நிலையில் உள்ள வேளையில் (நிதியின்மையால்) நிறுத்தப்பட்டுள்ளதால் இதுவரை செய்த வேலைகளுக்கு ஒப்பந்தகாரர்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்வதற்குப் பணத்துக்கு எங்கே போவது என்று பிரதேச செயலாளர்கள் திணறுகிறார்கள்; கையைப் பிசைகிறார்கள்.

திறைசேரியில் பணமில்லை; அரசின் நிதிவளம் குறைகிறது என்றபோதெல்லாம் கைவைப்பதற்கு இருக்கவே இருக்கின்றன தமிழ்பகுதியின் அபிவிருத்தி வேலைகள். 'பாதுகாப்புக்காரணம்' கருதி தமிழ்மக்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் கண்டபடி வீட்டிலும், வீதியிலும், ஆலயத்திலும், அலுவலகத்திலும் கைது செய்யப்படுவது தாராளமாக நடைபெற்று வருகிறது. அந்தப் பாணியிலேயே நிதிப்பற்றாக்குறை' என்ற காரணங்காட்டி தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்தி வேலைகள் திடீர் திடீரென ''கைது'' செய்யப்படுகின்றன;

அரசாங்கத்தின் ஆணைக்குள் வந்து விட்ட சிவில் நிர்வாகத்துக்குள் உட்பட்டு விட்ட குடாநாடு, மக்களுக்குத் தேவையான வசதிகளிலாவது தலையைச்சற்றே உயர்த்திப் பார்க்கும் என்று இருந்த நம்பிக்கையை அரசாங்கம்நிவாரணம் வெட்டு, அபிவிருத்தி வேலை நிறுத்தம் போன்ற தனது செயற்பாடுகள் மூலம் இழக்கச்செய்து வருகிறது.

மொத்தத்தில் ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடி கண்ணே! உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் உறவு — என்பன தமக்கு உரிமைகளை மட்டுமல்ல வசதிகளைத்தானும் அரசு வழங்காது என்ற முடிவுக்கு தமிழர்களை இட்டுச் செல்லும். அரசாங்கம் இது குறித்து ஆழ்ந்து சிந்திக்குமாக!

யாழ்ப்பாணத்தின் மக்கள் வாழ்க்கை நிலை மேம்பட்டு வருகிறது; அவர்களுக்குப் பல வசதிகள் செய்யப்படுகின்றன என்பதைச் சொல்வதில் அரசாங்கத்துக்குப் பெருமகிழ்ச்சி. அதனால் அந்தச் செய்தியை வெளிஉலகுக்கு சொல்லக்கூடியவர்களை இங்கு அனுப்பி வருகிறது.

அந்த வரிசையில் கொழும்பில் சார்க் மாநாடு முடிந்த கையோடு டசின் கணக்கான பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

பத்திரிகையாளர்களுக்கே உரிய புதியன — புதினம் — கண்டறியும் ஆவலுடன் அவர்கள் ஒரு நாளில் யாழ்ப்பாணத்தைச் சுற்றிப் பார்த்துத் தமக்குத் தேவையான தகவல்களை அவசர அவசரமாகச் சேகரித்துச் சென்றனர். அவர்கள் கொழும்பு அரசாங்கம் விரும்பியதையே எழுதுவார்களா, அல்லது மாறுபட்ட கருத்துக்களை முன் வைப்பார்களா என்பது அவர்கள் பணி செய்யும் பத்திரிகைகள் கையில் கிடைத்த பின்னர்தான் தெரியும்.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களின் விஜயத்தைத் தொடர்ந்து வெளிநாடுகளுக்கு இலங்கைத் தூதுவர்களாக அண்மையில் நியமிக்கப்பட்ட நால்வர் யாழ்ப்பாணம் வந்து சென்றனர். தமது பணியை குறிப்பிட்ட நாடுகளில் தொடங்குவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தைப் பற்றி இவர்கள் அறிந்திருக்க வேண்டும் என அரசு விரும்பியது.

ஒருவர் ஒரு மொழியைப் பயின்று அதன் மூலம் தனது கருத்தை வெளியிடுவதற்கு மிகவும் அவசியமானது அந்த மொழியின் இலக்கணம். அதேபோன்று வெளிநாடுகளில் இலங்கை அரசின் பிரதிநிதிகளாக இருக்கப் போகின்றவர்களுக்கு யாழ்ப்பாணம் மிகவும் அவசியமான இலக்கணமாகி விட்டது. அதனால் நான்கு புதிய தூதுவர்களும் யாழ்ப்பாணத்தில் ஒரு குறுகிய கால 'கல்விச்சுற்றுலா'வை நடத்திப் பல தகவல்களைத் தமக்குள் சேகரித்துச் செல்கிறார்கள், போலும். ★

## விடைகள்

IV ஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:—

### மூளைக்கு வேலை

(1) ஒருவர் தனக்குத்தானே அழகாகத் தலைமயிர் வெட்டிக் கொள்ளமுடியாது. கிராமத்தில் இரண்டே இரண்டு நாவிதர்கள்தான் இருப்பதால் அழகாகத் தலைமுடி வைத்திருக்கும் நாவிதருக்கு அழுக்கு நாவிதர்தான் தலைமயிர் வெட்டியிருக்க வேண்டும். எனவே நான் செய்தது சரிதான்.

(2) அ) சாத்தியக் கூறு உண்டு.
ஆ) சாத்தியக் கூறு உண்டு.
இ) சாத்தியக் கூறு இல்லை
ஈ) சாத்தியக்கூறு உண்டு.

### உங்களுக்குத் தெரியுமா?

1) விசுவாசம். 2) சந்நிதானம். 3) நிவாரணம். 4) நிவேதனம். 5) செங்கமலம். 6) விகாரம். 7) சேமலாகா. 8) பிரமாதம்.

## அமெரிக்காவை..

(IX ஆம் பக்கத் தொடர்)

டங்களுக்கு குறைந்தால் நல்லது'' என்று கூறினாலும் —

சில பழசுகள்... ''என்னது ...நேரத்தைக்குறைப்பதா...? 30—40 வருடங்கள் எல்லாம் மறந்திருந்த எமக்கு மீண்டும் நினைவு வரவே 2 மணி நேரமாகிறது... மேலும் ஒரு மணி நேரம் கூட்டினால் நல்லதென்று பார்க்கிறோம்.''— என்கின்றனர்.

எது எப்படியோ......இன்னும்...'வயக்ரா' அமெரிக்காவை விட்டு வெளியே வரவில்லை. இந்தமாதத்தில் ஐரோப்பிய, ஆபிரிக்க நாடுகளை நோக்கி அது பயணிக்கப் போவதாகத் தகவல். இந்த வருடக் கடைசியில் இலங்கை, இந்தியா, சிங்கப்பூரை எட்டலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகவே இதனை வாங்கிப் பாவிப்பவர்களுக்குப் போதிக்கும் நீதியென்னவென்றால்—

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் ஆங்கில மருந்து விற்பனையாளர்களிடம் இப்போது போய் ''பழுதடைந்த மருந்தை விறகிறீர்கள்! விலை கூட்டி விற்கிறீர்கள்!'' என்றெல்லாம் சண்டை பிடிக்காதீர்கள்......ஏனென்றால் அவர்களிடம் 'வயக்ரா' விற்பனைக்கு வந்தால்...நீங்களும் போய் தலையைச் சொறிந்து கொண்டு நிற்கவேண்டி வரலாம். ★

# உடலும் உள்ளமும்...

(1 ஆம் பக்கத் தொடர்)

யும்போது சிந்திக்க வேண்டிய விடயங்கள் மேலும் பல உண்டு, மனதைப் பிழியும் துன்ப நினைவுகளில் இருந்து விடுபட முடியவில்லை என்றால் தாக்கம் பாரதூரமாக இருக்கும்.

சில நினைவுகள் விடுபடமுடியாதவாறு மீண்டும் மீண்டும் ஈ மொய்ப்பதுபோல மனதைச் சுற்றி வட்டமடித்துத் தொல்லை கொடுக்கின்றனவா? முயன்றும் அவற்றிலிருந்து விடுதலை கிடைக்கவில்லையா? சிக்கல்தான். எனவே விடுபட முயற்சியுங்கள்.

எரிச்சலூட்டும் அல்லது கோபமூட்டும் பெறுமதியற்ற சிறுசிறு விடயங்கள் உங்களுக்கே ஆபத்தானவை. அடுத்தவர் சோலிக்குள் தேவையில்லாமல் போய் மூக்கை நுழைக்கிறீர்களா? அப்படியானால் ஏதோ கோளாறு உங்களிடம் இருக்கத்தான் செய்கிறது.

மறதி அதிகமாக இருக்கிறதா? முக்கியமான விடயங்களைக்கூட மறந்துவிடுகிறீர்களா? எதிலும் கவனத்தை— கருத்தை—ஊன்ற இயலவில்லையா? களைப்பு அதிகமாக இருக்கிறதா? மனச்சோர்வுதான் காரணமாக இருக்கலாம். உற்சாகமாக இருந்தால் இவையெல்லாம் ஓடிவிடும்

பயம், நம்பிக்கையீனம், விரக்தி, மனச்சோர்வு என்பன உங்களை ஆள இடம்கொடுத்து விடாதீர்கள். உள்ளத்தை மட்டுமன்றி உடலையும் கெடுத்துவிடும் வலிமை கொண்டவை இவை. இதற்கெல்லாம் காரணமான அடுத்தவர்களைத் திருத்தித்தான் நீங்கள் நிம்மதி அடைய முடியும் எனப் பகற்கனவு கண்டுவிடாதீர்கள்.

உங்கள் வேலைத்தளம் எப்படி இருக்கிறது? அதுகூட வாழ்க்கையின் ஆரோக்கியத்தில் பிரதான பங்கை வகிக்கிறது. வேலையில் விருப்பத்துடன் ஈடுபடும்போது அது அதிகம் ஆளைப் பாதிப்பதில்லை. ஏதோ கடன் கழிப்பதாக — சுமையாக நினைத்து—வேலை செய்தால் அது ஆளை அறியாமலே மன அழுத்தத்தை வளர்க்கத்தான் செய்யும்.

உங்கள் உழைப்பு முழுவதும் அங்கேதான் இடம் பெறுவதால் அவ்விடம் மனதுக்கும் உடலுக்கும் சொகுசாக அமைவது அவசியமாகிறது. அங்கே பொறுப்புக்கள் அதிகம் என நீங்கள் கருதினால் அது சுமைதான். அந்த எண்ணம் ஏற்படாமலே நிறைய வேலைகளைக் கவனிக்கும்வரை பாதிப்பு இருக்காது.

செய்கின்ற வேலை அடுத்தவரைத் திருப்திப்படுத்தி அதற்கான பாராட்டும் கிடைத்துவிட்டால் மனதுக்குத் தெம்புதான். அதுவும் இல்லாதபோது விரக்தி மனதினை வாட்டும். தொடர்ந்து சிறப்பாகக் கருமம் ஆற்ற இயலாமற்போய் விடும்.

பலரிடமும் கட்டளைகளை ஏற்று பல கோணங்களுக்கும் விட்டுக்கொடுத்து வேலைசெய்ய வேண்டிய நிலமை ஏற்பட்டால் அது விரைவில் உடலையும் உள்ளத்தையும் பாதிக்கத்தான் செய்யும்

நீங்கள் விரும்பும் வகையில் முடிவெடுக்க வழியின்றி அடுத்தவர்களின் அழுத்தத்துக்கு விட்டுக்கொடுத்து வேலை செய்வது கடினமாகிறது. உங்கள் திறமைகளை அங்கே முத்திரை பதிக்க முடியாத முட்டுக்கட்டைநிலை ஏற்பட்டால் அதுவும் பாதிப்பைத் தரத்தானே செய்யும்?

உங்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப அடுத்தவர்கள் வேலைசெய்கிறார்கள் இல்லை என்ற உணர்வும்கூட மனதில் பாதிப்பைத் தருகிறது. சக ஊழியர்களுடன் நண்பர்களாக பழகி வேலையை ஆற்றும் சக்தி இல்லாதபோது வேலைப் பளு பெரிதாகவே இருக்கும்.

பிற மனிதர்களை அதிகம் காணமுடியாத ஓர் அலுவலகத்தில் கடதாசிகளுடனோ கணனிகளுடனோ, போராடிக் கொண்டிருந்தால்கூட வேலைச் சுமையாகிவிடும். அல்லது சமாளிக்க முடியாத அலைமோதும் கூட்டத்தைச் சந்தித்து எதிர்நீச்சல்போட்டு வேலை செய்வதும் கூட பாதிப்பையே தரும். அளவோடு நிதானமாக மனிதர்களோடு பழகிச்சிரித்து மகிழ்ந்து வேலை செய்யுமிடம் சிறப்பானது.

தினம் தினம் புதிய சவால்களை எதிர்கொள்ளும் இடத்தில் வேலை பார்ப்பது கடினம். மனதை அதிகம் பக்குவப்படுத்திவிடல் வேண்டிய நிலைமை ஏற்படும். அங்கே சக்தி இழந்த — அதிகாரம் அற்ற — நினைத்ததைச் சாதிக்கமுடியாத — ஒருவராக நிலைப்பது கடினம்.

வேலைத்தலத்திலே — நீங்கள் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான மாதிரி — எதையோ செய்ய நினைக்க— அது ஏதோ பிரச்சினையில் போய் முடிந்துவிடலாம். அதுதான் உங்கள் தலைவிதி என்றால் மனது பாதிக்கத்தான் செய்யும்.

இப்படியான சிக்கல்களில் இருந்து எப்படி விடுபட முடியும் எனச் சிந்திக்கிறீர்களா? அது நல்லது.

அழுதும் பிள்ளையை அவள்தான் பெற வேண்டும் என்பார்கள். அவரவர் மனச்சுமைகளைத் தன் வலிமையால்தான் தான் வெல்லல் வேண்டும். அதற்குரிய மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ளவும் வேண்டும்.

இயலாமை சினமாக வெடிக்கவிடாமல் பார்த்துக் கொள்ளுவது மிகப் பிரதானமானது. அடிக்கடி தனக்குத் தானே சொல்லிச் சொல்லி நிதானப்படுத்திக் கொள்ள வேண்டும். தவறினால் பதற்றம் இரத்த அழுத்தத்தைத் தரும். உடலைப் பதற வைக்கும்.

தேவையில்லாமல் அடுத்தவர்களின் மனதுக்குள் புகுந்து ஆராயவோ — அவர்களைச் சந்தேகிக்கவோ பழகக் கூடாது. இப்படியான எண்ணங்கள் உங்களுக்குத்தான் அமைதியின்மையைக் கொடுத்துக் கெடுக்கும். இதனால் லாபம் ஏதும் கிட்டப்போவதில்லை. அடுத்தவரின் உள்ளத்தின் உள்ளே இருப்பதை உள்ளபடி அறிந்து விடுதலில் வெற்றி கிட்டுவதும் இல்லை.

வெளியே தெரிவதை ஏற்றுக் கொண்டு நம்பிநடக்காமல் நம்ப நடக்க முயலுங்கள். அவர்களும் அப்படியே நடக்க முனைந்தால் அலட்டிக் கொள்ளாமல் உங்கள் ஆரோக்கியத்துக்காக விட்டுக்கொடுங்கள்.

நீங்கள் தினசரி சந்திக்கும் பிரச்சினைகளை இயன்றவரை இயன்ற விரைவில் சுமுகமாகத் தீர்க்கவே முயலுங்கள். விடுத்து அவற்றைப் பெரிதுபடுத்தவோ அல்லது மேலும் புதிய பிரச்சினைகளை உருவாக்கவோ வேண்டாம்.

மனதை அழுத்தும் துயரமான விடயங்களை மூடி மூடி வைத்து மூழ்காமல் திறந்து பேசிச் சிரித்து வாழப் பழகிவிட்டால் சுமை குறைந்துவிடும். நேர்மையாகவும் திறந்த மனதுடனும் எவரும் அணுகக்கூடிய தன்மையுடனும் வாழப் பழகி விடுங்கள்.

உங்கள் உடல் ஆரோக்கியத்துக்கும் மனநிலைக்கும் நிறையவே தொடர்பு இருக்கிறது என்பதை அனுபவத்தில் கண்டிருக்கிறீர்களா? அதே போல உங்கள் நாளாந்த செயற்பாடுகளுக்கும் உடல்நிலைக்கும் கூட தொடர்பு இருக்கத்தான் செய்கிறது.

(தொடரும்)

# முதிர்ப்பருவத்தினர் முனைப்பு...

(III ஆம் பக்கத் தொடர்)

லது: உண்மையான காதல் மூலம் ஆண்—பெண் கைபிடித்துக் காரியம் யாவும் கைகொடுக்கமுன்வரும்போது எந்தச் சக்தியும் தடைவிதிக்கலாகாது, அப்படித் தடைவிதித்தால் இருவரின் வாழ்வுமே சிதைந்துவிடும். ஆண் நல்ல வசதியும் வாய்ப்புமுடையவராயிருந்தால் வரப்போகும் பெண் தொழில் செய்யாது குடும்பப் பெண்ணாக வீட்டிலிருப்பதே நலம். ஆண் வசதியற்றவராயிருந்து வரப்போகும் பெண் தொழில்பார்ப்பவராயிருந்தும் தான் வீட்டிலேயே இருந்து வறுமையிற் செம்மையாய் வாழப்போகிறேன் என்றாலும் அனுமதி அளிப்பதே நலம். ஆண் விரும்பினால் மனைவியைத் தொழில் செய்ய அனுமதிக்கலாம். சில பெண்களின் சேவை பொருள் வருவாய்க்கல்லாமல் சமூகத்திற்கு அவசியமாகத் தேவையென்றால் குடும்பத் தலைவர்கள் பெருமனதோடு அதை அனுமதிக்கலாம், இருவரும் தொழில் செய்வதென்பது வீட்டிற்கு வெளிச்சத்தைத் தராது. யாரோ ஒருவர் சற்று ஏறுமாறாக நடந்தால் கூறாமற் சந்நியாசம் கொள்ள வேண்டி வரும்: அல்லது குடும்பம் குலைய நேரிடும்.

செல்வக் களஞ்சியங்களான பிள்ளைகளைப் பராமரித்து, உள்ளொளி கிளர்த்தி, ''[illegible]'' நாடாளும்மை'' என்ற இலக்கணத்தை நிருபணமாக்காவிட்டால் ''என்ன பயக்குமோ சால்பு.'' நல்ல தாய்மைதான் ஒரு பெண்ணிற்குத் ''திமிர்ந்த ஞானச் செருக்கைத்'' தரும் என்பதை ஏற்காத பெண்கள் ஏற்கப்படாதவர்களே. எனவே திருமணத்தெரிவு ஒரு விபத்தை உண்டுபண்ணாமல் ஒரு வலுவுள்ள எதிர்காலச் சந்ததியை உண்டுபண்ணுவதாக அமையட்டும்.

''தன்னைத்தான் காதலன் ஆயின்
எனைத்து ஒன்றும்
துன்னற்க தீவினைப் பால''
— குறள்

ஒருவன் தன்னைத்தான் விரும்புவனாக இருந்தால் தன்னை நல்ல முறையிலே வழிநடத்திச் செல்லுதல் வேண்டும். தீயவழியில் எதனையும் சிந்தியாமலும் செய்யாமலும் ''தன் வினைதன்னைச் சுடாமலும்'' வாழ் வாங்கு வாழுதல் வேண்டும். முக்கியமாக முதிர்பருவத்தில் உள்ளவர் இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குதல் சாலவும் பொருந்தும். எனவே முதிர் பருவத்தினரது முனைப்பும் அதன் விளைவுகளும் அதிஉச்சமான பயன்பாட்டை சமுதாயத்திற்குத் தருமானால் எல்லோரும் வாழ்வர். இன்பமே சூழும்.

''நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே—''
ஔவையார் (புறநானூறு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கனவான் ஒப்பந்தம்" மூலம் பிரச்சினையை தீர்க்க முயலும் வாஜ்பாய்!

## காவிரியில் அரசியல் புகுந்ததே நிலைமை மோசமடையக் காரணம்

காவிரிப் பிரச்சினை சம்பந்தமாக இம்மாதம் 6ஆம் 7ஆம் திகதிகளில் புதுடில்லியில் நடைபெற்ற மாநாட்டில் இணக்கம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 30 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் நான்கு மாநிலங்களின் முதலமைச்சர்களிடையே புதுடில்லியில் தற்போது ஏற்பட்டுள்ள இணக்கம் ஒரு மைல் கல் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

தமிழக முதல்வர் கருணாநிதி, கர்நாடக முதல்வர் ஜே. எச். படேல் மற்றும் புதுவை, கேரள, மாநில முதல்வர்களை அழைத்துப் பிரதமர் அடெல் பிஹாரி வாஜ்பாய் மாநாடு நடத்தி இருந்தார்.

காவிரிஆறு கர்நாடகத்தில் உற்பத்தியாகி தமிழ்நாடு, கேரளம், புதுவை ஆகிய மாநிலங்களூடாகச் செல்கின்றது.

கர்நாடகம் தனக்குத் தேவையான முழு அளவு நீரைப் பெறும் நோக்கத்துடன் நீர்த்தேக்க அணைகளைக் கட்டி ஏனைய மூன்று மாநிலங்களுக்கும் போகும் நீரைக்கட்டுப்படுத்த முயன்றதாலேயே காவிரிப் பிரச்சினை உருவானது.

இதில் பெரிதாகப் பாதிக்கப்பட்ட மாநிலம் தமிழ்நாடுதான்; ஆகவே காவிரிப் பிரச்சினை உண்மையில் தமிழ்நாட்டுக்கும் கர்நாடகத்துக்கும் இடையிலான பிரச்சினைதான்.

விவசாயத்திலேயே பெரும் அளவில் தங்கி உள்ள கர்நாடக, தமிழ்நாடு மாநில மக்களின் உயிர்நாடி பாசனத்துக்குத் தேவையான தண்ணீராக இருப்பதால், காவிரிப் பிரச்சினை அந்த இரு மாநில மக்களின் உணர்வுகளைத் தூண்டும் அளவுக்கு பெரும் பிரச்சினையாக உருவெடுத்து வந்தது; மாநில அரசுகள் மட்டும் அல்ல மத்திய அரசுகளும் கடந்தகாலங்களில் நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்தன.

### 4 அம்சங்களில் இணக்கம்

புதுடில்லியில் வாஜ்பாய் தலைமையில் நான்கு மாநிலங்களின் முதல்வர்களும் கலந்துகொண்ட மாநாட்டில் பின்வரும் விடயங்களில் இணக்கம் காணப்பட்டது.

★ காவிரி நடுவர் மன்ற இடைக்கால தீர்ப்பை அமுல் செய்வது.

★ இத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், புதுவை ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய ஆணையம் ஒன்றை ஏற்படுத்துவது.

★ ஆணையத்தின் கீழ் மத்திய அரசு மாநில அரசுகளால் நியமிக்கப்படும் கண்காணிப்புக்குழு ஒன்றை இயங்கவைப்பது.

★ கண்காணிப்புக் குழுவுக்குள்ள அதிகாரங்களை வகுப்பதற்கு குழு ஒன்றை நியமிப்பது.

### நடுவர் மன்றம்


1991 ஜூலையில் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பில் தமிழகத்துக்கு 205 டி. எம். சி. தண்ணீர் வழங்கும்படி கர்நாடகம் கோரப்பட்டது. எனினும் கர்நாடகம் அதனை அப்பொழுது ஏற்க மறுத்துவிட்டது. இடைக்காலத் தீர்ப்பைஅமுல் செய்வதற்கு தமிழ்நாட்டின் நிர்ப்பந்தத்தின் பேரில் ஏற்படுத்தப்பட்ட நதிநீர் ஆணையத்தையும் கர்நாடகம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆணையகத்துக்குப் பதிலாக ஒருங்கிணைப்புக் குழுஒன்றை நியமிக்கலாம் என்றே கர்நாடகம் கடந்த ஏழு ஆண்டுகளாகக் கோரிவந்தது.

தற்பொழுது முன்னைய நதிநீர் ஆணையகத்துக்குப் பதிலாக நான்கு மாநில முதல்வர்களும் அங்கம் வகிக்கும் ஆணையத்தை நியமிக்கவும்—

நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்புக்கு இணங்க 205 டி. எம். சி. நீரை தமிழ்நாட்டுக்கு வழங்கவும்—கர்நாடகம் இணங்கி இருப்பது கருணாநிதிக்கு குறிப்பிட்ட அளவு வெற்றி என்றே கூற வேண்டும்.

தமிழ்நாடு அரசு கலைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை இருப்பதால் மத்தியில் பாரதீய ஜனதா அரசை அனுசரித்து நடக்க வேண்டிய கடப்பாடு கருணாநிதிக்கு உண்டு.

புதுடில்லியில் நடைபெற்ற காவிரிப் பேச்சுவார்த்தைகளில் கருணாநிதி முன்னரைப் போன்று பிடிவாதமாக நடந்துகொள்ளாததுக்கு இதுவும் ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது.




ஆனால் மத்தியில் பாரதீய ஜனதா அரசுக்கு நெருக்கடி கொடுத்து வரும் கூட்டணிக் கட்சியில் முன்னணியில் இருந்துவரும் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. காவிரி நீர்ப்பிரச்சினையிலும் அரசுக்கு நெருக்கடி கொடுத்து வருகின்றார்.

அதுமட்டும் அல்ல. கடந்த சனிக்கிழமை சென்னை போயஸ் கார்டனில் நடந்த அ.தி.மு.வின் கூட்டணிக் கட்சிகளின் கூட்டத்தில் இது சம்பந்தமாக பாரதீய ஜனதா அரசுக்கு காலக்கெடுவும் விதிக்கப்பட்டது.

கடந்த இரு மாதகாலமாக அ.தி.மு.க கூட்டணியில் இருந்து விலகி இருந்த கோபாலசாமி தலைமையிலான ம.தி.மு.கவும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டது.

தமிழ் நாட்டில் தி.மு.க. அரசுமீது நெருக்கடியை ஏற்படுத்துவதற்கு ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கையை அ.தி.மு.க. எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் அதில் ஏமாற்றம் அடைந்ததால் காவிரிப் பிரச்சினையை தூக்கிப் பிடித்துள்ளார் ஜெயலலிதா.

தமிழ்நாட்டில் அ.தி.மு.க. கூட்டணி மட்டுமே காவிரித் தீர்வை எதிர்க்கின்றது.

### கண்காணிப்புக்குழு அதிகாரம் குறித்து முரண்பாடு

புதுடில்லிப் [illegible] ஆணையத்தின் [illegible] உள்ள கண்காணிப்புக்குழுவின் அதிகாரம் குறித்து கர்நாடக — தமிழ்நாடு முதலமைச்சர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன.

கண்காணிப்புக்குழுவுக்கு முழு அதிகாரமும் இருக்க வேண்டும் என்று கருணாநிதி வலியுறுத்தினார்; ஆனால் படேல் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இறுதியில் கண்காணிப்புக் குழுவின்கடமைகள், பணிகள், அதிகாரங்கள் குறித்து முடிவு செய்ய மற்றொரு குழுவை ஏற்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த குழு மத்திய அமைச்சரவைச் செயலர் தலைமையில் இயங்கும். இந்த நான்கு மாநிலங்களின் தலைமைச் செயலர்களும் குழுவில் அங்கம் வகிப்பர்.

எவ்வளவு காலத்துக்குள் இந்தக்குழு தனது பரிந்துரைகளை வழங்க வேண்டும் என்று வரையறை எதுவும் இல்லை.

அத்துடன் நான்கு மாநில முதல்வர்களையும் கொண்ட ஆணையம் எந்த ஒரு தீர்மானத்தையும் ஏகமனதாகவே செயற்படுத்த முடியும். ஒரு கனவான் ஒப்பந்தம் (Gentleman Agreement) என்றே வர்ணிக்கப்படுகிறது. கர்நாடக முதல்வரோ அல்லது தமிழ்நாடு முதல்வரோ ஒத்துழைக்கத் தவறினால் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமுல்செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டு விடும்.

### நூற்றாண்டு பிரச்சினை

காவிரிப் பிரச்சினை சுமார் ஒரு நூற்றாண்டு காலப் பிரச்சினை.

1890 ஆம் ஆண்டு அப்போதைய மைசூர் சமஸ்தானம் காவிரி நீரைப் பயன்படுத்தி புதிய பாசனத்திட்டங்களை ஆரம்பித்தது.

இதுவே காவிரிப் பிரச்சினையின் ஆரம்பம் என்று சொல்லலாம்.

தண்ணீரைப் பாதுகாப்பதற்காக கர்நாடகம் அணைகளைக் கட்ட ஆரம்பித்தது. தமக்குத் தேவையான தண்ணீர் தடைப்படவே தமிழ்நாடும் ஏனைய இரு மாநிலங்களும் எதிர்ப்புத் தெரிவித்தன.

இதன் [illegible] பேச்சுக்கள், ஒப்பந்தங்கள், ஒப்பந்த மீறல்கள், நீதிமன்றத்தீர்ப்புகள் என்று எத்தனையோ கட்டங்களைக் கடந்து தற்பொழுது நான்கு மாநில முதல்வர்களையும் கொண்ட ஆணையம் வாஜ்பாய் தலைமையிலான புதுடில்லி பேச்சில் அமைக்கப்பட்டுள்ளது.

### 1990 இல் முக்கிய திருப்பம்

இந்த நீண்டகாலப் பிரச்சினையில் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டதே முக்கிய திருப்பு முனையாகக் கருதப்படுகிறது.

நடுவர் மன்றம் அமைக்குமாறு தமிழ்நாடு அரசு நீண்டகாலமாக கோரிவந்தது. உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு ஒன்றை ஏற்று 1990 ஆம் ஆண்டு நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. இறுதித் தீர்ப்பு வழங்க நீண்டகாலம் எடுக்கும் என்று ஊகிக்கப்பட்டதால் இடைக்காலத் தீர்ப்பு வழங்கும்படி நடுவர் மன்றத்துக்கு உத்தரவு விடுமாறு தமிழ்நாடும் புதுவையும் உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தன.

இந்த மனுவை ஏற்று இடைக்காலத் தீர்ப்பை வழங்குமாறு உச்ச நீதிமன்றம் நடுவர் மன்றத்துக்கு உத்தரவிட்டது.

இதனை அடுத்து 1991 ஜூலையில் இடைக்காலத் தீர்ப்பை நடுவர் மன்றம் வெளியிட்டது.

205 டி. எம். சி. தண்ணீரை தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டும் என்பதே இடைக்காலத் தீர்ப்பில் உள்ள முக்கிய அம்சம் ஆகும்.


இந்த தீர்ப்பு தமிழ்நாட்டுக்குச் சாதகமானது என்று கூறி கர்நாடகத்தில் எதிர்ப்புகள் கிளம்பின.

தமிழ்நாட்டின் வற்புறுத்தல்கள் காரணமாக 1991 டிசெம்பரில் இடைக்காலத் தீர்ப்பை மத்திய அரசு வர்த்தமானியில் பிரசுரித்தபோது கர்நாடகத்தில் பெரும் கலவரம் மூண்டது. தமிழர்களின் சொத்துக்களுக்கு பெரும் சேதங்கள் விளைவிக்கப்பட்டன.

தமிழ்நாட்டிலும் கர்நாடக மக்களுக்குச் சொந்தமான உடைமைகள் தாக்கப்பட்டன. கலவரங்களில் இரு மாநிலங்களிலும் 170 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

வர்த்தமானி அறிவித்தலின் பின்பும் தமிழ் நாட்டுக்கு தண்ணீர்விட கர்நாடகம் தொடர்ந்து மறுத்து வந்தது.

நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவுக்கிணங்க 205 டி.எம்.சி. தண்ணீர் விடும்படி கர்நாடகத்துக்கு உத்தரவிடுமாறு 1993 ஆம் ஆண்டிலும் 1995 ஆம் ஆண்டிலும் உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு மனுக்களைதாக்கல்செய்தது.



வாஜ்பாய்

1996 இல் கருணாநிதியும் ஜே.எச். படேலும் இப்பிரச்சினை தொடர்பாக ஐந்து சுற்றுப் பேச்சுக்களை நடத்தியும் பயன் ஏற்படவில்லை. இனி பேச்சுவார்த்தை நடத்துவதே இல்லை என்று கருணாநிதி அப்பொழுது அறிவித்தார்.

### நதி நீர்ப் பங்கீடு

நதி நீர்ப்பிரச்சினை கர்நாடகத்துக்கும்தமிழ்நாட்டுக்கும் மட்டும் சொந்தமானது அல்ல.

ஏனைய மாநிலங்களிலும் இதுபோன்ற பிரச்சினைகள் இருந்து வருகின்றன.

சிந்து நதியின் கிளை நதிகளான சினாப், ஜீலம் நதிகள் தொடர்பாக ஜம்முகாஷ்மீருக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ஒப்பந்தமுள்ளது.

ஆந்திரா—கர்நாடக மாநிலங்களிடையே கிருஷ்ணா நதிநீர்ப்பங்கீடு தொடர்பான பிரச்சினை இருந்து வருகிறது; இதனைத் தீர்ப்பதற்கு பச்சாவத் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது.

நர்மதை ஆற்றுக்குமேலாக அமைக்கப்பட்டுவரும் சர்தார் சரோவர் அணைத்திட்டம் தொடர்பாக குஜராத்துக்கும் மகாராஷ்டிரத்துக்கும் இடையில் பிரச்சினை இருந்து வருகிறது.

யமுனா நதி நீரைப் பங்கிடுவது தொடர்பாக பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், டில்லி ஆகிய மாநிலங்களுக்கிடையில் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

### தீர்க்க முடியுமா?

காவிரிப் பிரச்சினையில் அரசியல் புகுந்ததாலேயே கடந்த காலங்களில் பிரச்சினையைத் தீர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

கடந்த காலங்களில் மத்தியில் பதவியில் இருந்த அரசாங்கங்களும் இதனைத் தீர்ப்பதில் அக்கறை காட்டவில்லை.

தற்பொழுது அ. தி. மு. க பொதுச் செயலாளர் ஜெயலலிதா டில்லியில் ஏற்படுத்தப்பட்டுள்ள கனவான் ஒப்பந்தத்துக்கு எதிராக போர்க்கொடி தூக்கி உள்ளார்.

முன்னைய தீர்வுத்திட்டத்தில் மாற்றம் செய்வதை அவர் கடுமையாக எதிர்க்கிறார்.

தற்பொழுது நான்கு மாநிலங்களின் முதல்வர்களையும் அழைத்துடில்லியில் வாஜ்பாய் ஏற்படுத்தி உள்ள இணக்கத்தையும் தீர்வு என்று கூறிவிட முடியாது.

நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமுல்செய்வதற்கான வழியை வாஜ்பாய் திறந்து விட்டுள்ளார்.

நடுவர் மன்றத்தின் இறுதிப் தீர்ப்பு வரும் போது புதிதாக என்னென்ன பிரச்சினைகள் கிளம்புமோ? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org